

நவராத்திரிச் சிறப்பிதழ் — 1970

# இந்து மாணவன்

# HINDU MANAVAN

இந்துக்கல்லூரி, இரத்மலானை COLOMBO HINDU COLLEGE, RATMALANA

University of Jaffna
373
COL
249992(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GREETING CARDS FOR ALL OCCASIONS

*When you care enough to send the very best....*
*Send Ceylon Pictorial Greeting Cards*

- BIRTHDAY CARDS FOR CHILDREN & ADULTS
- FUNNY CARDS FOR THE YOUNG AT HEART
- PARTY INVITATION CARDS
- SWEETHEART CARDS
- ANNIVERSARY CARDS
- A SUPERB SELECTION OF CHRISTMAS & NEW YEAR CARDS FOR THE SEASON
- A BEAUTIFUL RANGE OE CEYLON VIEW PICTURE POSTCARDS

## CEYLON PICTORIALS

2nd FLOOR, HEMAS BUILDING, YORK STREET, FORT, COLOMBO 1



*For the latest in*

- NECKLACES
- BANGLES
- EARRINGS
- RINGS

*Wonderfully worked out in genuine sovereign gold embodying the famous diamond-cut filigree work ....*
*A wide array of designs to choose from ....*

*Live it up .... go places .... with jewellery by*

## BULLION EXCHANGE

521, GALLE ROAD, BAMBALAPITIYA JUNCTION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவன் 1970

# INDHU MANAVAN.

இதழாசிரியர்

செல்வன் தி. ப. வைகுந்தன்

*Editor*

**Master T. P. Vaikunthan**

துணை இதழாசிரியர்

செல்வன் க. சுப்பிரமணியம்

*Sub Editor*

**Mas:- G. Subramanium**

வெளியிடுவோர்:

**இந்து மாணவர் மன்றம்**

கொழும்பு இந்துக் கல்லூரி

இரத்மலானை

★

*Published By:*

**HINDU STUDENT'S UNION**

**COLOMBO HINDU COLLEGE**

**RATMALANA**

UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
University of Jaffna
249992
Library
Donated by: Mr. K. C. KULARATNAM
249992 249992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Compliments

from

**K. S. SIVASANGARAN PILLAI**

IMPORTERS, EXPORTERS

GENERAL MERCHANTS

193, KEYZER STREET,

**COLOMBO 11.**

T'Grams:
SIVABAKTHI

T'Phone:
26196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாணவர் மன்றம்

கொழும்பு இந்துக் கல்லூரி
இரத்மலானை.

காப்பாளர்
அதிபர்
கொழும்பு இந்துக் கல்லூரி

பொறுப்பாசிரியர்
திரு. வி. வைத்திய நாதன்

ஆசிரிய உறுப்பினர்கள்
திரு. த. சங்கரலிங்கம்
செல்வி ப. நாகலிங்கம்
திரு. கே. கிருஷ்ணபிள்ளை
திரு. க. நடராசா

தலைவர்
சோ. யமுனராஜன்

உப தலைவர்
மு. கதிர்காமநாதன்

கௌரவ செயலாளர்
வெ. ஸ்ரீசணமுகநாதன்

கௌரவ உப செயலாளர்
ப. குகன்

பொருளாளர்
சு. சிறிஸ்கந்தராஜா

## HINDU STUDENT'S UNION

COLOMBO HINDU COLLEGE
RATAMALANA.

*Patron*
**The Principal**

*Master Incharge*
**Mr. Vaithiyanathan**

*Staff Members*
**Mr. T. Sankaralingam**
**Miss. P. Nagalingam**
**Mr, K. Krishnapillai**
**Mr. K. Nadarajah**

*President*
**S. Yamunarajan**

*Vice President*
**M. Kathirkamanathan**

*Hony Secretary*
**V. Sri Shanmuganathan**

*Hony Asst. Secretary*
**P. Kugan**

*Treasurer*
**S. Siris Kandarajah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

With the best Compliments

of

NARDO INDUSTRIES

377, DARLEY ROAD,

COLOMBO 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசகர் கருத்து.

கொழும்பு இந்துக் கல்லூரி
இரத்மலானை

தமிழன் பயின்ற கலைகள் அறுபத்துநான்கின. அவற்றை அவனுக்கு உணர்த்திய பெருமாட்டி சகலகலாவல்லி. இக்கலைச்செல்விக்கு இந்துக்கள் தொன்று தொட்டு விழாவெடுத்து வருகின்றனர். இக்கல்லூரி மாணவர்களும் கலைமகளுக்கு விழாவெடுத்து 'இந்து மாணவன்' என்னும் மலரை அவள் திருவடிகளிற் சமர்ப்பிப்பது மரபாகிவிட்டது. இம்முறையும் இம்மலர் இந்து மாணவர்மன்றத்தின் அயரர் உழைப்பினால் வெளிவருகின்றது. மன்றத்தினரின்ஊக்கத்தையும் உழைப்பையும் பாராட்டுகிறேன். அன்னாருக்கு அன்னை அருள் புரிவாளாக.

தமிழ்நாட்டுத் திருவுருவங்கள் எல்லாவற்றினுள்ளும் அழகிலும் தத்துவக் கருத்திலும் சிறந்து விளங்குவது நடராஜனின் திருவுருவம். அத்தகைய திருவுருவத்தைக் கொண்ட எங்கள் கல்லூரித் தியானமண்டபம் மறைந்துபோன மாணிக்கம் ஒன்றினை அடிக்கடி நினைவுறுத்திக்கொண்டேயிருக்கின்றது. இந்த மாணிக்கம்தான் எமது கல்லூரித்தாபகரில் முக்கியமானவராகிய காலஞ்சென்ற திரு. மகாதேவன் அவர்கள். அவர் மறைந்தபோதிலும் அவரின் குடும்பத்தினர் மண்டபத்திற்கு வேண்டிய திருத்தங்களை அவ்வப்போதுசெய்து வருகின்றனர். அவர்களது சேவையை நாம் என்றும் மறவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*You Pay Less*

*yet*

*Get More*

*When You Buy*

*Products*

*of*

# THAKSALA WEAVERS LTD.

**16, CHURCH STREET,**
**KOHUWALA - NUGEGODA**
**T'phone: 2615**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவன்

**மாணவனைப் பற்றி ....**

புனிதப் பிறவியாகிய, மனிதப் பிறவியெடுத்தவர்களைத், தெய்வமாக்கித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வாழவைப்பது சமயம். சமயம், மார்க்கம், நெறி என்பன ஒரு பொருட்கிளவிகள். எல்லா சமய உண்மைகளையும் தன்னகத்தே அடக்கி மேன்மைபெற்று எந் நாட்டவராலும் புகழப்படும் ஒரு சமயமாக விளங்குவது சைவ சமயம். மேன்மைகொள் சைவ நீதி அகிலவுலகெங்கணும் விளங்கவேண்டுமென்று கனவு கண்டனர் நம் ஆன்றோர்கள். அவர் கனவை நனவாக்குவது இளைஞராகிய நம் கடன்!

இந்து இளைஞரிடையே இந்து சமய அறிவை வளர்க்கவும், அவர்தம் உள்ளக் கருத்துக்களை எடுத்துரைக்கவும், எழுத்தாற்றலை வளர்க்கவும், எமது இந்து மாணவர் மன்றம் ஆண்டுதோறும், ''இந்துமாணவன்'' என்ற நவராந்திரிச் சிறப்பிதழை வெளியிடுகின்றது. இவ் ஆண்டும் இந்துமாணவன், பெரியார் பலரது கட்டுரைகளையும் மாணவரது மனக் கருத்துக்களையும் அணியாகப்பெற்று ஏறுபோற் பீடு நடைபோட்டுப் பவனி வருகின்றான், வரும் அவனை, வரவேற்றுப், பேணிவளர்த்துப், பெரியவனாக்கி, அகில உலகமும் அவன் புகழ் பரவச் செய்வது இந்துக்கள் அனைவரதும் கடனாகும்,

இம் மலரிலுள்ள கட்டுரைகளைக், கவிதைகளை பெரியோர்களாகிய நீங்கள் வாசித்து அவற்றில் உள்ள குற்றங் குறைகளைச் கிட்டிக்காட்டி, மாணக்கர் ஆக்கத்திற்கு ஊக்கமளிக்குமாறு வேண்டுகிறேன்.

இம் மலர் சிறப்புறப் பேராதரவு நல்கிய அனைவர்க்கும், எமது மன்றத்தின் சார்பிலும், இதழாசிரியர் என்ற முறையிலும், கல்லூரியின் சார்பிலும் எனது இதய பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன்.


''அன்னை கலைவாணியின் ஆசி அனைவர்க்கும் வந்தணைக,'


இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Get your home to reflect your own distinctive taste

Instal
Vijaya Terrazzo
tiles
made to order
exactly as you
want it.





## VIJAYA TERRAZZO

Tiles are

* strengthened under hydraulic pressure to last a life time
* well cured in water to prevent cracking or chipping when installed.

For your individual requirements place your order now with

# VIJAYA TILES LTD

Don Carolis Building,
Keyzer Street, Colombo.
AGENTS —
Devar & Co. (Ceylon) Ltd.
Telephone: 2558.

669/66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி சந்நிதியில்

பண்டிதமணி சி. கணவதிப்பிள்ளை

கற்கத்தா நகரத்திற் பிரசித்தி பெற்ற தக்ஷிணேசுவர ஆலயத்தில், தேவிக்குச் செய்யும் பூஜையை, மிக்க வேண்டுதலின் பயனுக, தாம் செய்தற்கு ஒருவாறு உடன் பட்டருளினுர், ஸ்ரீ ராமகிருஷ்ணபரமகம்ச தேவர். தாம் தேவிக்குப் பூஜை செய்வதே யன்றி, வேறெந்தப் பொறுப்புக்களையும் ஏற்க முடியாமையைத் தெட்டத் தெளியத் தெரிவித்துவிட்டார் பரமகம்சர். கோயிலுக்கதிகாரியாயிருந்த மதுரநாதபாபு, பரமகம் சரின் கோட்பாடுகளுக்கெல்லாம் கட்டுப்பட்டு, பரமகம்சர் பூஜை செய்தற்குடன் பட்டத்தையே முக்கியம் என்று கருதினுர்.

பூஜை நடந்தது. தேவியின் உயர்ந்த அணியலங்காரங்களின் பாதுகாப்புக்கோ, பிரசாதம் முதலியன பெறுதற்கோ ஸ்ரீ ராமகிருஷ்ணரை யாரும் எதிர்பார்க்கவில்லை. பூஜை நடந்தது. ஆன்மார்த்தமாகவே நடந்தது.

தம்மை முழுவதுந் தேவிக்கு அர்ப்பணஞ் செய்து, தேவியை அன்றி மற் ருென்றைக் காணுதவராய், சில சமயங்களில் தம்மையுங் காணுதவராய் தேவி பூஜையை நடத்தினுர் பரமகம்சதேவர்.

ஒருமுறை தேவியைத் தம் இருதயத்திலிருத்தி, தாமே தேவியாய்ப் பாவகம் முதிர்ந்து, மலர்களைத் தமது தலையிலே தூவி, தமக்குத்தாமே பூஜை செய்து நிவேதனங் களையும் சந்நிதியிலிருந்து தாமே உண்டார்.

கோயிற் சிப்பந்திகளுக்கு இராமகிருஷ்ணரின் செய்கை முழுப்பைத்தியச் செய் கையாகத் தோன்றியது. மதுரநாத பாபுவுக்கு முறையிட்டார்கள். பயன் உண்டாக வில்லை. பாபு வாளாவிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆன்மார்த்த பூஜையை, அப்பூஜையைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற பக்குவர்க்கு உத்தம பரார்த்த பூஜையாமென்பதை நன்குணர்ந் திருந்தார் மதுரநாதர்.

ஆன்மார்த்த பூஜையே விரிந்து பரார்த்த பூஜையுமாய்ப் பிறர்க்கும் பயன் படத்தக்கது. ஆன்மார்த்தமற்ற பூஜை யார்க்கும் பயன்படப்போவதில்லை. அது கூலிக் குச் செய்யும் மாரடிப்பு. அதற்குப் பரார்த்தம் என்று பெயர் வைப்பதிற் பயனே இல்லை. இவ்வுண்மை பரமகம்ச தேவரின் பூஜையிலிருந்து தெளிவாகலாம். ஆன்மார்த் தம்—தன்பொருட்டு, பரார்த்தம்—பிறர்பொருட்டு.

ஒருமுறை தேவிக்குப் பூஜைசெய்து முடித்து, தேவியை நோக்கியபடி தியான சமாதி கைகூடும் நிலையில் நின்ருர் பரமகம்சர். அந்நிலை கைகூடும் விஷயத்தில், காத்திராப்பிரகாரம் ஏதோ ஒரு தாக்கமுண்டாகிக் குழப்பம் வந்தது. உடனே திடுக் கிட்டுத் திரும்பிப் பின்னே நோக்கினுர்.

மதுரபாபுவின் மாமியார்—அந்தக்கோயிலைத் தாபித்த எஜமாட்டிதேவியில் மிகுந்த பத்தி சிரத்தையுள்ளவர்—பெயர் ராணி ராஜமணிதேவி—தோழிகள் புடை சூழக் கும்பிட்டுக் கொண்டு நின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சந்தர்ப்பத்தில், இராமகிருஷ்ணர், ' இங்கேயும் அப்படியா ' என்று உறுமிக்கொண்டு, கும்பிட்டு நின்ற ராணி ராஜமணிதேவிக்கு ஓங்கி அடித்துவிட்டார். தாம் அடித்ததை அவர் அறிவாரோ அறியாரோ யார் அறிவார் ! உறைத்த நோக்குடன் பரவசராய் நின்ருர் பரமகம்சர்.

' முழுப்பைத்தியத்தின் செய்கையைப்பாருங்கள் ' என்று சொல்லிக் கொண்டு ஓடோடிவந்து பரமகம்சரைச் சூழ்ந்தார்கள் கோயிற் சிப்பந்திகள்.

ராணி ராஜமணிதேவி தமது கைகளை உயர்த்தி, பரமகம்சரின் மேனியை யாருந்தீண்டக்கூடாது என்ற முறையில் தடைசெய்து கொண்டே, ஒரு புறம் ஒதுங்கி, அழுதழுது, தேவியின் தூயசந்நிதியில், ' தானே குற்றஞ் செய்தவள் ' என்பதை ஒப்புக் கொண்டார்.

ராணி ராஜமணி, தேவி சந்நிதியில் கும்பிட்டு நின்ருராயினும், அவர்மனம் அதில் ஈடுபடாமல், கோர்ட்டில் நடத்தும் வியாச்சியம் ஒன்றை நினைத்து அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. அந்தமன அலைவு சந்நிதியின் தூய்மையைத் தாக்கிப், பரமகம்ச தேவரின் சமாதி நிலைக்குக் குழப்பஞ் செய்துவிட்டது. அதனுல் ராணி தண்டனைக் காளானுர்.

சண்டேசர் தாதையைத் தாளறத்தடிந்த சம்பவம் இதிலிருந்து நோக்கத்தக்கது.

வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் இரணியவன் மரைத், தாம் தரிசிக்கும் நடராஜதரிசனத்தைத் தரிசிக்க வைக்கலாமோ என்று யோசித்ததுண்டு.

ஒரு மகான் பின்வருமாறு சொன்னுர் :—

" புண்ணிய காலங்களைப் போலவே புண்ணிய தலங்களும் பேணப்பட வேண்டும் புண்ணிய தலங்கள் ஆன்மாக்களின் விசேட விருத்திக்கு உபகாரமானவை.

திருக்கேதீச்சரத்தை எடுத்துக் கொள்ளுவோம். அது விசேட புண்ணிய தலம். அங்கே, சித்த புருஷர்கள் நமது கண்ணுக்குப் புலப்படாத உருவத்தில், தமக்குத்தியான சமாதி கைகூடுதற்குத் தவமுயற்சி செய்துகொண்டிருப்பார்கள். அவ்வாருகிய புண்ணியதலத்தில், சந்நிதியின் தூய்மையைக் கெடுக்கும் முறையில், தூய சிந்தனை தூய செயல் தூய செய்கையின்றி அணுகினல், சித்த புருஷர்களின் சாபத்துக்கு ஆளாக நேரும் ; குளிக்கப்போய்ச் சேறு பூசியதாகும்.

தல விசேடத்தை உணருவார்களானுல், பூசகர்கள் பூஜைக்குடன்படார்கள். தாம் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து ஓட்டம் பிடிப்பார்கள். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பரமனைப் பாடிய பாவாணர்"

(இ. பாலசுந்தரம், பி. ஏ. (சிறப்பு)
உதவிவிரிவுரையாளர், இலங்கைப்பல்கலைக்கழகம், பேராதனை)

'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பரம்பொருளைப் பாடி, உய்யும் வழி காட்டி, விடுபேறு பெற்றோர் பலராவர். வீரராய் உலகாண்ட சேர மன்னருள் இறைவனுக்கு அடித்தொண்டு பூண்டு, அடியாருக்கு ஆவன புரிந்து, வைதிக மார்க்கங்களை விளங்கச் செய்து சிவபக்தியில் மூழ்கிய சேரமான்பெருமாள் நாயனர் தமது பக்தியனுபவங்களைப் பாமாலைகளாகத் தந்துள்ளார். செழுமிய சிவ பக்திக்கு இணையான செந்தமிழ் வித்தகம் வாய்க்கப் பெற்ற இவர், இளங்கோவடிகளைப் போன்று சேரநாடு தந்த ஒரு பெருங் கவிஞராவார். இவர் இயற்றியருளிய திருக்கை லாயஞானவுலா, திருவாரூர் மும்மணிக்கோவை, பொன்வண்ணத்தந்தாதி என்னு மூன்று பிரபந்தங்களும் பதினெராஞ் சைவத் திருமுறையில் வைத்து எண்ணப்படும் பெருமையும் மதிப்புங் கொண்டு விளங்குகின்றன.

சிவ பக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் ஈடுபட்டுப் பக்திப் பாமாலைகள் தொடுக்கப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்த சேரமான், தாமும் அத்தகைய பக்தியிற் சிரத்தை கொண்டு பரமனைப் பாடியுள்ளார். அகவுருவக் கற்பனைகளைச் சிருட்டித்து தமது கற்பனு சக்தியினலும் கவிதாசக்தியினுலும் பரமன்மீது தாம் பெற்றிருந்த ஆழ்ந்த பக்தியுணர்ச்சியனுபவங்களை எல்லாம் தொகுத்துப் பக்திச் சுவை ததும்பும் வண்ணம் கூறியிருக்குந் திறத்தால் அவர் ஒரு பெரும் பாவாணராகக் காட்சியளிக்கிருர்.

'இலக்கிய உலகில் இருந்துவரும் ஒரு மரபில் ஒருசில சிறிய மாற்றங்களைச் செய்துவிட அதுவே காலப்போக்கில் வளர்ந்து பெரும் மாற்றமடைகின்றது. இத்த கைய பெரு மாற்றத்துக்குக் காரணமாக அமைந்த சிறுமாற்றங்களைச் செய்வோனே பெரும் புலவனுகக் கணிக்கப்படுகின்ருன்

(1) இந்த அடிப்படையில் அவரது திருக்கைலாய ஞானவுலாவை நோக்கும் போது அவர் பெரும்புலவனுக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கக் காணலாம். உலாப் பிரபந்தம் என்னும் ஒரு புதிய இலக்கிய வடிவத்தைத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகஞ் செய்து, அதனைக் கருவியாகக் கொண்டு தமது பக்தியுணர்வைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வாறு அமைந்த இந்த உலாப் பிரபந்தம் பிற்கால உலா இலக்கியங்களுக்குப் பொரு ளிலும், வடிவத்திலும் வழிகாட்டியாக அமைவதாயிற்று.

(2) உலாப்பிரபந்தம் பல்லவர் காலத்தில் முகிழ்த்தெழுந்த ஓரிலக்கிய வடிவ மாகும். இப்பிரபந்தத்தின் தோற்றத்திற்கு "ஊரோடு தோற்றம் உரித்தெனமொழிப" என்ற தொல்காப்பியச் சூத்திரத்திலே சிலர் அமைதி காண்பர். ஆனல் இச் சூத்திரம் உலாப்பிரபந்தத்தைத்தான் குறிக்கின்றதா ? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். சேர மானின் 'ஞானவுலாவுக்கு' முன்னர் உலாவிலக்கியங்கள் இருந்ததாகச் சான்றுகள் கிடைத்தில. சங்க இலக்கியங்களை நோக்குப்போது அங்கு மன்னர் உலாப் போந்த செய்திதானுங் கிடைத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தொல்காப்பியங் கூறும் முன்தேர்க் குரவை, பின்தேர்க்குரவை பற்றி செய்திகளைக் கவனிக்கும்போது அவை, போர் முடிந்து வெற்றியுடன் திரும்பிவரும் மன்னனின் வருகையைக் குறிப்பதாக அமைந்துள.

(4) சிலம்பிலே வஞ்சிக் காண்டத்திலே சேரன்செங்குட்டுவன் உலாப்போந்த காட்சி சித்திரிக்கப்படுகின்றது.

(5) பல்லவர் காலத்திலே தோன்றிய நந்திக்கலம்பகத்தில் நந்திவர்மன் உலாப் போந்த செய்தியை ஒரு வெண்பா கூறுகின்றது. இவ்வாருக இலக்கிய வரலாறு நோக்கிலே பார்க்கும் போது ஆங்காங்கு சில பாடல்களில் மன்னர் உலாப் போந்த செய்திகள் காணப்படுகின்றன. ஆனுலவை உலாவிலக்கியமாகத் தோன்றவில்லை. பல்லவர் காலப் பக்திப் பாடல்களில் இம்மரபு சிறிது மாற்றம் அடைகின்றது. '' நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங்கொண்டார் '' என இறைவன் உலாப் போந்த செய்தியைச் சம்பந்தர் சித்திரிக்கின்ருர். இவ்வாருன சருக்களைக் கொண்டு வளர்ந்து உலாச் செய்திகளுக்குச் சேரமான் ஒரு பூரணவடிவமும் உள்ளடக்கமுங் கொடுத்து, 344 அடிகளைக் கொண்ட கலிவெண்பாவில் ஆதியுலாவைப் படைத்துள்ளார்.

இவர் உலாப் பிரபந்தம் படைப்பதற்குப் பல பின்னணிகள் காணப்படுகின்றன. கிரேக்க நாட்டிற் போரில் வென்ற மன்னரும், வீரரும், சிறைவீரரும் கோலாகலமாக ஊர்வலம் வரும் மரபு இருந்தது. அம்மரபினை அரசனுக இருந்த சேரமான் கேள்விப்புலனுக அறிந்திருக்கலாம். அசுவகோசன், காளிதாசன் முதலிய வடமொழிக் காவியாசிரியர்கள் தமது காவியங்களிற் படைத்துக் காட்டும் உலாக் காட்சிகளை இவரும் படித்துச் சுவைத்திருக்கலாம். அல்லது வடமொழி இலக்கியம் கூறும் உலாக் காட்சிகளைக் கற்றறிந்தார் இவருக்கு எடுத்தியம்பியிருக்கலாம். முடிசூடி அரசாண்டு, தாமே உலாப் போந்த தமது சொந்த அனுபவங்களுக்கும் இவருக்கு இருந்திருக்கக் கூடும். இவ்வாருகத் தாம் பெற்ற அனுபவங்களுடன் பக்தியுணர்வும், பக்தியனுபவங்களுமிணைந்து, சேரமானின் கற்பனையுள்ளத்தைத் தொழிற்படுத்தி ஆதியுலாவைத் தோற்றுவித்தன.

பல்லவர் காலத்துக்கு முந்திய இலக்கியங்களில் மன்னர் உலாப்போந்த செய்தியே காணப்படுகின்றது. ஆனுல் ஆதியுலாவிற் ' கைலையங் கிரியிலமர்ந்திருக்கும் இறைவன், பூதக்கணங்கள் புடைசூழத் தேவரும் தொண்டுகள் பல புரிந்துவரக் கண்கொள்ளாக் காட்சியுடன் அடியார்களின் தரிசனத்தின் பொருட்டு உலாப் போந்ததாகவும் அதனைக் கண்டு ஏழுபருவ மகளிரும் காதல் கொண்டதாகவும் ' கூறப்பட்டுள்ளது. இறைவன் உலாப் போந்த செய்தியைப் பிரமாண்டமாகச் சேரமான் சித்திரித்துக் காட்டப் பிற்காலத்திற்ருேன்றிய திருவாரூருலா, தில்லையுலா, திருவெங்கையுலா. குற்றாலவுலா முதலிய உலாவிலக்கியங்களும் இறைவன் உலாப் போந்த செய்தியைச் சித்திரிக்கின்றன. இவ்வுலா இலக்கியங்களுக்குப் பொருள்மரபிலும் வடிவத்திலும் வழிகாட்டியாக அமைந்தவர் ' பரமனைப் பாடிய பாவாணரே ' ஆவார்.

உலாப்போகுந் தலைவனைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் ஆகிய பருவமகளிர் கண்டு காதல் கொள்வதாகப் பாடுவது உலாப்பிரபந்தமாகும். எனவே அது கூறும் பொருளைப் ' பெண்பாற் கைகிளை ' யிலடக்கலாம். அகத்திணை மரபிலுள்ள பெண்பாற்கைக்கிளையை எடுத்துக் கொண்டு 344 அடியில் கலிவெண்பா யாப்பில் ஒரு பெரிய இலக்கியம் படைத்தமை அவரது புலமைத் திறத்தைக் காட்டுகின்றது. இதைப்போன்றே திருமங்கையாழ்வாரும் ''மடல்' என்ற ஒரு துறையை எடுத்துக்கொண்டு பெரியதிருமடல், சிறியதிருமடல் என்னும் இருபிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாப்போகும் மன்னரைக் கண்டுமகளிர் மையலுற்று மயங்குவது போன்ற, இறைவனது பவனியைக் கண்டு, பருவமகளிர் செயலிழந்து, மதிமயங்கிக் கூறும் வார்த்தைகளும் அவர்களின் நிலையிழந்த தன்மையினையும் சேரமான் சிறப்பாகச் சித்திரித்துள்ளார். ' கைலையங்கிரிக் காவலன் உலாப்போந்த செய்தியைக் கேட்ட பெண்கள் அவசர அவசரமாகப் புறப்படுகின்றனர். அப்போது அவர்களின் மனோவேகத்தையும் அவ்வேகத்தினால் மலைப்புண்ட செயலையும் வருணித்துக் காட்டும் சேரமான் தமது பக்தியின் வேகத்தையும்ம், பக்தியுணர்ச்சியின் உச்சத்தில் ஏற்படும் செயலற்ற தன்மையையும் அவற்றின் மூலஞ் சித்திரித்துக் காட்டும் வகையில் அவரது கவித்துவம் புலப்படுகின்றது.

(6) பல்லவர் காலக் கவிஞரிடம் தமிழ்ப்பற்று மிகுந்து காணப்படுகின்றது எனலாம் இப் பண்பு ஆதியுலாவிலுங் காணப்படுகின்றது

(7) பிற் காலத்திலே தோன்றிய உலாநூல்கள் பலவும் தமிழ்ப்பற்றைக் காட்டுவனவாக உள்ளன. ஆதியுலா ஆசிரியரும் இத்துறையில் வழிகாட்டியுள்ளார் என்றே கருதத் தோன்கிறது. இவ்வாறாக அதியுலாவின் விகப், புற உருவங்களை நோக்கும் போது, பாவாணராக விளங்கும் சேரமான் பலவிதத்தில் பிற்காலப் புலவர்களுக்கு வழிகாட்டியுள்ளார் எனலாம். தமது சொந்த அனுபவத்தைத் தெய்வீகத்தேனிற் குழைத்து '' ஞானஉலா '' வாகத் தந்த சேரமானின் கற்பனைத்திறனும், கவிதாசக்தியும், பக்தியுணர்வும் ஆதியுலாவிலமைந்து படிப்போருக்கு நல்விருந்தாக அமைந்துள்ளன

பரமனைப் பாடும் ' பொன்வண்ணத்தந்தாதி ' '' பொன்வண்ணம் '' என்று தொடங்குவதாலும், இறைவனின் பொன்னவண்ணமேனியைச் சித்திரிப்பதாலும், '' பொன்வண்ணமே '' என்று முற்றுப் பெறுவதாலும் இப்பெயரினைப் பெற்றுள்ளது போலும். இறைவனது அருட்கோலத்தையும், அருட்சிறப்பையும், பெருமையையும் போற்றிப் புகழ்ந்து அவற்றிலீடுபட்டுத் தமது பக்தியுணர்வினாற்பெற்ற அனுபவத்தை 100 கட்டளைக்கலித்துறைகளில் அந்தாதிப் பிரபந்தமாகத் தந்துள்ளார்

(8) 'பக்தியென்னும் இறையான்மத் தொடர்புக்குக் காதல், பாசம் என்னும் மாற்றுருவங்களைக்கொடுத்தல் பல்லவர்காலப் புலமைமரபுகளில் ஒன்றாகும். அம்மரபுவழியே பரமனைப் பாடுகின்ற நம் பாவாணர், தமது பக்தியனுபவத்தைக் காதலன் காதலி உறவிலமைத்துக் கூறியுள்ளார். தன்னைக் காதலியாகவும்; ம் இறைவனைக் காதலனாகவும் பாவனை செய்வதோடு, தன்னைத் தாயாகவும், தோழியாகவும் செவிலியாகவும் பாவனைசெய்து அப்பாத்திரங்களின் மூலமாகத் தமது பக்தியைப் புலப்படுத்தியுள்ளார். இவருக்கு முன்னர் வாழ்ந்த காரைக்காலம்மையார், முதல் ஆழ்வார்மூவர், திருமழிசையாழ்வார். ஆகியவர்கள் உலாப்பிரபந்தத்திற்கு வடிவங்கொடுத்திருந்தனர். எனவே அதன் அகவுருவத்தில் எத்தகைய மாற்றங்களையும் புதுமைகளையும் புகுத்தித் தமது கவித்துவத்தைக் காட்டியுள்ளார் என்பதிலேயே சிறப்புக்காணப்படுகின்றது. முன்னோரியற்றிய ஐந்து அந்தாதிப்பிரபந்தங்களிலும் அகத்திணைமரபு கையாளப்படவில்லை. ஆனால் இங்கு அம்மரபினைக்கையாண்டு பக்தியனுபவம் புலப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஓரம்சமாகும் முன்னரெழுந்த அந்தாதிப்பிரபந்தங்கள் வெண்பாவில் யாக்கப்பட்டுள்ளன. சேரமான் அதனைக் கட்டளைக்கலித்துறையிலமைத்துவிட, இவரப்பின் பற்றிச் சோழர்காலத்தில்வாழ்ந்த நம்பியாண்டார்நம்பி '' திருத்தொண்டர்திருவந்தாதியை '' க் கட்டளைக்கலித்துறையிலமைந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்வண்ணத்தந்தாதியின் உட்பொருளை அணுகும்போது அங்கு பல சிறந்த அம்சங்களைக் காணலாம்.

(9) தமது கற்பனைசத்தியினுற் பிரபஞ்ச உலகத்தையே ஒரு முற்றுருவகமாகக் கற்பனை செய்துள்ளார். இறைவனின் தோற்றப் பொலிவினைச் சித்திரிக்கும்போது '' விரிகின்ற ஞாயிறு போன்றது மேனி..........'' என் ம், '' எரிகின்ற தீ '' விரிகின்ற ஞாயிறு போன்றது மேனி '' என்றும், '' எரிகின்ற தீயொத்துளது சடை ஈசற்கு......'' என்றும் பாடுகின்றுர். இவை '' காலைப் போன்றிலங்கும் மேனி..........'' எனப்பாடிய காரைக்காலம்மையாரின் பாடலுடன் ஒப்பிட்டு நோக்கக்கூடியதாகஉள. இங்கே சேரமான் இயற்கையழகில் இறையழகைக் கண்டு இரசிக்கிறுர். திருமாலின் தோற்றப் பொலிவினைக் கண்ணுரக் கண்டனுடவித்த அவருக்கு அக்காட்சி எப்போதும் கண்ணுள் நிறைந்த வண்ணமாகவே இருந்ததாம் என்கிறுர். இதனை '' என் கண்ணுள் எப்போதும் வருகின்றதே '' என்பதன் மூலம் நமக்குப் புலப்படுத்துகின்றுர். இவ்வாறே திருப்பாணுழ்வாரும் '' என்கண்ணுள்ஒக்கின்றதே'' என்று பாடுகின்றுர்.

இவர் கையாளும் சொல்லாட்சிகள் சொற்சிலம்பமில்லாது, பொருளுடன் ஓசை தருவதாக அமைந்துள்ளன. '' வண்ணம் '' என்ற சொல் இவரிடம் ஒருவித வண்ணத்தையே பெற்றுவிடுகிறது எனலாம்.

(10) இறைவனது பெருமைகளையும் அருட்குணங்களையும் போற்றிப்புகழப் போதுமான சொற்கள் அவருக்குக் கிடைத்தில. எனினும் அவர் '' குணக்குன்றமே '' என்றுவிளிப்பதன் மூலம் ஒருவித திருப்தியடைகின்றுர். இதே சொல்லாட்சியைத் தாயுமானவசுவாமிகளும் கையாண்டுள்ளார். ஓசைப் பெருக்கும், ஒத்திசையும் நிறைந்த பாக்களைப் பாடியதோடு, சந்தம் தொனிக்கும் இன்னிசைப்பாடல்களையும் பாடியுள்ளார்

'' மங்கை கொங்கைத் தடத்திங்குமக் குங்குமப் பங்க நுங்கி
பங்க மெங்கும் நெகச்சங்க மங்கைத் தலத்துங் கவர்வான்
கங்கை நங்கைத் திரைப்பொங்கு செங்கண் அரவங்கள் பொங்கிப்
பங்கி தங்கும் மலர்த்திங்கள் தங்கும் முடிப்பண் டங்களே ''.

இப்பாவிற் பொருளுக்கேற்பச் சந்தம் தொனிக்கும் ஓசையும் துள்ளிக் குதித்துச் சென்று களிமகிழ்வு தருகின்றது. நகைச்சுவை மிக்க பாடல்களையும் நாம் பொன்வண்ணத்தந்தாதியிற் காணலாம்.

'' கூத்துக் கொலாம் இவராடித் திரிவது கோள்வளைகள்
பார்த்துக் கொலாம் பலி தேர்வது ''

இங்கு இறைவனின் நடனத்தையும் பிச்சையெடுக்கும் செயலையும் சேரமான் நகையாடுகின்றுர். பிறந்து உடம்பெடுத்ததன் பயனைக் கூறும்போது '' சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் . '' எனப்பாடுகின்றுர். இவ்வாருகப் பொன்வண்ணத்தந்தாதி பல்வகைப்பட்ட இலக்கிய நயங்களைப் பெற்று, அகத்துறைமரபிலே பக்தியனுபவத்தைப் புலப்படுத்துவதாக அமைந்து, தமிழின்பமும் பக்திச்சுவையும் நல்கும் ஓர் அரிய இலக்கிய நூலாகத் திகழ்கின்றது.

திருவாரூர்மும்மணிக்கோவையின் அகப்புறவுருவங்களை நோக்கும்போது இது கோவை இலக்கியங்களுக்கு வழிகாட்டியாக அமைந்ததா ? என்பதையும் தமது பக்தி புணர்வை எவ்வாறு கோவைப்படுத்திக் கூறுகின்றுர் என்பதையும் நாம் ஆராயலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைமுகனும் அறுமுகம் புல்லும்

ரவீந்திரன். நமசிவாயம்.
க. பொ. த (உயர்தரம்)

எக்காரியங்களைச் செய்ய முற்படும்போது நாம் முதலில் கணபதியைக் கை தொழுதே விக்காரியத்தினை ஆரம்பிக்கின்றோம். இவ்வாறு பக்கதர்களைக் காக்கும் கணபதிக்கு நாம் செய்யும் கிரியைகளில் முக்கியமானது அறுகம்புல் சாத்துதலாகும். அவ்வறுகம்புல் சாத்துவதன் முக்கிய காரணத்தினைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது நமது தலையாய கசனுகும்.

'' அவந்தி '' நாட்டினைச் சுலபன் என்பவன் ஆண்டுவரும் காலத்திலே விவனி டம் யாசம் பெறுதற் பொருட்டு ஓர் அந்தணன் வந்தான். வறுமையால் வாடிய அவனது தோற்றமோ பார்ப்பதற்கு மிகவும் அவலட்சணமாக இருந்தது.

அப்பிராமணனைக் கண்ணுற்ற வேந்தன் அவனது நிலைமையைக்கண்டு வருந்து வதை விடுத்து அவன் நகைப்புக்கு இடமாகத் தோன்றுகிறானே எனக்கூறி கல கல வெனச் சிரித்தான். பிராமணனுக்கு அரசனின் இச்செயல் மிகுந்த கோபத்தை ஊட்டி ற்று.

'' அரசே ! எனது தோற்றத்தை மட்டும் எண்ணி என்னைப்பார்த்து நகைத்தாய் இது அறிவிற் சிறந்தோருக்கு ஏற்றதன்று. உன் செல்வச் செருக்கு உன்னிடம் யாசிக்க வந்த என்னைக் கண்டு சிரிக்கும்படி துண்டிற்று, உன்சிரிப்பு என்னை மட்டும்சுட் டு விட்டதோடு நிற்கவில்லை. உன் குலத்தையே சுட்டுவிட்டது. ஆகவே நீ எருதாகப் பிறக்கக் கடவாய் '', எனச் சபித்தான்.

எண்ணற்கரிய, தருமங்களைச் செய்துவரும் தனது கணவருக்கு நேர்ந்த கதியை இட்டு கவலை விடைந்த விரசி அந்தணனைப் பார்த்து '' யாசிக்கவந்த வேதியனே, நீ ஓர் அந்தணனா ? பெரியோர் பொறுமையை ஒருபோதும் இழப்பதில்லை. பிறர்தவற்றை மன்னித்து, இதனை எடுத்துக்கூறி விதற்கேற்ற பிரகாரம் மேற்கொள்ளும் வண்ணம் புத்திபுகட்டாது, கழுதையைப்போல அறிவில்லாது இச்செயலை நீ செய்தமையால் நீயும் கழுதையாகக் கடவாய் '' எனச் சபித்தாள்.

அந்தணனுக்கு கோபம் மேன்மேலும் அதிகரிக்கவே குற்றம் செய்த அரசனிருக்க தன்மேல் குற்றம் காணுகிறாளே, என எண்ணி அவளைச் சண்டாளப் பெண்ணாகக் கடவ எனச் சபித்தான்.

இதன் பயனாக அரசன் எருதாகி உழவனிடமும், அந்தணன் கழுதையாகி வண்ணானிடமும், விரசி சண்டாளப் பெண்ணாகவும் சேரியிற் பிறந்தனர்.

ஒரு நாள் உழவன் வயலை உழுதபின் மாட்டை அவிழ்த்து மேயவிட்டான். வண்ணான் அழுக்கு மூட்டையைக் குளக்கரையில் இறக்கியதும், கழுதையும் மேய்ந்த வாறு அந்தப்பக்கம் வந்தது. பக்கத்திலே சண்டாளப் பெண்ணான விரசியும், புல்லறுத்துக்கொண்டிருந்தாள்.

249992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு யதேச்சையாக மூவரும் நெருங்கிவரும்போது இடி மின்னலோடு மழை பெய்யத் தொடங்கவே மூவரும் சென்று அருகிலுள்ள விநாயகராலயத்தில் ஒதுங்கிக் கொண்டனர். விடாமழை சோவெனப் பெய்தவண்ணம் இருந்தது, மாலை மறைந்தது இரவுநேரம் வந்தது. கழுதைக்கு பசி எடுக்கவே புல்லை இழுக்க, சண்டாளப் பெண் கழுதையை அடிக்க, கழுதை பின்னங்காலால் மாட்டை உதைக்க, மாடு பெண்ணை மோத அங்கு ஒரே வல்லோல கல்லோலமாயிற்று.

ஆலயத்துள் மாலைநேரப்பூஜை செய்துகொண்டிருந்த முனிவர் தனது பூஜைக்கு ஊறு விளையவே, இவர்களை வெளியே துரத்தினர். இவர்கள் வாசலைத் தாண்டும்போது அடித்த பேய்க்காற்றால் இவள் கட்டிலிருந்து ஒரு புல்லும் கழுதை யினதும், எருதினதும் வாயிலிருந்து ஒவ்வொரு புல்லும் விக்கிரகத்தைச் சென்ற டைந்தன. இதைக் கண்ணுற்ற முனிவர் அவர்களை மேலும் துரத்தியடித்து, சிலையைக் குடங்குடமாக நீர்கொண்டு கழுவினர்.

அதிகாலையில் வெளியே எருது, கழுதை, ஸ்திரீ மூவரும் உயிரிழந்து இருக்கக் காணப்பட்டனர்.

விமானத்தில் ஏறி அம்மூவரும் தேவலோகத்தை நோக்கிச் செல்வதைக் கண் ணுற்ற முனிவர்கள் கணங்களை நோக்கி நியமம், நிஸ்டை என்பவற்றை சிறிதளவேனும் அறியாத இவர்களுக்கு முத்திகிடைத்ததெங்ஙனம் என வினவ அவர்கள் சொல் வாராயினர்.

'' யமதர்ம ராஜனுக்கு புத்திரனுக ஒரு பயங்கரமான அரக்கன் பிறந்தான். அவனது பயங்கர உருவத்தைக்கண்ட யமதர்மராஜன் அவன் எதிரில் வரவிரும்பாத வனுய் அந்தப்புரத்தில் நுழைந்து கதவுகளை உட்புறம் தாளிட்டுக் கொண்டான். அவ்வரக்கன் தந்தையே தனக்குப் பயந்து ஒழிந்ததால் செருக்கடைந்து தேவர்கள் அனைவரையும் துன்புறுத்திவரலானுன். இச்செயலை தாங்கமுடியாத தேவர்கள் விநாய கரிடம் சென்று முறையிடவே (பகவானும்) அழகிய பிரமச்சாரியாக உருவெடுத்து அவர்கள்முன் வந்தார்.

அசுரன் தேவர்களை நெருங்கி வந்ததை கண்ணுற்ற விநாயகர், '' ஏ அசுரா! இந்த அண்ட சராசரம் முழுவதையும் சுற்றி எத்தனையோ லோகங்களைக் கண்டு வந்திருக்கிருய் இன்னும் அநேக லோகங்கள் என் உதரத்தினுள் உள அவற்றையும் நீ கண்டு களிப்பாயாக எனக்கூறி, அசுரனைத் தனது துதிக்கையால் விலக்காகத் தூக்கி விழுங்கினுர்.

அசுரன் சென்ற மாத்திரத்தே திருவயிருனது வெப்பம் பெற்றது. அதன் காரணமாக உலகமே வெப்பம் அடைந்தது.

அவரது வெப்பத்தைத் தணிக்கத் தேவர்கள் பன்னீரை குடம் குடமாக ஊற் றினர், குளிர்நீர் சொரிந்தனர், தாமரைப்பூவால் ஒற்றினர். இம்முறை ஒன்றுலும் சூடு தணியாமற் போகவே, எண்பத்தெண்ணுயிரம் முனிவர்கள் அறுகம்புல்லைக் கொணர்ந்து ஒவ்வொருவரும் இருபத்தொரு விறுகுகளாக பகவானின் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை சொரிந்தனர். சொரிந்த மாத்திரத்தே விநாயகரை வாட்டி வந்த வெப்பம் நீங்கிக் குளிர்ச்சி பெற்றுர்.

இதன் காரணத்தால் விநாயகர் முனிவர்களைப்பார்த்து '' முனிவர்களே அறு கம்புற்கள் எனது உஸ்ணத்தை நீக்கி இதன்மூலம் உலகின் உஸ்ணத்தையும் நீக்கிற்று. ஆகவே இனிமேல் எனக்குச் செய்யும் எப்பூசையிலும் அதிகமாக அறுகம்புல்கிடைக்கா விடின் இருபத்தொரு அறுகம்புல்லால் அர்ச்சிப்பீர்களாக, எனக்கூறினுர்.

ஆண்டவனின் சூடு தணிக்கப்பெற்றதால் உலகின் சூடும் தணியப் பெற்றது ஆகவே நாம் உலகிலுள்ள உயிரினங்களின் நன்மை கருதியாவது இருபத்தொரு அறுகம் புல்லால் ஆனைமுகனை அர்ச்சித்து அவனது அருளைப் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் வண்டியில் நாமும் ஆடிஅசைந்துதான் நிற்கவேண்டும் ; வண்டியோடு எதிர்த்துப் போட்டியிட்டு நமதுபலத்தை உபயோகித்து ஸ்திரமாக நிற்கத் திட்டமிடுவோமானால் விழுந்துவிடநேரிடும். அதேபோல உலகப்போக்கில் விஞ்ஞான வளர்ச்சியில் மனிதகுலத்தில் மாற்றங்கள் ஏற்படும்போது விந்தவிரைவுக்கேற்ப எங்கள் கொள்கைகளையும் சிறிது தளர்த்தி அன்புநெறியையும் அஹிம்சை வழியையும் கடைப்பிடிக்காவிடின் சைவநெறி வாழ்விற்கு பங்கம்விளைத்தவர்களாவோம். ஆணவத்தை நீக்கிவிடு என்று ஆணையிடும் மதத்திலே ஆணவமாகிய மதத்தைச்சாதித்து அனல்வாதம், புனல்வாதம்புரிந்து வளர்ந்த அரும் பெரும் மதத்து ஆலயங்களில், அனல் வீசவும் புனல் தெளிக்கவும் பார்த்து ஏனைய மதத்தவர் எள்ளிநகையாடும் இழிகோலங்களும் மலிந்து வருதலைக் கண்கூடாகக் காண்கிறோம். வடமொழி வைராக்கியத்தை ஒரு காலத்து, அதாவது அப்பமூர்த்திகளின் விடிதொட்டு அந்த்ணர் மரபினரான சமய குரவர்கள் மூவரும் தளர்த்தவில்லையா ? ஏன் தமிழில் தேவாரம் பனுவல்களைப்படைத்தார்கள் ? அவர்கள் ஆலயவழிபாட்டில் வடமொழி மந்திரங்களை உபயோகித்ததாக வரலாறுகள் சொல்லவில்லை ; தேவாரங்களால் பூசனைபுரிந்தனர். இவர்கள் சைவத்தைக் காத்த சைவசமய குரவர்கள் என்று போற்றப்படுகின்றனர். சிலர் வடமொழியைத் தேபாஷை என்று விதற்கேதோ சக்தி இருப்பதால்தான் பூசை மந்திரங்கள் சமஸ்கிருதத்தி இருப்பதாக முணுமுணுக்கின்றனர். அப்படியானால் சமணர்களுடன் புனல்வாதம் செய்யும்போது அப்பமூர்த்திகள் ஏட்டில் எழுதிய மொழி எது ? விந்த ஏடு ஆற்றிற்கு எதிரே செல்லும் சத்தியைக்கொசித்த பாஷை எது ? வேதாரணிய திருக்கதவும்பியாண திறக்கவும் அடைக்கவும் பாடிய தேவாரங்களுக்கு சக்தி ஏற்படவில்லையா ? நளன்றுமேடார் நம்பியின் அவதாரத்தால் ஆரியர் சூழ்ச்சி அம்பலமாகவில்லையா ? சைவத்திற்குப் பல சோதனைகள் ஏற்பட்டு ஆங்காங்கே சித்திபெற்று வளர்ந்துவருகையில், சமயகுரவர் நால்வரின் உளக்கருத்துக்கு அப்பால் நான்மறையோர் ஒளிர்வதன் மர்மமென்ன ? உணர்வதற்குப் பௌத்தம் வழிகாட்டும் காலம் வெகுதூரத்திலில்லை.

இங்கு கூறியவற்றால் வேதநெறியின் பெருமையை மறந்தவன் என்று தவறாகக் கருதல்கூடாது. விதன் பெருமைக்குப் பங்கம் நேர்தல்கூடாது ; அதனை ஆதாரமாக வைத்து ஆகவேண்டிய சமூக ஒற்றுமையையும் ஆலயத்தில் மனிதசிந்தனை மனிதாபிமானத்துக்கு இப்பால் நின்றுவிடாது அப்பாலும் செல்லும் அன்புள்ளத்தையும் நாம் தேடல் வேண்டும் ; வேதநெறி மனிதநெறி ; அது எவர்க்கும் எக்காலத்தும் எம்மொழியினர்க்கும் ஏம்மதத்தினர்க்கும் சம்மதமாகவே அமைந்தது. இடைக்காலத்தில் அரசர்களதும் அந்தணர்களதும் ஆணவநெறி தழைத்தோங்க மாற்றங்கள் ஏற்பட்டன. சமயோசித புத்தியுடன் அன்று மாற்றிய வேதியரின் சந்ததியினர் என்று தாமே தம்மை உருமாறிய அந்த்ணர், தண்ணளிபுரிந்து தர்மத்தின் வழி வேதத்தை வழிக்கொள்ளுதலால் சைவநெறியை வளர்க்கலாம். வேதநெறிக்கு மனிதாபிமானம் இல்லையாயின் அதற்கு வேறுபெயரிடுதல் நன்று.

சி. பொன்னம்பலம்.
('' ஆதவன் '')

With best Compliments of

# SUNZSONS FARM PROJECTS

ENTREPRENEURS IN DAIRY FARMING
POULTRY BREEDING AND CROP CULTIVATION
AND

# SUNZSONS TUITION SERVICE

TUTORS IN ARTS & SCIENCE SUBJECTS AND
PUBLISHERS OF EDUCATIONAL BOOKS & MAGAZINES

**60, Punkankulam Road,**
**West Colombuthurai,**
**P. O. Box 47. Jaffna.**

**60, புங்கன்குளம் வீதி,**
**கொழும்புத்துறை மேற்கு,**
**த, பெ. இல. 47, யாழ்ப்பாணம்.**

## எதிர் பாருங்கள்

**செங்கதிர்ச் செல்வர் கல்விச் சேவை**

**பதிப்பிக்கும்**

# செங்கதிர்

**விஞ்ஞான. தமிழ் இலக்கிய**
**கலை சஞ்சிகை**
*( தமிழ் திங்கள் வெளியீடு )*

**பதிவு எண் 6058**

விபரங்களுக்கு : நிர்வாக ஆசிரியர்,

**“ செங்கதிர் ”**
**த. பெ. இல. 47,**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமா - மார்க்கமா ?

சமயம், மதம், மார்க்கம், நெறி, வழி என்பன ஒரு பொருளன. ஒரு நாட்டையோ, நகரையோ, இடத்தையோ, வீட்டையோ அடைவதற்கு வழி இருப்பது போலவும், ஒருகொள்கையையோ, செய்கையையோ நிலைநாட்டுதற்கும், முடித்துக் கொள்வதற்கும், தகுந்த வழி இருப்பது போலவும், இப்புவியிலே உடம் பெடுத்துப் பிறந்த ஆன்மாக்களும் நல்ல நிலையை அடைவதற்கும் மார்க்கமோ வழியோ வேண்டும். சரியான வழியில் நின்று மனதை ஒன்றுபடுத்துவதை வழிபாடு என்கிறோம். இறைவனை வழிபடுகிறோம் ; எல்லாமே பாதை. வழி, நெறி என்ற பொருளையே குறிப்பன.

மதம் என்ற சொல்லிற்கு நெறி என்ற பொருளைவிட ஆணவம் என்ற பொருளும் உண்டு. '' மதமான பேய் பிடித்து அலையாதிருத்தல் வேண்டும் '' என வடலூர் வள்ளலாரும் இறைவனை வேண்டுதல் செய்யுமிடத்து ஆணவம் என்ற பொருள் படுதல் வெளிப்படை. இறைவன் என்றகருத்து, என்று உதித்ததோ அன்று தோன்றிய மதம்தான் சைவநெறி ; இதனை எவரும் எதிரார். மனித சமுதாயத்தின் கருக்குழி யென்று கணிக்கப்படும் இந்து வெளி நாகரிகத்தின் விளைவே இந்துமதம். இந்து நதி இந்து மாகடல், இந்தியா என்பன பிறநாட்டோர் இட்டழைத்த பெயர்களேயாகும், ஆகவே ஆதிதிராவிட நிலையமான, இலே மூறியாகண்டமும் அக்கண்டம் கடலில் ஆழ்ந்தபோது எஞ்சியிருந்த இந்திய நிலப்பாகமும் இந்துமதமே முன்னைக்கும் முன்னதாகத் தோன்றியமதம் என்பதை வலியுறுத்துகின்றது. இன்றைய ஆய்வு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட அற்புத நெறி வழங்கிய சமுதாயத்தின் அறிவு நிலையை ஆராய்தற்கு இன்று மனிதரில்லை. '' தோடுடைய செவியனைக் கண்ட திருஞானக்குழந்தையும் மலர் சிலம்படி '' வாழ்த்தி வணங்கிய சேக்கிழார் வள்ளலும் இன்று இல்லை. இவ்வுலகின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணம் அம்மை அப்பரான, சிவம், சக்தியான, ஆண் பெண்ணான ஒருவடிவம் என்று அர்த்தநாரீஸ்வர வடிவத்தை அழைக்கின்றார்கள். இதே கருத்தை அருவுருவ வழிபாடாக இலிங்க வழிபாட்டில் ஈடுபடுத்தி இலட்சோபலட்ச மான ஆண்டுகட்கு முன்னர் இந்துக்கள் வழிபட்டனர். இந்த இலிங்க வழிபாட்டில் உலகில் பலபாகங்கள் ஈடுபட்டிருந்ததாக ஆங்காங்கு தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்த இலிங்கக் கருவூலங்கள் சான்று தருகின்றன.

இத்தகைய தொன்மையான மதம் இன்றுவரைமட்டுமென்ன எதிர்காலத்தும் வன்னமையாக நின்று நிலவ அதனிடம் உள்ளதகைமைகள் தாம் என்னே என்பதை ஆராயவேண்டும். சமயங்களின் அடிப்படையான கொள்கை ஒன்று உண்டு. அது, ஆன்மாவுக்கு நிலைக்களமான உடலை ஓம்புவது. கேவலம் உணவின் பிண்டமான இந்த உடலை ஓம்புவதுதான் சமய நெறியெனின் அது சூரன்முதலிய அசுரர்கள் கைக்கொண்டாலொழிய மிண்டிய மாயாவாதக் கொள்கையல்லவா என்றும் உலோகாயுதக் கொள் கையென்றும் கூறமுற்படுவாருமுண்டு ; அப்படியல்ல, ஆன்மாவின் வீடாகிய உடலை நன்னிலையில் வைத்திருந்தால், அதில் எள்ளுக்குள் எண்ணெய்போல் விரவிய ஆன்மாவின் விடுதலையையும் கவனித்தற்கு ஏதுவாகிறது. ஆதலால் மதங்களின் அடிப்படையான கொள்கைகள் சுகவாழ்வு சம்பந்தமானதே. நிஅதச் சுகவாழ்வை ஆன்மாவின் ஈடேற்றத் திற்குப் பயன்படுத்துதல் அடுத்த நோக்கம் இந்த இரண்டையும் நெகிழவிடாது பாது காத்து வரும் சமயம் எதுவும் அழியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து வெளியில் நிலவிய சமய வாழ்விலே ; மோனத்தின் அடிப்படையிலே முகிழ்ந்த சமய நெறியிலே ஆரிய வரவால் ஒரு மறுமலர்ச்சி பூத்தது. அந்த மறுமலர்ச்சி தான் வேதகாலமாகப் பரிணமித்தது. வேதவியாசர் வேதங்களை தொகுத்தார் ; அத் வித்தொகுப்பிலே சாதிகள் தோன்றியதுபோல் ஆணவம் என்ற மதமும் தோன்றலா யிற்று. பிளவும் பின்னல்களும் ஏற்பட சமயங்களும் கொள்கைகளும் பலவாகப் பரிண மித்தன. இந்து சமயத்திலேயே, சைவம், சாக்தம், வைணவம் என்றமுப்பெரும் பிரிவு கள் தோன்றின. மகாவீரரது ஜைனம், கௌதமருடைய பௌத்தம் ஆகிய மதங்கள் கிளைவிடலாயின. காலப்போக்கிற்கமைய மார்க்கங்களிலுள்ள சிலநெறிகள் மாறுத விடத்து, சமயம் மாறிவிடும். இத்தகைய சூழ்நிலையில் மதத்தினுல் மக்களுக்கு துன்பம் ஏற்படுகின்றது. சைவசமயம் ஆன்மாவின் உள்ள குற்றங்களை மூன்ருக வகுக் கின்றது. ஒன்று ஆணவம் இரண்டாவது கர்மம் ; மூன்ருவது மாயை. இந்த மூன்றை யும் குறைப்பதற்காகவே நாம் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்கிருேம். ஆலயம் என்பதன் கருத்தும் அதுவே ; ஆன்மா ஒடுங்கும் இடம். ஆனுல் இன்று ஆணவத்தின் விறிகுறியாக இலங்கையில் இருக்கும் பல ஆலயங்கள் காணப்படுகின்றன

சமயம் மனிதனின் ஆத்மவளர்ச்சிக்கேஒழிய அது மனிதனின் சிதைவுக்குரிய சின்னமாகவோ ஆத்மீக வளர்ச்சிக்கு தடைகருவியாகவோ அமையக்கூடாது. இன்று ஈழத்தின், சில வில்ல பல இந்து ஆலயங்கள் ஆணவத்தின் விறிகுறியாக அமைந்து வருகின்றன. ஏனைய மதத்தவர்களின் ஏழன நிலைக்களங்களாகின்றன. அன்பு றெிந விளங்குவதற்குப் பதிலாக அதர்மநெறிபிறக்கின்றது. இத்தலகைய இழிநிலைக்கு இந்து ஆலயங்கள் வந்துவிட்டன.

புனிதவாழ்வும், சமயநெறியும் மேற்கொண்டொழுகிய அறுபத்து மூன்று நாயன் மாரையும் சைவ உலகிற்குக் காட்டிய சேக்கிழார் பெருமான் பலவித குலங்களில் பிறந்தவர்களையும், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளில் பிறந்தவர்களையும் சைவர்கள் என்ற ஒற்றுமையில் அழகாக அவர்கள் வரலாற்றைப் பாடியுள்ளார். அங்கே சாதியைப்பற்றி எள்ளளவும் பரிசீலனை பிரவேசிக்கவில்லை. சுந்தரமூர்த்தி சுவா மிகளே திருத்தொண்டர்தொகைபாடியபோது சாதி உணர்ச்சியைச் சிறிதும் காட்ட வில்லை.

சமய குரவர்களும் சந்தான குரவர்களும் அன்பும் பக்தியும் கொண்டவர்களை மேலாக மதித்தனர். இழிகுலத்தவர் என்ற மனப்பான்மையே இல்லாது வாழ்ந்தனர். கோவில்களின் தர்மத்தில் இந்த வேதனைக்குரிய விடயம், பலசைவநன்மக்களின் மனச் சான்றைப்பரிசோதித்து வெற்றியும் தோல்வியும் கண்டுவருகிறது.

ஒருமதத்தில் மக்கள் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய கொள்கைகள் கட்டுப்பாடுகள் இருக்குமாயின் அது மதமாகாது. ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல மதமான பேயாகி, மனித சமுதாயத்தின் புல்லுருவியாக மாறிவிடும். வேதங்கள் தோன்றிய நாடாகிய பாரத புண்ணிய பூமியில் சமுதாய வளர்ச்சிக்கும் அறிவியல் களுக்கும் ஏற்ப தளர்த்தப்பட்டு, எந்நாட்டவர்க்கும் இறைவனென்றும், பூமியின் மத்தியஸ்தானம் என்றும் புகழ்பெற்ற சிதம்பர சேவுத்திரத்திலேயே ஒருதாய் வயிற்றுக் குழந்தைகள் போல உலகமனித சமுதாயக் குழந்தைகள் ஒன்ருய் வணங்கும் போது என்ன விபரீதங்கள் நேர்ந்துவிட்டன. அறுபத்துமூன்று நாயனுர்களதும் அடி தொட்ட விந்த மண்ணிலே கடவுள் தன்மை மேலும் மேலும் திருவேறி வருகிறதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு முன்னர் திருவலஞ்சுழிமும்மணிக்கோவை,சிவபெருமான்மும்மணிக்கோவை ஆகிய இரு கோவை இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பது மரபுவழியாகக் கொள்ளப்படும் ஒரு வழக்கம். ஆனால் அவ்விரு நூல்களின் காலம் எதுவெனத் திடமாக வரையறை செய்ய முடியவில்லை. எனவே இந்நிலையிற் சுந்தரமூர்த்திநாயனாருக்குச் சமகாலத்தில் வாழ்ந்த சேரமானின் காலம் ஓரளவு திடமாகவரையறை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே நோக்கும்போது, ஞானப்படனுவலாகத் திருக்கோவையார் தோற்றம் பெறுவதற்குபொருளமைதியில் இந்நூல் முன்னோடியாக அமைந்திருக்கலாம் போற்றோன்றுகின்றது.

இறைவன்மீதுகொண்ட பக்தியனுபவங்களை அகத்துறைப் பாத்திரங்களாகத் தம்மைப் பாவனை செய்துகொண்டு அகத்துறை மரபிலே அவற்றைப் புலப்படுத்தியுள்ளார். அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூன்று யாப்புக்களால் இயன்ற முப்பது செய்யுட்களைக் கொண்டு விளங்கும் இந்நூல், கற்பனைச் செறிவு மிக்கதாகக் காணப்படுகின்றது. கார்கால மழை பொழிகின்றது. கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் உரியகாலத்தில் வந்திலன். தலைவன் வருகை கொடாமையால் தலைவியைப் பிரிவுத்துயர் வருத்த, அவளது கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. அதைக் கண்ட புலவன், அங்கு மழைபொழிவதாகக் கற்பனை செய்கின்றான் (11) இதே போன்ற கற்பனையைச் சிவப்பிரகாசரும் நால்வர்நான்மணிமாலையில் ''மாணிக்கவாசகர் என்ற முகில் பா மழை பொழிந்தது'' என முற்றுருவக் கற்பனை செய்தமையை நாம் ஒப்பிட்டு நோக்கலாம். 'யாவையும் பாடிக் கோவை பாடு' என்பதற்கு ஏற்ப ஏனைச்சிற்றிலக்கியங்களைப்பாடிய புலவனே கோவை பாடும் வல்லமை பெற்றிருப்பான். அதுபோன்றே சேரமான்பெருமாள் நாயனாரும், உலா-அந்தாதிபாடிய பின்னர் கோவைப்பிரபந்தத்தைப் பாடியிருக்கலாம். கோவைபாடும் கவிஞன் பெரும்புலவனாகவே இருப்பான். அதனாலேயே யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் கோவைபாடும் கவிஞனை ''வித்தாரகவி'' என்றனர்போலும். அந்த அடிப்படையிற் சேரமானும் ஒரு வித்தாரகவி ஆவார்.

பரம்பொருளின் பெருமையிலும், அருட்கொடை வள்ளன்மையிலும் உள்ளத்தைப்பறிகொடுத்துச் சேரமான் இப்பிரபந்தங்களைப் பாடினார். அவருக்குப் பின்னர் வந்த இலக்கிய ஆசிரியர்கள், இப்பாவாணரின் கவிதைச் சிறப்பிலும், அவையளிக்கும் பக்திச் சுவையிலும் ஆழ்ந்து நமதுபாவாணரைப்பாடி, அவருக்கும் அவரது திருப்பாடல்களுக்கும் ஏற்றங்கொடுத்துள்ளனர். நம்பியாண்டார்நம்பி தமது திருத்தொண்டர் திருவந்தாதியிலே இருபாடல்களில் அவரைப் பாடியுள்ளார்

(12) ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்று திருத்தக்கதேவர் சேரமானின் தமிழ்ப்புலமையைப் பாராட்டியுள்ளார். அந்தகக் கவிவீரராகவமுதலியார் திருவாரூருலாவின் அவையடக்கத்தில் ''ஆதியுலாவில் உருகும் ஆரூரன்'' என்று கூறுவதன் மூலம் தாம் ஆதியுலாவின்மீதுகொண்ட ஈடுபாட்டை இறைவனுடனுந் தொடர்புபடுத்திக் காட்டியுள்ளார். அருணகிரிநாதருங்கூட ''நாதவிந்து கலாதி நமோநம......'' என்னுந் திருப்புகழில் ''ஆதிஅந்தவுலாஆசுபாடியசேரர்'' எனச் சேரமானை 'ஆசுகவி' ஆக்கியுள்ளார். சேரமானின் மூன்று பிரபந்தங்களும் பதினோராந் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளமையும் அவற்றின் சிறப்பைக் காட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறுகச் சேரமான்பெருமாள்நாயனர், தாம் இறைவன்மீது கொண்டிருந்த இறையான்மத் தொடர்பாகிய பக்தியைத் தமது கவிதையனுபவத்தாலும் கற்பனு சக்தியிஞலும் மூன்று பிரபந்தங்களிற்றந்துள்ளார், இம்மூன்று பிரபந்தங்களிலும் நாம் சேரமானின் பக்திப் பெருக்கினையும், தமிழிலக்கியப் புலமையினையும், வடமொழி இலக்கிய ஆற்றலையும் காண்கின்றோம். முடிசூடி அரசாண்டு, பின்னர் சிவனடிசூடிச் சிவபக்கதனுகிப் பாவியற்றியருளிய சேரமான்பெருமான் நாயனுர் பாவாணராகிப் பெரும்புலவராக விளங்குகின்றூர்

மேலேகொடுக்கப்பட்டுள்ள எண்களின் விளக்கம்

(1) தமிழ் இலக்கியவரலாறு-நுன்முகம்-பேராசிரியர் வி. செல்வநாயகம்.

(2) தொல்காப்பியம் பொருளதிகாரம்-

(3) தொல்-பொருள்-21 ம் சூத்திரம்.

(4) சிலப்பதிகாரம்-கால்கோட்காதை-68—73 வரி.

(5) நந்திக்கலம்பகம். '' எனதேகலேவளேயும் ''—2.

(6) ஆதியுலா 132—152 வரி.

(7) இந்துதருமம் 1966—67, ' சேரமான்செந்தமிழ்மாலே '. கலாநிதி க. கைலாசபதி.

(8) தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி. மு. இராகவையங்கார்.

(9) பொன்வண்ணத்தந்தாதி 19 ல் பாடல்.

(10) பொன்வண்ணத்தந்தாதி முதலாம் பாடல்.

(11) திருவாரூர்மும்மணிக்கோவை 1 ம் பாடல்.

(12) திருத்தொண்டர் திருவந்தாதி 44, 45 ம் பாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் கண்ணன் பாட்டு

ஈழவேந்தன்

## பாரதி தன் கவிதை பற்றிய வழங்கிய தீர்ப்பு.

பாரதியின் கண்ணன் பாட்டு இங்கு ஆராயமுன் அவன் தன் கவிதைகளின் தன்மைபற்றி வழங்கிய கருத்துக்களை முதலல் ஈண்டு எடுத்துக்காட்டல் ஏற்புடைத்து. அவன் தன் கவிதைகளை பற்றிக் கூறுகையில்

சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொற் புதிது—சோதிக்க
நவ கவிதை, எந்நாளும்
அழியாத மகாகவிதை என்று

தன் கவிதைகள் பற்றி தானே தீர்ப்பு வழங்கியுள்ளான். அவன் தன் கவிதைகளைப் பற்றிகூறிய முடிபு யாம் அனைவரும் எற்கக் கூடியதாகவே இருக்கிறது. காரணம் பாரதி மறைந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிய பின்பும் அவனுக்கு தமிழர்கள் வாழுகின்ற நாடுகள் அனைத்திலும் ஆண்டு தோறும் விழாக்கள் எடுக்கப்படுவதும் அவனுடைய பாடல்களில் இருந்து மேற்கோள்களை தமிழ் அறிஞர்களும் ஏன் தமிழ் மாணவ மாணவியர்களும் நாள் தோறும் எடுத்து ஆளுவதையும் யாம் நாளும் பொழுதும் காணும் பொழுது தமிழ் மக்கள் உள்ளத்தில் அவன் எவ்வளவு தூரம் நிலையான இடம் பெற்றுவிட்டான் என்பதை நன்கு உணரத்தக்கதாய் இருக்கிறது.

பாரதியின் பாடல்களில் தலைதூக்கியுள்ள பண்பு யாது.

எனினும் பொதுவாகப் பார்க்கையில் எம்முட்பலர் பாரதியை வெறும் ஒரு விடுதலைக் கவிஞன் என்ற நிலையில் மட்டுமே கண்டுகளிப்பதைக் கண்ணுற்று யாம் கவலையுற வேண்டியிருக்கிறது. இவ்விதம் பாரதியைப் பலர் அரசியற் கண்கொண்டு பார்ப்பதற்கு தமிழகத்திலும் சரி ஈழத்திலும்சரி நிலவுகின்ற அரசியல் நிலை காரணம் போலும் எனினும் 1949 ம் ஆண்டு வெளிவந்த பாரதி பாடல்கள் தொகுப்பு நூலை நுணுகி ஆராயின் ஏறக்குறைய 720 பக்கங்கள் கொண்ட அந்நூலில் நாட்டின் விடுதலைக்காக அவன் பாடிய நேரடிப் பாடல்கள் 113 பக்கங்களையே ஆட்கொண்டிருக்க அவன் நூலில் தோத்திரப் பாடல்கள் 106 பக்கங்களையும் வேதாந்தப் பாடல்கள் 39 பக்கங்களையும், விநயகர்நான்மணிமாலை 17 பக்கங்களையும் கண்ணன் பாட்டு 50 பக்கங்களையும், பாரதி அறுபத்தாறு 18 பக்கங்களையும், குயில் 20 பக்கங்களையும். பாஞ்சாலி சபதம் 141 பக்கங்களையும், சுயசரிதை 133 பக்கங்களையும் உள்ளடக்கியிருப்பதை யாம் காணக்கூடியதாகவிருக்கிறது. வேறு சொற்களில் விளம்பின் 720 பக்கங்கள் கொண்ட அவர் நூலில் 113 பக்கங்களை மட்டுமே நேரடி அரசியலுக்கு ஒதுக்கப்பட்டிருக்க மற்றைய பக்கங்கள் ஏனையவேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை யாம் காணக்கூடியதாக இருக்கிறது.

## தலையாய முப்படைகள்

பாரதி படைத்த பாடல்கள் பல்லாயிரம் எனினும் அவற்றுள் தலையாய படைப்புகள் என்றும் நிலைத்துநின்று வாழும் படைப்புகள் பாஞ்சாலி சபதம், குயில், கண்ணன் பாட்டு ஆகிய மூன்று தலைப்புகளில் அமைந்த பாடல்கள் என்பது பெரும்பான்மையான தமிழ் அறிஞர்களின் முடிபு ஆகும். இவற்றின் பெருமையை பின்வரும் முறையில் ஒருகவிஞன் சுவைபட கவிதையிலேயே அமைத்துள்ளான். இதோ அவன் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஞ்சாலி சபதத்தைப்
படித்திட்டால், நாக்கினிலே
பாயும் தேன் தேன்
மாஞ் சோலை குயிற்பாட்டைப் படித்திட்டால்
காதலின் மகிமை தோன்றும்
தீஞ்சுவை கண்ணன் பாட்டைப்
படித்திட்டால் கற்பனைச் சிறப்பைக் காட்டும்

கற்பனைச்சிறப்பு மிக்க கண்ணன் பாட்டை பாரதி எவ்விதம் படைத்துள்ளான் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

## பண்டை மரபில் வந்த பாரதி

'' மாயோன் மேய காடுறை உலகம் '' என்று ஒல்காப்புகழ் வாய்ந்த தொல் காப்பியனரால் முல்லை நிலத் தெய்வமாக குறிக்கப்பட்ட திருமாலைத்தான் பண்டைத் தமிழரால் வழிபடப்பட்ட தெய்வங்களில் ஒன்முன இத்தெய்வத்தை தான் பாரதி கண்ணன் என்ற பெயரால் அழைத்து பக்திச்சுவைநனி சொட்ட பாடல்கள் பல யாத்துள்ளான். இக்கண்ணன் பாடலில் பாரதி கண்ணனைத் தாயாக, தந்தையாக, காதலனாய், காதலியாய், விளையாட்டுப்பிள்ளையாய், பெண்குழந்தையாய், சேவகனாய், குருவாய் சீடனாய், ஆண்டவனாய், குலதெய்வமாகப் பல வடிவங்களில் உருவகித்து வழிபடுவதைக் காண்கிறோம். ஆண்டவனின் பலவடிவிலே பல உருவிலே கண்டு வழிபடுவது பண்டு தொட்டு இன்று வரை இந்திய மண்ணில் நிலைத்த ஒரு பக்தி இலக்கியத்திற்கு வழிகண்ட காரைக்கால் அம்மையார் தொட்டு நாயன்மார்கள், ஆழ்வார்கள், வள்ளலார்ஊடாக இன்றைய 20 நூற்றாண்டுவரை இவ்வழக்கு நிலைத்து வருவதை யாம் கண்கூடாக காண்கிறோம்.

## பாரதி கண்ட நாயகநாயகி பாடல்

முன்பு கூறியதற்கு அமைய கண்ணனை பலவடிவங்களில் வழிபடும் பாரதி விவ்வடிவங்களுக்கு தனித்தனியே ஒரு பாடற் தொகுதியே வழங்கிய பாரதி கண்ணனைக் காதலனாய் காதலியாய் காணும் போது முறையே ஆறுஆறு பாடற்தொகுதிகளை ஒதுக்கி தலைவன் தலைவி நாயக நாயகி பாவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காண்கிறோம்.

## உலகின் பொதுமரபும் இதுவே

இந்த நாயக நாயகி நிலையில் இறைவனை வழிபடுவதும் இந்திய மரபில்ஊறிய பண்பாகும். தமிழ் நாட்டில் சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் வட நாட்டில் மீராய் போன்ற அடியார்களும் இப்டணியில் ஊறி திளைத்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஏன் கண்ணன் வரலாறு கூறும் பாகவதமும் இராதைபோல் சலை உடுத்து கண்ணனைத் தன் காதலனாய் வழிபட இராமகிருஷ்ணரும் இத்துறையில் பாரதிக்கு முன்னோடிகள் என்று கூறலாம் ஏன் கிறிஸ்தவ இலக்கியத்தில் கூட இம் மரபு நிலவியதென்பதற்கு Song of Solomon (சொலமன் பாடல்) என்று கூறப்படும் The Song of Songs (பாடலிற்பாடல்) என்ற நூலில் வரும் "Let him kiss me with the kisses of his mouth for thy love is better than wind (அவர் தன் வாயினல் முத்தங் களை சொரியட்டும் அது திராட்சைசாற்றிலும் சுவையுடையது என்றுவரும் வரிகள் எம்கூற்றினை வலியுறுத்திநிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மரபு பற்றி ஆனந்தக்குமாரசாமி

இந்திய மண்ணில் நிலைத்துவிட்ட இந்தக்காதல் உணர்வை "Tranformation of nature in art" (கலையில் இயற்கை மாற்றப்படும் முறை) என்ற நூலில் கலைக்குரிசில் ஆனந்தக்குமார சாமி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார் 'In India the conditions of humanlove from the first meeting of eyes to ultimate self objectives have seemed spiritually significant and there has always been a free and direct use of sexual imagery in religious symbolism" (முதற் சந்திப்பில் தொடங்கி தன்னை மறக்கும் உச்ச நிலைவரை இந்தியாவில் நிலவும் மானிடக்காதல், ஆன்மீகத்தை பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்ததாகவே விளங்கியுள்ளது. இதனால் சமய சின்னங்களில் பாலியல் உருவங்கள் எதுவித தடையுமின்றி நேரடியாகவே கையாளப்பட்டு இருக்கிறது).

வ. வே. சு ஐயரின் கருத்து

ஆனால் காதலன் காதலி நிலையில் பாடல்களை இயற்றி இறைவனை வழிபடும் போது சிலசிக்கல்கள் ஏற்படத்தான் செய்கின்றன. இதை சிறந்த இலக்கியத்திறன் ஆய்வாளராகிய வா. வே. சு ஐயர் பின்வரும் முறையில் கூறும் கருத்து சிந்தித்தற் குரியது ஆனால் இந்தப் பாவத்தை ஆளுவது கத்தியின் கூர் பக்கத்தின் மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒருவரம்பு இருக்கிறது அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால் அசந்தர்ப்பம் ஆகிவிடும். சிறிபாகவதத்திலும் கூட கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்து விட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம் அவர் மேலும் கூறுகையில்

கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல் ஞாலம் ஆவேனும் யானே என்றும்

என்று தொடங்கும் திருவாய் மொழிகளையும் கற்பூரம் நாறுமே கமலப்பூ நாறுமோ திருப்பவளச்செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ என்று தொடங்கும் ஆண்டாளுடைய பாசுரங்களையும் போல செயிரின்றி இப்பாவத்தை பாடுவது அனேகமாய் அசாத்தியம்.

நமது கவியும் இப்பாவத்தை விவரிக்கையில் பரபக்திலய விடச் சாரீமான காதலை விதிகமாக வர்ணித்திருக்கிறார். ஆனால் சுகப்பிரமமே நிறுத்த முடியாதான தராசுமுனையை நம்மாசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறை கூறலாமா.

காதல் ததும்பும் கண்ணன் பாடல்கள்

வ. வே. சு ஐயரின் மேற்குறித்த கருத்துக்களை நினைவிற் கொண்டு பாரதி பின்வரும்

வாலைக்குமரியடி கண்ணம்மா
மருவக் காதல் கொண்டேன் என்றும்
முத்தவர் சம்மதியில் வதுவை

முறைகள் பின் செய்வோம்
காத்திருப்பேனோடி இதுபார்
கன்னத்து முத்தமொன்று என்றும்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லியிடையினையும் ஓங்கி முன்னிற்கும் இந்த
மார்பையுமூடுவது சாத்திரம் கண்டாய்
வல்லிடையும் மார்பிரண்டையும் துணி
மறைத்ததனுலழகு மறைந்ததில்லை

சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை முகச்
சோதி மறைந்த மொரு காதலிங்குண்டோ என்றும்
ஓரிருமுறை கண்டு பழகிய பின் வெறும்
ஒப்புச்சாட்டுவதிற் நாணமென்னடி என்றும்

யாரிருந்தென்னையிங்கு தடுத்திடுவர் வலு
வாகமுகத்திரையை யகற்றிவிட்டால்
காரியமில்லையடி வீண்பசப்பில்லை கனி
கண்டவன் தோலரிக்கக் காத்திருப்பேனே என்றும்
கூடிப்பிரியாமலே ஓரிரவெல்லாம்
கொஞ்சிக்குலவியங்கே

ஆடி விளையாடி உன்றன் மேனியே
ஆயிரம்கோடி முறை
நாடித்தழுவி மனக் குறைதீர்த்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய் நிற்கவே தலம்
பண்ணியதில்லையடி ........................... என்றும் பாரதி கண்ணனை தன் காதலி கண்ணம்மாவாக உருவதித்துப் பாடிய பாடல்களை யாம் படிக்கும் போது கடவுள் காதலோ கண்ணன் காதலோ ஏற்படுவதற்குப் பதில் உலகியல் அடிப்படையில் நடைபெறும் காதல் உணர்வே எம் உள்ளத்தில் தலைஹ்க்குகிறது.

தெ. பொம். மொழியும் மாறுபட்டகருத்து

ஆனுல் எம்மனநிலையை உணர்ந்து விளக்கம் கொடுப்பது போல் தெ. பொ. மீ பின்வருமாறு கூறுகின்ருர். பாரதி கண்ணன் பாட்டில் பாரதி கண்ணனைத்தான் காதலியாக தன் அழியாத அன்பிற்கு உரியவராக பாடியுள்ளார். மறைபொருள் மொழியில் கூறப்படும் பால் உணர்ச்சி ( SEX ) வெறும் உடம்போடு ஒட்டிதயல்ல உடம்பு முற்ருக நீக்கப்பட்ட நிலையில் கடவுளுக்கும் தனக்கும் பல்வகை உறவுகளை கவிஞன் உருவகித்து கூறுவது எமக்கு அதிர்ச்சியை தரத்தேவையில்லை.

எம்முடிபு

வ. வே. சு. ஐயரின் கருத்துடன் தெ. பொ. மீ. யின் மேற்குறித்த கருத்தை ஒப்பிடும் பொழுது எம்மூளை ஒரளவு குழம்புகிறது. தீர்ப்புக்கூறுவது கடினமாய்த்தான் இருக்கிறது என்னினும் மேனும் துருவி ஆராயும்போது வா. வே. சு. ஐயரின் கருத்தே கூடியளவு வலுவுடையதாக எமக்குத் தோன்றுகிறது.

பாரதி கையாண்ட பலவகைச் சிறப்புகள் :

பாரதியின் கண்ணன் பாடல்களில் காதலரின் தவிக்கும் நிலையை உள்ளத் துடிப்பை துண்டிப்புழுவினைப் போல் சுடர் விளக்கினைப் போல் போன்ற சுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
COL AR

சொட்டும் உவமைகளால் கூறிச் செல்வது பாரதியின் தனிச்சிறப்பாகும். மற்றும் காதல் வயப்பட்ட காதலிக்கு உணவு செல்லாத நிலையையும் உறக்கம் கொள்ளாத நிலையையும் உலகியல் இயற்கை நிலைக்கு ஏற்ப அழகுறப்படம் பிடித்துக் காட்டுகிறான் பாரதி. அத்துடன் பாரதி போச்சே ஆச்சு போன்ற கொச்சைத்தமிழ் சொற்களை சுவைகுன்றாத முறையில் உரிய இடங்களில் கையாண்டு கொச்சைச் சொற்களும் சிறப்பிடம் பெறச் செய்துள்ளான். எனினும் சில இடங்களில் பாரதி தன் கண்ணன் பாடலில் கையாளும் உருவங்களில் சில உச்சக்கட்டத்திற்கு சென்று வீழ்ச்சியடைவதையும் யாம் காணத்தக்கதாய் இருக்கிறது.

## கண்ணன் என் சேவகன் ஆழ்ந்த ஆன்மீகத்தின் உள்ளடக்கம்.

எம்கட்டுரையின் தொடக்கத்தின் கூறியதற்கு அமைய கண்ணனை பலவடிவங்களில் கண்டு வழிபட்டவன் பாரதி அவ்வெவ்வேறு வடிவத்தையும் அவ் வெவ்வொரு வடிவத்தின் ஊடாக அவன் உணர்த்தி செல்கின்ற தத்துவங்களையும் இங்கு விரிக்கின் மிகப் பெருகும் என்று அஞ்சுகிறேன். குறிப்பாக கண்ணன் என் சேவகன் என்ற பாடலில் நல்ல நகைசசுவையையும் ஆழமான ஆன்மீகத்தையும் பாரதி உணர்த்தியுள்ளான் என்பது என் கருத்து ஆகும். தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிகளேதும் இல்லை நானோர் தனியாள் நரை திரை தோன்றுவிடினும் ஆனவயற்கு அளவில்லை என்ற வரிகளும் நெஞ்சில் உள்ள காதல் பெரிதெனக்கு காசு பெரிது எனக்கு இல்லை என்ற விரியும் பன்னடக்காலத்து பைத்தியங்கள் வொன்றெனவே கண்டு மிகவும் களிப்புடனே நாளவனை ஆளாகக் கொண்டு விட்டேன் அன்று முதற் கொண்டு என்று வரும் வரிகளும் உணர்த்தும் ஆழ்ந்த மெய்ப்பொருள் சில சொற்களில் எடுத்தியம்பியல் எளிது அல்ல அவை உற்று உணரவேண்டியவை.

## கண்ணனை வழிபட்டதால் பாரதியடைந்த பலன்கள் யாவை

சுருங்கக் கூறின் பாரதி தன் கண்ணன் பாட்டில் தனக்கு எல்லாம் ஆய் காட்சியளித்த தனிமையையும் விதனல்தான் அடைந்த எல்லையற்ற நலன்களை இன்பங்களை எல்லாம் நண்பனாய், மந்திரியாய் நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி என்று சொன்னான் இங்கு இவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் கண்ணன் என தக்தே கால்வைத்த நாள்முதலாய் எண்ணம் விசாரம் ஏதுமவன் பொறுப்பாய்ச் செல்வம், இளமாண்பு சீர்மாண்பு சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், தெளிவே வடிவாஞ் சிவயோகம் எனும் ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண் என்று அவன் பேரின்ப நிலையில் பெரிமித உணர்ச்சியுடன் உரைக்கும்போது எம் உள்ளமும் எம்மை மறைந்த நிலையில் அவன் உள்ளத்தோடு ஒன்றுகிறது.

## ஆழ்வாரின் அருட் பாக்களின் தாக்கம்

பாரதியின் 23 பாடற்றெகுதிகளில் 50 பக்கங்களை உள்ளடக்கி கண்ணனின் பல்வேறு வடிவங்களில் கண்டு கனிந்த கவிதைகளை கன்னித் தமிழுக்கு அளித்துள்ளான் இவரின் இக்கவிதைகளை கவிதையழகோடு பண்ணழகும் தாளத்தோடு பாடத் தக்க இசைத்தன்மையும் பெற்று விளங்குகின்றன. பாரதியின் பாடல்களை படிக்கும் போது ஆழ்வார்களின் அருட்பாசுரங்கள் எம் நினைவலைகளில் மோதுகின்றன. குறிப்பாக பாரதியை பெரியாழ்வார் பெரிதும் ஆட்கொண்டுள்ளார் என்பதற்கு சான்றுகள் பலவுண்டு.

249992

Donated by:- ...LARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

ஒப்புநோக்கல்.

எனினும் பாரதியின் கண்ணன் பாடல்களை ஆழ்வாரின் அருட்பாக்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மதிப்புரை வழங்கும்போது வா. வே. சு. ஐயர் வழங்கிய பின்வரும் கருத்திற்கு வழி மொழி கூறும் நிலையிலேயே யாம் இருக்கின்றோம். தெய் விகக் காதல் கனிவில் பாரதியின் பாடல்கள் ஆண்டாள் பெரியாழ்வார் பாசுரங்கள் அளவு உச்சியை தொடவில்லை என்றாலும் பாரதியின் பாடல் சிறப்பைக் குறைத் மதிப்பிடமுடியாது.

எம் இறுதி முடிபு.

தமிழும் தமிழினமும் தமிழ் இலக்கியமும் உள்ள வரையில் பாரதியின் கவித்து வம் மிக்க கண்ணன் பாட்டும் நிலைமிசை நிலைத்து நிற்பதும் உறுதி.

— முற்றும் —

ஆத்ம நலத்துக்கு பக்தி நெறி
உடல் நலத்துக்கு யோக நெறி
ஆத்ம தூய்மைக்கு வாய்மை
பிறத் தூய்மைக்கு மில்க் வைற்

★

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "இன்னமும் என் மேல் வர்மமோ அம்மா"

இராகம்-வாசஸ்பதி தாளம்-ஆதி

பல்லவி

இன்னமும் என்மேல் வர்மமோ அம்மா
ஈஸ்வரி கடைகண் பார்த்தருளவே (இன்ன)

அனுபல்லவி

அன்னபூரணி அபயப்ரதா
ஜெகதாரிணி பவதாத்ரிஉனக் (கின்ன)

சரணம்

மூடப்பிள்ளையேனும் பெற்றறெடுத்ததாய்
ஓடென்றுவெறுத்து தள்ளுவதுமுண்டோ
ஆடல் அழகி நின் ஆடும்பதத்தை என்றும்
பாடும் பணியில் என்னை ட ணிப்பாய் அம்மா (இன்ன)

"பட்டதெல்லாம்போதுமம்மா"

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி

பல்லவி

பட்டதெல்லாம் போதுமம்மா இனிப்
படமாட்டேன் என்னுயிர் உனக்கே பாரமம்மா (பட்ட)

அனுபல்லவி

எட்டுக்குடி வேலனை ஈன்றவளேதில்லை
நட்டுவன் பங்கிலுறை நாயகியே இனிநான் (பட்ட)

சரணம்

கற்றறியாமூடன் குற்றங்கள் புரிந்தாலும்
பெற்றவன் மனம்பொறுத்து பற்றுதல் முறையாகும்
நற்றவத்தோர் போற்றும் நாரணியே உன்னிரு
பொற் பதங்கள்பிடித்தேன் சற்றேனும் இரங்கம்மா (பட்ட)

கே. கே. கிருஷ்ணபிள்ளை
(இசை ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments

of

# Ratnams

*Dealers in Textiles*

**146, 2nd Cross Street,**
**Colombo 11.**

*Phone: 20361*

With the best Compliments

of

# T. A. Mohamed Meera Saibo & Co.,

ARECANUT MERCHANTS & RICE COMMISSION AGENTS.

**17 & 19, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

Telegrams: TEEYAYEMCO

Telephone: 34379



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகந்தை அழிவைக் கொடுக்கும்

கதிர்காம வேல் உற்சவம் வெகு விமரிசையாக நடந்துகொண்டிருந்தது. அன்றிரவு ஆலயத்தில் எங்கு பார்த்தாலும் மின் விளக்குகள் மிகவும் பிரகாசமாகப் பல வண்ண ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே மக்கள் வெள்ளம்! திருவிழாவில் கலந்துக்கொள்ள ஏழைகளும், செல்வந்தர்களும், தொழிலாளிகளும், முதலாளிகளும், பக்தர்களும் பாமரர்களும் கூடியிருந்தனர் முருகன் தரிசனத்துக்காக. ஆலய வாசல்களெங்கும் வாழைமரங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. அவைகள் அழகிய வண்ணக் காகித வேலைப்பாட்டுடன் மிளிர்ந்தன. இந்த மங்கலத் தோற்றம் எல்லோருககும் மனமகிழ்ச்சியையும், பெருமையையும் கொடுத்தது.

சுப நேரத்தில் பூசை ஆராதனை தொடங்கியது. அதை மக்களுச்குத் தெரிவிக்கவோ என்னவோ ஆலய மணியின் ஓசை நாலா பக்கங்களிலும் ஒலித்தது. பக்தர்களின் கவனம் இப்போது ஆலயத்தை நாடியது. பிரமாண்டமான அந்த மணியின் பலத்த ஓசையினால் ஏற்பட்ட அதிர்ச்சியில், பக்கத்தே கட்டப்பட்டிருந்த வாழைமரம் சிறிது நடுங்கி விட்டது! இதைக் கண்ட ஆலயமணி கல, கல வெனச் சிரித்தது. (இக் கதையில் புதுமையென்னவென்றால் உயிரற்றவை பேசுகின்றன. முருகன் அருளால்)

நம்மைப் பார்த்து யார் சிரிக்கிறார்கள் என்று எண்ணிய வாழை சுற்று முற்றும் புரியாமல் பார்த்தது. மணி மறுபடியும் சிரித்தபோது வாழை பார்த்துவிட்டது. தன்னைப் பார்த்து அது ஏன் சிரிக்கிறது என்ற நினைப்பில் வாழை, ஆலய மணியைப் பார்த்து, " நீ ஏன் என்னைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தாய்? " என்று கேட்டது. " நான் அப்படித்தான் சிரிப்பேன்! நீ என்ன செய்துவிடுவாய் "? என்று ஆலயமணி கேட்டது. " நான் என்ன செய்வேன் என்பது இருக்கட்டும்! நீ என்னைப் பார்த்துச் சிரித்ததற்குக் காரணம் என்ன? " என்று வாழை வினவியது.

"உன் உடல் பல வண்ணங்களால் மின்னுகிறது. இருந்தாலும் உன்னை யார் பார்க்கிறார்கள்? இங்கேபார் என்னைப் பார்! எத்தனை பக்தர்கள் எனது ஓசையில் பரவசமடைகிறார்கள்! பூசை ஆரம்பம் என்றால், எனது நாதத்தைக் கேட்டல்லவா கூடுகிறார்கள்! நீ சற்று பொறுத்துத்தான் பாரேன்!" என்று ஆலயமணி பெருமையாகச் சொல்லிச் சிரித்துக்கொண்டது. ஆலயமணி தன்னைக் கேவலப்படுத்துகிறது என்பதை வாழைமரம் புரிந்து கொண்டது. ஆனாலும் அது வருந்தவில்லை. குறைவில்லாத பொருள் உலகத்தில் என்ன இருக்கிறது? என்று எண்ணி அது தனக்குத்தானே சமாதானப் படுத்திக் கொண்டது. அந்தப் பொல்லாத மணி விடவில்லை. " ஏன் பேசாமல் இருக்கிறாய்? " என்று கேட்டு மீண்டும் சிரித்தது.

" உலகம் முழுவதும் பரந்துள்ள கடல்நீர் உப்புகரிக்கிறது! அவ்வளவு பெரிய குறையுள்ள அந்த நீர் உதவியே செய்யவில்லை என்று அர்த்தமா? மனிதன் உணவாகக் கொள்ளும் மீனை அந்நீரில் இருந்து பெறவில்லையா? அவன் கப்பலில் பிரயாணஞ் செய்வது, பரந்து கிடக்கும் கடல் நீரில்தானே! இந்தக் கணத்தில் உன் ஓசையைக் கேட்டு பக்தர்கள் பரவசமடையலாம்! ஆனால் என்னால் இங்கு செய்யக்கூடிய உதவி இது ஒன்று தான்! " என்று வாழை கூறியது. அது இப்படிக் கூறியதும் ஆலயமணிக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டானது. நாம் கூறியதை அப்படியே வாழை ஒப்புக் கொண்டு விட்டதே என்று அதன் மனம் குளிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் ஓய்வின்றி வரிசையாக ஆலயமணியை வலம்வந்து மணியை அடித்தனர். தன்னையடித்து ஓசையெழுப்புவதையே பெருமையாகக் கொண்டிருந்ததால், மணிக்கு வலிக்கவில்லை. பதிலாக அதன் கர்வம் மேலும் வளர்ந்தது. கோயிலுக்கு வருபவர்கள் எல்லோரும் முருகனை வணங்க வருகிறார்கள் என்பதை அது பூரணமாக மறந்தது. எப்படியிருந்தும் தன்னோசை கேட்டபின்பு தான் முருகனுக்குப் பூசை நடக்கிறது ! என்ற பிழையான அபிப்பிராயம் அதற்கு ஏற்பட்டது.

வாழை மரத்துக்கு அதன் நடத்தை வெறுப்பைக் கொடுத்தது. ஏன் மனிதர்களிலும் இப்படித்தானே ! '' தன்னைவிட உயர்ந்தவன் இல்லை '' என்ற இழிவான கொள்கை ஆலயமணிக்கு இருந்தது கண்டு அது மதிக்காமல் இருந்தது. வாழையின் மௌனத்தைக் கண்ட ஆலயமணி, ஆணவமிகுதியால் அதை வேண்டுமென்றே விவாதத்துக்கு இழுக்க ஆரம்பித்தது. '' பாவம் ! ஏன் கால் கடுக்க நிற்கிறாய் ? இப்படிக் கவனிப்பாரற்று நின்றுகொண்டிருப்பதில் உனக்கு என்னதான் நன்மை கிட்டப்போகிறது '' ! அதைக் கேட்ட வாழை சிரித்தது. என் இனம் எல்லாவற்றுள்ளும் மேலானது. நாங்கள் எப்போது பிறந்தோமோ அன்று தொடக்கம், இறப்புவரை ஈதலையே குறிக்கோலாகக் கொண்ட இனம். அத்தகைய குடியில் பிறந்த நான் இப்போது எனது கடைசி மூச்சில் இங்கிருப்பதை பெருமையாகக் கொள்கிறேன் ! இக் கோயிலில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமான் தமிழ்க்கடவுள் ! அடியாருக்குத் தோழர் ! அன்பருக்கு அன்பர் ! அவராலயத்தில் எனது உயிர்போவதை எனது வாழ்க்கையில் கிடைக்கமுடியாத பேருகக் கருதுகிறேன் !'' வாழை பெருமையாகக் கூறியது. ஆலய மணிக்குக் கடுங்கோபம் உண்டானது. '' என்னை விடவா உன் சேவை மிகுந்தது ! அறிவில்லாதவனே ''! என்று சபித்தது.

'' அறிவு இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு ஆணவமாக உன்னைப்போல் வாழ்வதைவிட, அறிவில்லையென்று வாழ்வது எவ்வளவோ மேல் ! நீ என்னைப் பார்த்து, ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறாய் என்று கேட்டாய் ! அப்படிக் கேட்ட நீ மட்டும் இந்தக் கோபுரத்தில் தொங்கியிருந்து என்னசாதிக்கிறாய் ? '' என்று கேட்டது வாழைமரம்.

'' அப்படி வா வழிக்கு ! நான் உன்னைச் சொன்னதற்காக நீ என்னைச் சொல்கிறாய் ! அந்தப் போலிச் சமாதானத்தில் நீ என்னிடம் தப்பமுடியாது ! நான் உயரமான இடத்தில் இருக்கிறேன் ! முருகனைவிட ! அதோ பக்தர்கள் உள்ளே கூட்டமாக சூழ்ந்து நிற்கிறார்களே அவருக்கு முன் ! அதேபோல் இங்கே பார் மக்களை ! போட்டி போட்டுக்கொண்டு என்னை சூழ்ந்து நிற்பதை ! முருகனைவிட சுதந்தரமாக நான் வாழ்கிறேன் ! முருகனை உள்ளேவைத்து இரவெல்லாம் பூட்டிவிடுகிறார்கள். பகலில் கூடத்தான் ! பூட்டாதீர்கள் என்று அந்த முருகனால் சொல்ல முடிகிறதா ? முருகனும் என்னைப்போன்ற சிலைதானே ! அவருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் ! இதையெல்லாம் உணராமல் பேசுகிறாயே ? '' என்று ஆணவத்தோடு கூறியது ஆலய மணி.

மணிக்கு ஏற்பட்டுள்ள அகங்காரத்தைக் கண்டு வாழை வேதனையடைந்தது. ஒரு புறம் ஆத்திரம் ! '' மணியே ! நீ என்னைக் குறைவாகப் பேசினாய் ! பொறுத்துக்கொள்வேன். ஆனால் கண்கண்ட தெய்வமாகிய முருகக்கடவுளை நீ குறைவாகப் பேசினால் நான் பொறுக்கமாட்டேன் ! '' ஆத்திர மிகுதியால் வாழை குமுறியது.

'' என்ன சொன்னாய் ! நான் முருகனைப்பற்றிக் குறைவாகப் பேசினால் என்ன செய்து விடுவாய் ? நான் இல்லையென்றால் இந்தக் கோயிலுக்கு யார் வருவார்கள் ? என்று ஆணவத்தோடு ஆலயமணி கேட்டது. வாழைமரம் பயந்தேவிட்டது ! '' நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைவிட உயர்ந்தவனாய் இருக்கலாம்! ஆனால் முருகப் பெருமானைவிட நீ உயர்ந்தவன் என்று சொல்லலாமா? ஏதோ பேசியது பேசிவிட்டாய். தெரியாமல் பேசியதற்காக என்னை மன்னித்துவிடு'' என்று மன்றாடு. உன்னை மன்னித்து விடுவார்! வாழை மிகவும் உருக்கமாகக் கூறியது. அது எவ்வளவு கூறியும் ஆலயமணி கேட்கவில்லை. ''நீ இன்று இங்கு இருப்பாய் நாளை குப்பையில் இருப்பாய்! நான் பல்லாண்டு வாழவேண்டியவன்! உன்னிடம் கதைக்க ஆரம்பித்ததே தவறு'' என்று தனக்குள் பேசிக்கொண்டது. ''ஆணவம் மிகுந்த ஆலய மணியே உனக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது. இறுதி வேளையில் என்னை நீ நினைக்காமலா இருக்கப் போகிறாய்! என்று வாழை கூறிமுடிக்கையில், சந்தடி குறைந்திருந்தது. ஆம் மக்கள் போய்விட்டனர். விடிந்தது! விழாவும் முடிந்தது! வாழை மரம் அகற்றப்பட்டு இப்போது உயிரற்ற நிலையில் குப்பையோடு குப்பையாகப் போய்விட்டது.

ஒரு வாரம் சென்றிருக்கும். ஒரு நாள் பலத்த மழையுடன் புயல்போல் காற்றுவீசியது. கோயில் வளவுக்குள் ஓங்கி வளர்ந்திருந்த மாமரத்தின் பெரியகிளை நேராக மணி தொங்கிக் கொண்டிருந்த தூணில் விழுந்துவிட்டது. மணிசிதறி உருண்டது விதற்குப்பெரிய காயம்! விதன் பெரும் பகுதிகளில் வெடித்துவிட்டதால் அது உபயோகமற்றது என்று ஆலய நிர்வாகிகள் அதை கோயிலின் பின்புறத்தே போட்டு விட்டார்கள். இவ்வளவு நடந்தும் அதன் ஆணவம் அடங்கவேயில்லை. ஒரு வாரமாக கோயிலில் மணியோசையின்றி வெறிச்சோடிருந்தது. திடீரென ஒரு நாள் மணிச்சத்த கேட்டு அது அதிர்ச்சியடைந்தது. எல்லையில்லாத பொறாமையும் ஏற்பட்டது. ''அவன் இன்று வந்தவனாம்! எல்லோரும் அவனையல்லவா நாடுகிறார்கள்! இந்த உலகமே இப்படித்தான்! எவன் ஒருவன் வசதியோடு வாழ்ந்தபோது அவன் நல்லவன் என்று போற்றும்! அவன் சூழ்நிலைகளின் காரணமாக வசதிகுறைந்தவனாகும்போது தூற்றும்! இதேகதிதானா எனக்கும்? நாளைக்கு என்னையும் கவனிக்காமலா இருக்கப் போகிறார்கள் என்று தன் மனத்துள் சமாதானம் செய்து கொண்டது. அந்த நன்னாளை எதிர்பார்த்ததில் அது இலவு காத்த கிளியானது. இதற்கிடையில் அக்கோயிலின் சுற்றுப் புறங்களின் வசதிக்காக, இடைஞ்சலாக இருந்த அந்தஆணவமிக்க உடைந்த மணியை கோயிலுக்கு அப்பால் சனங்கள் நடமாட்டமில்லாத பகுதிக்குத் தள்ளிவிட்டார்கள்! அது தாறுமாறாக பள்ளத்தே உருண்டு கடைசியில் வேலியின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த வாழைமரமொன்றில் மோதி அவ்விடத்திலேயே நின்றுவிட்டது. மயக்கம் தெளிந்து இலேசாகக் கண்திறந்த மணிக்கு நெஞ்சு வெடித்துவிடும் போன்ற பிரமை ஏற்பட்டது தனது பழைய எதிரியின் இனத்தவனின் காலடியில் கிடப்பதையெண்ணி வெட்கப்பட்டது. இந்த நேரத்தில் தான் தனக்கும் வாழைமரத்துக்கும் ஏற்பட்ட சச்சரவு நினைவுக்கு வந்தது ''முருகக் கடவுளை நான் நிந்தித்தேன்! எனக்கு இது ஒரு நல்ல பாடம்! ஆனால் என் கர்வம் என்னை விட்டுப் போக வேண்டுமென்றால், என் மனச் சுமை நீங்க வேண்டுமாயின், எனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சியை உன்னிடம் கூறாமல் தீராது. எனது ஆணவம் அடங்கி குற்றுயிராய்க் கிடக்கும் இவ்வேளையில் உன்னிடம் பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு கிட்டியது, என்னுயிர் மேலும் சில நிமிடங்கள் இருக்கச் செய்வது போன்ற உணர்வுதான் ஏற்படுகிறது. என்னால் தான் முருகனுக்குப் பெருமையென்று சொன்னேன் இப்போது என் நிலையைப் பார்த்தாயா ? ஆணவம் எப்போதும் கூடாது ! தான் என்ற அகந்தை அழிவையே கொடுக்கும், எனக்கு ஏற்பட்ட இந்த விபரீதம் இந்த ஆலயத்துக்கு வரும் அத்தனை பேரும், என்னைப் பார்க்கும்போது " ஆணவம், கர்வம், பெருமை கூடாது " என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டுமென்பதே எனது கடைசி ஆசை ! அந்த ஆவல் பூர்த்தியாக என் ஆணவத்தை அடக்கிய எல்லாம் வல்ல முருகன் அருள் — பு ரி பு — ஆ ! ஆ ! நெஞ்சு வலிக்கிறதே ! அம்மா ! தெய்வமே !! " ஆலயமணி பள்ளத்தே உருண்டு போய்க்கொண்டி ருந்தது. பக்கத்தில் அதை இவ்வளவு நேரம் தாங்கிக் கொண்டிருந்த வாழைமரம் சல சல வென்றடித்துக்கொண்டது !

முற்றும்

வெ. ஜெகநாதன்
க. பொ. த (உயர்தரம்)


*With the Compliments*

*of*

**TAMBYPILLAI BROTHERS**

**53, Main Street, Colombo 11.**

**Telephone : 23672**

# நவமலர் கொண்டு தரும்
# நவராத்திரி

ஒன்பதுநாட் கொண்டாடும் நவராத்திரி
ஓங்கிடுவோர் கொண்டாடுஞ் சுபராத்திரி
மன்றுதொறும் விளக்கேற்றிப் பால்பழங்கள்
மலரன்பை நிவேதிக்கும் மகாராத்திரி
ஒன்று பொங்கியெழும் உயர்ராத்திரி
புவனியெங்கும் புகழளிக்கும் செபராத்திரி
துன்றுபவம் போக்கவல்ல தவராத்திரி
துணைநின்றே தூக்கிவிடுந் தூயராத்திரி
ஆண்டு தோறும் வருமிந்த நவராத்திரி
அன்பர்களுக் காரமுதாம் அருள்ராத்திரி
வேண்டுகல்வி மானமுயர் சுகம்வலிமை
வீரமெழில் செல்வமருள் நவராத்திரி
ஈண்டுபுகழ் வாழ்வளிக்கும் இனியராத்திரி
இருள்கெடுத் தொளிநல்கும் செபராத்திரி
தூண்டுமென்பர் தூயர் போக்கும் நவராத்திரி
தூயபரா சக்திக்காம் தொல்ராத்திரி
கல்விசெல்வம் இசையெல்லாம் தரும்ராத்திரி
கலை நடனம் கவிதையெல்லாம் வளர்ராத்திரி
மல்குமுயிர் மகிழ்ந்ததே வரும்ராத்திரி
மங்களங்களும் நன்மைகளும் நல்கும்
வல்லவள்தன் கருணைபெறும் மகாராத்திரி
வளம்பெருக்கி உயிர்தழைக்கும் வண்ராத்திரி
எல்லோரு மேத்துமிந்த நவராத்திரி
எளிமையல்லல் போக்குமுயர் நவராத்திரி
ஆண்டுதோறும் பலமிருந்த இந்து மாணவன்
அகமகிழ இன்பமளிக்கும் நவராத்திரி

செல்வன். குலசிங்கம். ஜெயதேவன்
க. பொ. த. (உயர்தரம்) [illegible] வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best
Compliments
of

**SILVERCROWN PRINTERS**

283, LAYARD'S BROADWAY,
COLOMBO 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் புகழ் பெற்ற

# மாதோட்ட நன்னகர்

மாதோட்டமென்பது, வடமேற்பாகத்தில் உள்ளதும், தற்போது மன்னர் என்னும் பெயருடன் விளங்குவதும், வரலாற்றுச் சிறப்புப் பெற்றதுமான நகரின் பண்டைய பெயராகும். இது பண்டைக் காலத்தில் தலைசிறந்த கப்பற்துறையாக விளங்கியதுமன்றி, சிறந்த ஒரு நகரைக்கொண்டதாகவும் இருந்தது. அக்காலத்தில் உரோமாபுரி, எகிப்து, கிரேக்கம் பாலஸ்தீனம் போன்ற நாடுகளிலிருந்து அரபிக் கடலினூடாக வரும் தென்மேல் பருவக்காற்றால் அல்லல் ஏற்படாவண்ணம் மாந்தைத் துறைமுகம் அபயமளித்தது. இத்துறைமுகம் இராமரணையின் பவளக் கற்பாறைக்கும், மன்னார்த் தீவிற்கும் தெற்கே சில கல்தொலைவிலிருக்கிறது மன்னார்த்தீவிற்கும், இலங்கைக் கரைக்குமிடையே இருந்த பகுதியாகும். தென் மேற்குப்பருவக் காற்றுக்கள் எதிர்ப்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தக் காரணமானபடியால் அகலமும், ஆழமும் கொண்ட இக்கடலூடாக கப்பற்போக்குவரத்து இலகுவாகவிருந்தது.

மாத்தளைப் பகுதியில் ஓடியநீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி எனும் பெயரோடு அன்று மாந்தைக் கடலுள் சங்கமமாகியது. ஆனால், அவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா இன்றுதான் படுக்கையை மதவாச்சிக்கூடாக மாற்றிப் பாய்வதாயிற்று. இக் கருத்தை மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்ட ரூசியப் பேராசிரியரும் வலியுறுத்திச் சென்றுள்ளார். இஃது இவ்வாறாக, பாலாவி இரண்டாகப் பிரிந்து அருவியாறு எனும் பெயர்தாங்கி, மன்னர் தீவுக்குப் பல கல்தொலைவில் கடலுட் கலக்கிறது. இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் பயனாக பாலாவியின் முகத்துவாரம் சேறும், சரியும் நிறைந்ததாக மாறி நாளடைவில் கப்பற்போக்குவரத்திற்கு உதவாமற் போயிற்று.

இந்திய, இலங்கை சரித்திரத்தில் நாகர்கள் என்னும் மக்கட் கூட்டத்தினரைப் பற்றிப் பலஇடங்களில் வலியுறுத்தப்படுகிறது. இவர்கள் நாகதீபம் என்றழைக்கப்பட்ட வட இலங்கையில் வாழ்ந்தனரென்றும், இங்கு புத்தபிரான் வந்துள்ளாரென்றும் சிங்களவரின் சரித்திரநூலான " மகாவம்சம் " கூறுகின்றது. நாகதீபம் முதல் களனியாக ஈறாக நாகர்கள் வாழ்ந்தாரென்றும் Ceylon Historical Quarterly எனும் ஆராய்ச்சி நூல் கூறுகின்றது. இவர்கள் விஜயனின் வருகைக்கு முன்பே இங்கு இருந்தவர்கள்

நூல் கூறுகின்றது. இவர்கள் விஜயனின் வருகைக்கு முன்பே இங்கு இருந்தவர்கள்

என்பதனை மகாவம்சம் வலியுறுத்திக் கூறியபோதிலும், தற்கால சிங்கள சரித்திர நூலாசிரியர்கள், நாகர்கள் கற்பனை மக்களென்றும், விஜயனே நாகரீகத்தை முதலில் இலங்கையில் பரப்பினான் எனக் கூறுகிறார்கள். நாகர்கள் வாழ்ந்தாரென்ற கூற்றை அவர்கள் ஏற்பார்களாயின், விஜயனின் வருகைக்கு முன்பே தலைசிறந்த நாகரீகம் வசஇலங்கையில் இருந்தது ; எனும் கூற்றை அவர்கள் ஏற்கவேண்டியிருப்பது இங்கு மறைந்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றின்படி, கி. பி. இரண்டாம் நூற்றுண்டுமுதல், நான்காம் நூற்றுண்டு வரை நாகர்கள் பிறநாடுகளிலும் கூடற்சிறப்புடன் அரசாண்டார்களென்றும், இவர்கள் ஆதிக்கம் மெக்சிக்கோவரை பரவியிருந்ததென்றும், மயா (Maya) என்னும் அந்நாட்டு நாகரீகம், இந்திய நாகரீகத்தை ஒத்ததெனவும் ''சமன்லால்'' ( Chamanlal ) தமது ''இந்து அமெரிக்கா'' எனும் நூலில் வலியுறுத்தியுள்ளார். மயன் நாகர் குலத்தவன். என்றும், மாதோட்டத்தில் மயன் குலத்தவர்கள் தலைசிறந்த கோட்டைகளைக் கட்டினுர்களென்றும், ''பூர்வீக யாழ்ப்பாணம்'' எனும் நூல் கூறுகின்றது. மயனின் மகளும், இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி என்பாள் சிறந்த சிவபக்தையாவர். இவர் திருக்கேதீச்சரத்தில் வழிபாடுசெய்து அருள்பெற்றமையை

''ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவந் தன்னுருவாய்
ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர்வண் டோதரிக்குப்
பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்'' எனும் திருவாசக

அடிகளிலிருந்து அறியலாம். இதிலிருந்து மாதோட்டத்தின் பழமையை ஒருவாறு ஊகித்தறியலாம்.

மேலும், மாந்தை கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து ''மகதித்த'' எனும் பெயருடன் விளங்கியதாக புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமரும், அகத்தியரும், அருச்சுனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கை புகுந்தனர். என்றல், விஜயனும் அவனது நண்பர்களும் அவ்வாறே வந்தனர் என ஊகிக்க முடிகிறது. இவை உண்மையாயின், விஜயனுடன் வந்த உபத்தீசன் என்னும் பிராமணன் வழிபாட்டதலம் திருக்கேதீச்சரமேயன்றி வேறில்லை. யாழ். வைபவமாலை, ''விஜயன் கி. மு. அறும் நூற்றுண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும், நெடுங்காலமாகப், பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சரத்தை விஜயனே புதுப்பித்துக் கட்டினுன் எனவும் எடுத்துக் கூறுகிறது.

ஆறும், ஏழாம் நூற்றுண்டுகளில் இலங்கையில் தமிழராட்சி சிறட்டடைய அதன் விளைவாக மாதோட்டம் சீரும் சிறப்புமுடையதாக விளங்கியது. என்பதை ''ராஜரட்ன கார'' எனும் சிங்கள வரலாற்றுநூல் ஐயந்திரிபுற எடுத்துரைக்கின்றது. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தராலும், ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த சுந்தரராலும் பாடப்பெற்ற சிவத்தலங்களுள் மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரமும் ஒன்றுகும். அன்றிருந்த மாதோட்டத்தின் சிறப்பை தேவாரங்களில் காணக் கூடியதாக உள்ளது. அங்கு ஓங்கி வளர்ந்த பொழில்களும், மாட மாளிகைகளும், மாதோட்டத்தின் சிறப்பிற்கு அணிகளாக விளங்கியது. இதனை,

''அலைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்'' என்றும்,
''மாவும், பூகமும். கதலியும் நெருங்கு மாதோட்டநன்னகர்'' என்றும்,
''வாழை அம்பொழில் மந்திகள்களிப்புற மருவிய மாதோட்டம்'' என்

றும் ஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். பொழில்களில் மாவின் கனி தூங்கும் மாண்பினை

''மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகர்'' என்றும்,
''மட்டுண்டு வண்டாடும் பொழில் மாதோட்ட நன்னகர்'' என்றும்,

அதுமட்டுமன்றி, இன்றும் செழித்து வளரும் தென்னை மரங்களை.

''தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதிச்சரத்தானே'' எனும் ஓரடியால் நினைவூட்டுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாந்தை என்னும் நகரமிருந்த இடத்தில் புதைபொருளாராட்சி 1887 இல் போக் என்பவராலும், 1925–28 இல் ஏ. எம். கொகாற் என்பவராலும், 1950 ம் ஆண்டு எஸ். சண்முகநாதனுலும் நிகழ்த்தப்பட்ட போதிலும், துர்அதிட்ட வசமாக கொகாற் என்பவர் சுகவீனமுற்றதாலும், சண்முகநாதன் ஆராய்ச்சிகள் முற்றுப்பெறுமுன் இறந்தமையாலும் போதிய நன்மைகளை நாம் பெறவில்லை. எனினும் மாந்தை நகரின் கட்டடங்களும், தெருக்கள் இருந்ததற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. 40 வருடங்களின் முன் இவ்விடத்தில் இலங்கையிலுள்ள இலிங்கங்களுள் மிகப்பெரியதான சிவலிங்கமொன்று கண்டெடுக்கப்பட்டது. இதைவிட எகிப்து, சீனு, உரோமாபுரிபோன்ற நாடுகளைச்சேர்ந்த நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றிலிருந்து, அன்று மாந்தை நகரின் சிறப்பை நாம் ஒருவாறு ஊகிக்கக் கூடியதாக உள்ளது. முதற்கண் கி. மு. ஆறும் நூற்றுண்டில் விஜயன் ஈழக்கரையை அடைய முன்னரே மாந்தை நகர், நாகர்களால் சிறப்பாக ஆளப்பட்டதிலிருந்தும், இராவணனின் மனைவி மண்டோதரியின் வரலாற்றிலிருந்தும், விஜயனே திருக்கேதீச்சரத்தை திருத்திக் கட்டினுன் என்பதிலிருந்தும், கி. பி. ஏழாம் நூற்றுண்டின் பின் சம்பந்தர், சுந்தரர் மணிவாசகர் ஆகியோர் பாடல்களிலிருந்தும், போத்துக்கேயரால் இக் கோயில் இடித்தழிக்கப்பட்ட தென்பதிலிருந்தும் இக்கோயிலின் பழமையும், மாதோட்டத்தின் பண்டைய சிறப்பும், அதன் கண் தன்னிகரற்று விளங்கிய துறைமுகத்தைப் பற்றியும் நாம் ஒருவாறுஊகித்தறியலாம்.

ரீ. குகனேசன்
க. பொ. த (உயர்தரம்)


With the best
Compliments
of

**SILVER CROWN PRINTERS**
283, LAYARD'S BROADWAY,
**COLOMBO 14.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*

*of*

# SATHIYAWADI STORES
# &
# MOTOR TRANSPORTERS LIMITED

21, DAMBULLA ROAD,
KURUNEGALA.

Branches at : ANURADAPURA, MAHIYANGANA, HINGURAKGODA.

Telephone : 388, 6183 & 6184 Telegrams : "SATHIYAWADI"
K. GALA

THE NAME
THAT MAKES A MAN FAMOUS

# "SWASTIK"

SWASTIK TETORON
SWASTIK TERT / WOOL
SWASTIK TET / VISCOSE

- Available WholeSale at
  **HANCO TEXTILES LTD.**
  2nd Cross Street, Pettah
- Retail at
  **H. A. NAGINDAS & CO., LTD.**
  Main Street, Pettah.
- AND ALL OTHER LEADING STORES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி பாடல்கள்

## துர்க்கா தேவி

வே. தம்பாபிள்ளை

கமலமல முகநுதலிற் றிலகமொடு நீற்றொளியுங்
கலந்து தோன்ற
கனகமணிக் குண்டலமுங் கவினெழிலி னொலிபரப்பிக்
காதிற் றொங்க
விமலியெனுந் திருநாமம் வியனுறவே யமைத்தபெரு
வீர நாட்டி
விரிசடையுந் திரிசூலம் விளக்கிடவே வாகனமாய்
அரிமா வேறி
நிமலனெனுஞ் சிவனவனின் நெஞ்சமதிற் குடியேறி
நெடுமாலேத்த
நித்தியமும் சத்தியதாய் சுத்தசிவ போதத்தில்
நீங்கா நின்ற
அம்புவியிற் துர்க்கையென ஆன்றோர்கள் அனுதினமும்
அறைகுவரே

இலக்குமி

செங்கமல மீதமருஞ் செந்திருவாம் இலக்குமியின் சிரிப்பதனல்
மங்களமாய் மாந்தர்க்கு மா நிலத்தில் செல்வங்கள் மலிவதோடு
பொங்குமெழிற் பூரிப்பும் போதுமென்ற மனநிறைவும் போந்திருந்தே
தங்குமெனச் செப்புதலின் தாயவளின் தாளிணைகள் போற்றுவமே.

சரசுவதி

வெண்கமல மிசையன்னப் பேடெனவே வீற்றிருந்து வீணையேந்தி
பண்கமழும் இன்னிசையைப் பாடிமறை நான்கினுக்கும் பண்புமிகு
நுண்கலைக்குஞ் தாயெனவே நூல்வல்லோர் நுவலுமந்த நுண் பொருளை
மண்புகழுங் கலைமாதை மனமதிலே வைத்திடுவோம் மகிழ்ச்சியாகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Compliments*

*from*

MACKIE STORES

265. MAIN STREET,

COLOMBO - 11.

Phone : 24173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தெட்சண கைலாய விஜயம்

இந்து மகா சமுத்திரத்தில் ஒரு பவளமாகத் திகழும் நம் ஈழத்தீவு ஓரளவு சரித்திரப் பிரசித்தம் அடைந்தது, என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஒரு நாடானது சரித்திரப் பிரசித்தம் அடைய முக்கிய காரணங்களாக இருப்பவற்றுள் ஒன்று அந் நாட்டின் கண் உள்ள பிரசித்தமடைந்த, தொன்மைவாய்ந்த தெய்வ ஆலயங்களாகும். இலங்கையில் இவ்வாறு தொன்மை வாய்ந்தனவும், நாயன்மார்களால் பாடப்பெற்றன வும் ஆன இரு ஸ்தலங்கள் ஈழத்தின் இரு கண்களாகத் திகழ்கின்றன. ஒன்று ஈழத்தின் மேற்குக் கரை ஓரத்திலுள்ள '' திருக்கேதீஸ்வரம் '' மற்றொன்று ஈழத்தின் கிழக்குக் கரையிலுள்ள '' திருக்கோணேஸ்வரம் '' இங்கு இரண்டாவதாக குறிப்பிடப்பட்டதே அகில உலகத்திலுமுள்ள சைவ பக்தர்களால் '' தெட்சண கைலாயம் '' என போற்றி வணங்கப்படுகின்றது.

ஓர் பங்குனி உத்தரத் திருநாளன்று கைலாச நாதனை தொழும் நோக்குடன் திருமலை பஸ் நிலையத்தில் சென்று இறங்கினேன். கோயிலை யான் அடையும்போது, ஆழித் தேவன் தன் பரந்த, விரிந்த அலைக்கரங்களை உயர்த்தியும், தாழ்த்தியும் என்னை வா, வா என்று நல்வரவு கூறி அழைத்தான். ஆழ் கடலின் நடுவினிலே, சமுத்திர த்தையே நம்பி தம் ஜீவன் வளர்க்கும் மீனவர்கள், கூட்டம் கூட்டமாக வள்ளங் களில் சென்று கொண்டிருந்தார்கள். மேலும் சில அடிகள் நடந்தபோது ஒரு சிறு விநாயகர் ஆலயம் கடலை நோக்கியவாறு இருந்ததைக் கண்ணுற்றேன். அதில் விநாயகர் கடலை நம்பித் தொழில் புரியும் மீனவர்களின் விக்னங்களை தீர்த்தருளும் விக்னேஸ் வரனாக, கருணைக் கடலாகக் காட்சி தந்தார் அடியேனும் அவரை வலம் வந்து வணங்கி எனது யாத்திரையை தொடரலானேன். அவ்வாலயத்தின் அருகில் 1776 ஆம் ஆண்டு போத்துக்கேயர்களால் கட்டியெழுப்பப்பட்ட '' பிரடெறிக் கோட்டை வாயில் '' பிரமாண்டமாக, மிடுக்குடன் நிமிர்ந்து நின்றது. ஆதிகாலக் கலை நுணுக்கங்கம் எண்ணிவியந்தபடியே அதனூடு சென்றேன். சிறிது தொலைவில் ஒரு குன்றின் ஏற்ற ஆரம்பமாகியது. அதன் அருகிலுள்ள வழிகாட்டிப் பலகையில் '' சுவாமி மலை '' எனக் குறிக்கப்பட்டிருந்தது. யானும் கைலாசபதியைத் தொழுத வண்ணம் குன்றில் ஏறத் தொடங்கினேன். எனது உடல் மேலே ஏற ஏற, எனது உள்ளத்திலும் பழு குறைந்து, உலக எண்ணங்கள் யாவும் அகன்று, கோணேநாதரை தரிசிக்கப் போகின் றேனே என்ற பூரிப்பில், பக்திப் பரவசத்தில், விண்ணுலகை நோக்கி சஞ்சரிக்கத் தொடங்கியது. காழியர்கோன் தன் பாடலை கூறியதைப் போன்று

'' பரிந்து நன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்

அவர் என்னையும் ஆட்கொள்ளத் தொடங்குவது போன்றதோர் உணர்வு என்னைச் சூழ்ந்துகொண்டது. சடுதியாக அருகிலுள்ள புதர்களில் சலசலப்பு ஏற்பட்டு திரும்பி னேன். அங்கு நான் கண்ட காட்சி '' ஒரு கூட்டம் வண்ண, வண்ண புள்ளிமான்கள் என்வருகைக்கு அஞ்சி நான்கு திசைகளிலும் வெருண்டு ஓட்டம் எடுத்தது ''. இது கண் கொள்ளாக் காட்சிதானே? நான் ஆலயத்தை நெருங்கியதும் என் செவிகளில் சமுத்திர தேவனின் ஆரவார இரைச்சல் கேட்கத் தொடங்கியது. உடனே என் சிந்தனைக்கு சம்பந்தரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைகடல் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே ''

என்ற அடிகள் வந்தது.

யான் சற்று மேலே நிமிர்ந்து நோக்குகின்றேன் அங்கு தென் கைலைக் கோபுரம்
விண்ணளாவும் வண்ணம், வண்ண வண்ணச்சிற்பங்களுடன் காட்சியளிக்கின்றது. அதை
கண்டதும் என் உடம்பு புல்லரிக்கின்றது. '' கோணைநாதா '' என சிரசில் கரங்
குவித்து வுணங்குகின்றேன். அத்தருணம் ஆலய மணியோசை பரவத் தொடங்கியது
அந் நாதம் '' கோணை நாதருக்கு பூஜை ஆரம்பமாகப் போகின்றது சீக்கிரம் ஓடி வா ''
என என்னை அழைப்பது போன்றிருந்தது. நானும் ஆலயத்தை நோக்கி என் நடையைத்
துரிதப்படுத்தினேன். திடீரென ஒரு குரல் என்னை திடுக்கிட வைத்தது. அது '' தம்பி
சூடம், அர்ச்சனைச் சாமான் வாங்கிக் கொண்டு போ, அப்பத்தான் கோணேசர்
உன்பக்கம் கண்திறப்பார் ''. என்ற வார்த்தைகள் தான். திரும்பிப் பார்த்தேன் ஓர்
வியாபாரியின் குரல்தான் என் மனதில் உயர்ந்த எண்ணங்களுடன் வந்த எனக்கு
சஞ்சலம் படரத்தொடங்குகின்றது '' இலஞ்சம் மலிந்த இவ் உலகில் அகிலாண்ட
கோடி பிரமாண்ட நாயகராகிய கோணேசருக்குமா இலஞ்சம் ? ? '' சஞ்சலித்த மனத்
துடன் கோயிலை நோக்குகின்றேன் அங்கு தேவசபையில், சபை உறுப்பினர்கள் சடை
சூழ அலங்கார ரூபனாக, புன்னகை முகத்துடன், அருள் கொழிக்கும் பார்வையினராக,
மாதுமையாள் சமேதராக வீற்றிருக்கும், கருணைக் கடலாம் கோணேஸ்வரருக்கு பஞ்
ஆலாத்தி காட்டிக்கொண்டிருந்தார் குருக்கள். பக்த்தர் வெள்ளத்தின் '' அரோகரா ''
கோஷம் விண்ணதிரவைத்தது. ஆம் அன்று தெட்சணை கைலாயத்தில் துவஜாரோகண
உற்சவம். '' பனித்திளம் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்த
பெருமானின் கருணைவழியும் முகத்லை த உற்று நோக்கினேன். கேட்பவர்க்கு கேட்டதை
கொடுக்கும் வள்ளளாகிய பெருமானை நோக்கியதும் என் மனப்பழு அகன்றது. மறு
படி பக்திப் பரவசம் எய்தினேன். என் சந்தேகத்தை நீக்குவதற்கு ஏற்ற பதில் வின
வடிவிலேயே என் உள்ளத்தின் கண் எழுந்தது. எமக்கு இவ்வளவு சீரும் சிறப்புமான
பெருவாழ்வு அளித்த வள்ளளாரை தரிசிக்கச் செல்லுமிடத்து எம்மாலியன்ற சிறு
காணிக்கையாவது கொடுக்கக் கூடாதா ? என் பார்வையை வேறு திசை நோக்கிச்
செலுத்தினேன். அங்கு பல வானரங்கள் மரம் விட்டு மரம் தாவி பாய்ந்து கொண்டிருந்
தன. அதைக்காண என் மனதிற்கும், வானரங்களுக்கும் எவ்வித வேறுபாடும் எனக்கு
தோன்றவில்லை. கொழும்பிலிருந்து பெருமானை நம்பி உயர்ந்த எண்ணங்களுடன்
வந்த என் உள்ளம் ஒரு க்ஷணத்தில் வானரம்போல் கிளை தாவிவிட்டதே என்பதை
நினைக்க என் எண்சாண் உடம்பு ஒரு சாணாக கூனிக் குறுகியது. திருஞான சம்பந்தரே
தன் பாடலில் ஓர் அடியில்

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும் கொடுத்தவர்

எனக் கூறியுள்ளாரே. அவ்வாறு கொடுத்தவர் விரும்பும் பெரும் புகமாளரைக் காணப்
போகுமிடத்து வெறுங்கையுடனா போவது.

சித்தம் தெளிந்த நான் அவ் வியாபாரியிடம் அர்ச்சனைப் பொருட்களை வாங்
கிக் கொண்டு ; ஆலயச் சுற்றுடலில் காலடி எடுத்து வைத்தேன். பக்தி வெள்ளத்தில்
ஆலயத்தை வலம் வந்த நான் பூஜைப் பொருட்களுடன் மூலஸ்தானத்தை அடைந்
தேன். அங்கு அலங்கரிக்கப்பட்ட மூலலிங்கம் பூஜை முடிந்து பக்தர்களின் தரிசனத்
திற்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. அக்காட்சியைக் கண்ட நான் '' தாயைக்கண்ட
சேய்போன்று ஆனந்தப்படலானேன் '' விப்பொழுது அவ்வழியே வந்த அர்ச்சகரிடம்
என் பூஜைப் பொருட்களை கொடுத்தேன். அவர் அதை பெருமானுக்கு நிவேதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாராதனை செய்தார். அத்தருணம் " நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கும்" எம் பெருமான் கண்ணீர் சொரிய, மனமார வணங்கினேன். பின்பு அர்ச்சகர் கொண்டு வந்த கற்பூர தீபத்தை என் கண்களில் ஒற்றிக்கொண்டபின், துதிக்கப்படுவதுமாகிய திருநீற்றையும், பக்தர்களின் பாவத்தை நாசம் செய்து மோட்சமளிக்கும் பாபநாச தீர்த்தமும் பெற்றுக்கொண்டேன். பின்பு ஆலயத்தை மீண்டும் வலம் வந்து கேட்வர்க்கு கோட்டதை வளங்கும் கருணைவள்ளலான கோணேஸ்வரரை என்னையும் ஆட்கொண்டருளுமாறு வேண்டினேன் பரமஹம்சர் இராமகிருஷ்ணரின் திருவாக்குப்படி

" முயற்சி செய்வது மனிதனின் கடமை ஆனால் அதற்கு
ஏற்ற முடிவைக்கொடுப்பது இறைவன் சித்தமாகும் "

என்பதற்கொப்ப, அவர் என்னை ஆட்கொண்டருளுவாரோ, இல்லையோ இவ் உடலில் உயிருள்ள ஒவ்வொரு கணமும் அவரை நம்பி வாழ்வதே என் முக்கிய கடனாகும்.

வணக்கம்

இ. இராஜ்குமார்,
க. பொ. த. (உயர்தரம்) 1 ம் வருடம்

CONSULT US.........

*for All your Requirements of*

MOTOR SPARES

AND

ACCESSORIES

WE ALSO MAKE SWITCH KEYS
FOR ALL ENGLISH CARS

**SIRISENA & COMPANY**

**52, JETHAWANA ROAD,**
**COLOMBO 14.**

Phone : 27986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Compliments

of

A. R. P. ARUNACHALAM & CO.,
OIL MILLS
WATTALA.

With best Compliments

of

KAMALA STORES
PONNAMPALAM BUILDING
176, CENTRAL ROAD,
COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீதொழிய நன்மை செயல்

வி. செல்வானந்தன்.

க. பொ. த. உயர்தரம்.

உலகில் தோன்றி வாழ்கின்ற உயிர்கள் அத்தனையும் தாம் தாம் இன்பத்தோடு வாழவேண்டும் என்ற குறிக்கோளிலேயே வாழ்கின்றன. மனிதன் மட்டுமன்றி விலங்கினங்களும், பறவைகளும், பிற உயிர் வாழ் இனங்களும், தம் தம் நல்வாழ்வையே நாடி நிற்கின்றன. ஒன்றை ஒன்று விழுங்கியும், கொலைசெய்து உண்டும், பிறவகையில் மற்றவற்றிற்குஊறு செய்து மகிழ்ந்தும் வாழ்கின்றன உயிரினத்தின் உச்சியிலே மனிதன் வாழ்கின்றான். மனிதன் அந்த உயிரினத்தின் உச்சியில் இருப்பினும் அவன் பகுத்தறிவு பெற்றவனாகின்றான். அப்பகுத்தறிவால் அவன் நன்மை தீமையைக் கண்டறிகின்றான் உலகில் பிறந்தது இன்பத்தோடு வாழ்வதற்கும் வாழ வகைதேடுவதற்குந்தான் என்றாலும், அவ்வின்ப வாழ்வு மற்றவர்களுக்கோ, பிற உயிர்களுக்கோ ஊறு உண்டாகா வண்ணம் அமைய வேண்டும் என்று அவன்கல்வியும், அறிவும் அவனுக்கு நினைவூட்டுகின்றன. அதன்படி அவன் நடக்கும்போதுதான் அவன் கற்றவனாகக் கருதப்படுகிறான்.

பலநாடுகளிலே, பலமொழி பேசும் மக்களின் மத்தியிலே. பல கலைகள் பல்கும் பாகங்களிலே அறிஞர் பலர் தோன்றுகின்றனர். '' எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் '' எண்ண அலைகள் எழும் அவர்களின் இதயத்தில் பல கொள்கைகளும், குறிக்கோள்களும் தோன்றுகின்றன. ' உலகத்தில் நாம் பிறந்தது நமக்காகமட்டுமன்று உலகம்வாழ—உலகமக்கள் வாழ—உயிரினங்கள் உய்வுபெற—உற்றநலன்செழித்தோங்க ' என்று அவர்கள் எண்ணுகின்றனர். அவ்வெண்ணத்தின் அடிப்படையில் எல்லோருக்கும் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமே ஒழிய, தீமை எள்ளளவும் நினைக்கலாகாது என்று முடிவு தீட்டப்படுகிறது. இந்த முடிவின் பேரிலேயே பல சமயங்கள் உலகின் பல பாகங்களில் அவ்வப்போது தோன்றி வளர்ந்து, வாழ்ந்து, வருகின்றன. ஆகவே ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையும் '' பிறர்க்கு நன்மைசெய்; தீமை எண்ணாதே ' என்பதாகும். அந்த உணர்ச்சிக்குக் காரணம் காட்டுமுகத்தால், சமயங்கள் பிற்காலத்துப் பல நிகழ்ச்சிகளைக் கொண்டு சான்றுகளை அமைத்துக் கொண்டன. ஒருவன் செய்கின்ற நன்மை அவனுக்குத்திருப்பித் தரப்படும். அதைப் போன்றே தீமையும் அவனுக்குத் திருப்பிப் பலன்தரும் என்று விளக்கிக்காட்டி ' மற்றவருக்கு என்றும் தீமை செய்யற்க, நன்மை புரிக ' என்று கூறின. அதுவே அனைத்திலும் தலையாய அறம் என்று வள்ளுவனார் வரையறுத்துச் சென்றார்

' எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணா செய்யாமை தலை'

என்ற குறட் கருத்து உலகில் மற்றவர்க்குத் துன்பம் செய்யாத, மிகப்பெரிய அறத்தை வற்புறுத்துகிறது. இந்தக் குறள் ஒன்றின் அடிப்படையிலேயே எல்லாச் சமயங்களும் முகிழ்ந்தன. அவற்றின் கொள்கையெல்லாம் தாம் வாழப், பிறரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தாது தீ தொழியருன்மை செய்ய வேண்டும் என்ற உயரிய கொள்கை ஒன்றி லேயே சென்று முடியும். இப் பேருண்மையைக் கண்டறிந்தார் தமிழ் மூதாட்டியார். அவர் கண்ட உண்மையே

" புண்ணியமாம் பாவம் போம் போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் ;—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீ தொழிய நன்மை செயல் "

என விளக்குகின்றார். ஆனால் இந்த ஈற்று அடி தீ தொழிய நன்மை செயல் என்ற தெய்வமொழி உலகை உய்விக்கும், உலகை வாழ்விக்கும், போரை நீக்கும், வாழ்வை வளர்க்கும், எல்லோரும் இன்புற்றிருக்க வழிகோலும் என்ற உண்மை சாதாரணமாக எல்லோரும் அறிந்ததுதான்.

சமயங்கள் என்றுசொன்னேன். இன்று நாட்டில் பல சமயங்கள் வாழ்கின்றன. அவற்றுள் சைவம் தனிச்சமயம், நமது சைவசமயம் உலகத்திலேயே மிகப் பழமையான உயிர்ப்புடைய சமயம் இதனை " The most ancient living religion In the world " எனச் சேர் ஜான் மார்ஷல் ( Sir John Marshall ) என்னும் ஆராய்ச்சி அறிஞர் குறிப்பிடுகிறார் இன்றும் சைவம் விழாவிலே, வேடிக்கை மத்தியிலே, ஆடம்பரத்தின் மத்தியிலேதான் கொள்கையை மறையவிடாது காத்துக்கொண்டுதான் வருகிறது.

நாட்டிலே சாதாரண மக்களும் அறிந்த வழக்கத்திலே உள்ள சைவசமய இலக்கியம் தேவாரம் ஆகும். தேவாரம் அறியாதவன் சைவன் ஆகான், என்று கூட முடிவு கட்டுவார்கள். தேவாரத்தின் உட்கருத்து தீதொழிய நன்மை செய்வதோடு மற்றவர்தம் துன்பத்தை தாம் பகிர்ந்துகொண்டு அவர்களுக்கு உதவவேண்டும் என்பதாகும். ஆனால் அத்தகைய சிறந்த தேவாரத்தைப் படிப்போரில் பலர் அதன் கருத்தை செயலில் காட்டாமல் இருக்கின்றார்கள்.

' புண்ணியமாம் பாவம் போம் ' என்றுபாடினார் ஔவையார். வாழ் வளிப்பது புண்ணியம் என்றும், வகை கெடுப்பது பாவம் என்றும் சொன்னார்கள். புண்ணியப் நன்மை செய்யும் வழி, பாவம் தீமை செய்யும் வழி, என்பது சமய உண்மை. ஆகவே அவரவர் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அவரவர் நலக்கேடுகள் பெருகும் என்பது உண்மை. இந்த உண்மையை உணரப் பிறவிகள் பல எடுக்கவேண்டியதில்லை. இந்தப் பிறவியில் செய்த நன்மைதீமைகள் அடுத்த பிறவியிலே வந்து கூடும் என்று சொன்னாலும் சுந்தரர் இதற்கெல்லாம் பிறவிகளைக் கணக்கெடுக்க வேண்டாம் என்று சொல்லுகின்றார் இம்மை செய்தது இங்கேயே பயன்தரும் எனகின்றார். இவ்வாறே தீமை திரும்பவும் நமக்கே பயன் நல்குகின்ற காரணத்தால் நாம் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யலாகாது என்று வற்புறுத்துகின்றனர். இதன் மூலம் ' தீதொழிய நன்மைசெயல் ' என்ற உயரிய உண்மையை உணர்த்துகின்றார்.

தேவார ஆசிரியர்கள், பொய் முதலிய கொடுமைகள் அகல வேண்டும் என் கிறார்கள். இல்லை என்னாது கொடுத்துதவவேண்டும் என்கிறார்கள். தமக்கு என்று அனைத்தையும் தேடிவைத்துக்கொள்ள வேண்டாம் என்று கூறுகிறார்கள். மனம் தூய்மையுற வேண்டும், தூய்மையில்லாது செய்யும் சமய ஆடம்பரங்கள் பயனற்றன என் கிறார்கள். பிறந்தது பிறருக்கு அறமாற்றுவதற்கே என்கிறார்கள். இறைவன் அருளும் அந்த அறமாற்றுவோருக்கே அமையும் என்கிறார்கள். வஞ்சனை, உள்ளத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டப்பட வேண்டும் என்கிருர்கள். சாதியும், குலமும் தகர்க்கப்பட வேண்டும் என்கிருர்கள். புறம்பேசல், வீண்பொழுது போக்கல் முதலிய தீமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்கிருர்கள். மக்களாய் பிறந்தவர் தம்கடன், மற்றவர்களுக்குப் பணி செய்தலே என்பதை திட்டமாக வற்புறுத்துகிருர்கள். இப்படி இன்னும் எத்தனையோ வகையில் தீ தொழித்து நன்மை செய்யவேண்டும் என்ற உண்மையை விளக்குகிருர்கள். எனவே சைவசமயத்தின் முடிந்த முடிபு, வெறும் பூசையிலும், ஆடம்பர ஆரவாரத்திலும், வேடிக்கை விழாவிலும் உண்மை நலம் காணமுடியாது என்பதும், உள்ளம் திறந்து மற்றவர்க்கு மனத்தாலும் திங்கிழைக்காது வாழ்தலே என்பதும், அந்த வாழ்வில் எந்த வேறுபாடும் தலைகாட்டாது என்பதுமாகும். ஓர் அடியார் மிக உயர்ந்த நிலையினை எண்ணி, ''ஆண்டவனுக்கு அபிடேகம், விழா முதலியனகூடச் செய்ய வேண்டாம். கோவிலுக்குக்கூடபோகவேண்டாம் உம்மைஒத்த மக்களுக்கு உதவி செய்யுங்கள், தீ தொழிய நன்மைபுரியுங்கள்'' என்ருர்

ஆகவே தீ தொழிய நன்மை செய்ய வேண்டிய செயல் சிறக்குமாயின் அன்று உலகில் போர் இராது. நாட்டின் மேல் நாடு பொருமை கொள்ளாது. ஒருவன் மற்றவனைக்கண்டு கோபம் கொள்ளமாட்டான். அனைவரும் ஒருதாய்வயிற்றுச் சேய்கள் போன்று அன்பால் பிணிக்கப்பட்டவர்களாவார்கள். அந்த அன்பு உலகிலே. இன்ப நிலையிலே. இந்த உலகிலேயே, மறு உலக வீட்டைக் காண்பார்கள் மக்கள். அன்று நாடு நாடாகும். நாம் மக்களாவோம். அந்நாள் விரைந்துவருக !

— முற்றும் —

*With best Compliments*

*from*

*Vadivaikarasan*

*With the best Compliments*

*of*

# V. Kanagalingam Pillai & Sons

**No. 17, St. Johns' Road,**

**COLOMBO - 11.**

*Telephone* : **25885** *Telegrams* : **KAN CIGARS**

*With the best Compliments*

*of*

# N. VAITILINGAM & CO., LTD.

450, OLD MOOR STREET

**COLOMBO - 12.**

Manufucturers of Words sCrews & Barbed Wire

Impcrters of Building Materials, Iron & Steel Products

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிவு நிறைந்த நாளிதுவே

மண்ணீற் பல்லுயிர்க்கும் ஏற்றவகை வாழ்வருளிக்
கண்ணிற் கருமணியாய்க் காக்கின்ற கடவுளவன்
வண்ணத் தமிழோதி வளர்க்கின்ற செல்வியவள்
வின்னையருள் போற்றும் அரிய நவராத்திரியே !

கருணை யொளியாய்க் கனிவூறும் நல்லிதயத்
தருளை பொழிந்தே வையத் தெம் முயற்விற்காய்ப்
பெருவாழ் வளிக்கின்ற பெற்றியளாம் புகழ்பரவித்
திருவாய்க் கலைமகளாய் மலைமகளாய் வாழ்த்துவமே !

உள்ளஞ் சிறுத்திட நற்கல்வி யளித்திடுவாள்
வெள்ளை மனதினிலே வீரம் பதித்திடுவாள்
உள்ளம் விரும்புவதை யுவந்தே யளித்திடுவாள்
அள்ளிக் கவிதைத் தேனை அகத்தினில் நீட்டிடுவாள்

கல்விப் பெருங்கடற்குக் கலைமகளாய் யுருவகுத்து
வல்லமை அருள்வதற்கு மலைமகளாய் மாண்பு செய்து
செல்வந் தருபவளைத் திருமகளாய் வடிவாக்கி
நல்லுள்ளம் தனிலேற்றி வாழ்த்துகின்ற பொன்நாளே

எண்ணில் அகிலமெல்லாம் அன்னை ஆனவளை
எண்ணங் கொடுத்தவளை ஏற்றந் தருபவளை
பண்ணின் இசையாற் பத்தியாம் மலர் சூடிக்
கண்ணிற் காணுகின்ற கனிவுநிறை நாளிதுவே

நா. அருளானந்தம்

பாரம் 5சி

*With the best Compliments*

*of*

# SP. PERIANNA PILLAI & CO.,

TEXTILE & MERCHANTS

**180, 2nd CROSS STREET,**
**COLOMBO 11.**

We welcome you cordially
and
offer you the exclusive
shopping pleasure -

***Its a service for the whole Family***

# RANJANA STORES

**52, BANKSHALL STREET,**
**COLOMBO 11.**

T'grams: "RANJANAS" T'phone: 25851

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொண்டேன்

க. வாசன்
க. பொ. த. (உயர்தரம்)

'' வாழ்க்கை நதி வற்றிவடிகிறது. சோலைவனம் என்றெண்ணிய வாழ்க்கை பாலைவனமாக மாறிவிட்டதே. ஏழை என்ற ஒரே காரணத்திற்காக இத்தனை இன்னல்களா ? என்னே ! மனவேதனை. எனக்குதவ யாருமில்லையா ? வேதனை கலந்த யோசனை இது. என்னுள்ளத்தெழும் குமுறல்கட்கு நான் அடிபணிகிறேன். என்னையறியாமலே ஆண்டவன் என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டு என்ற வார்த்தை நொந்த என் உள்ளத்திலிருந்து வெளியே பீறிட்டு விடுகின்றது.

அப்பொழுதுதான் ஒரு முதியவர் என்னருகே நிற்பதை உணர்கிறேன். அவர் என்னை நீண்டநேரம் கவனித்தாரோ என்னவோ.
'' தம்பி ! என்ன வாழ்வே வெறுத்துவிட்டவனைப் போற் பேசுகின்ருய் '' என்ற கேள்வியைப் போடுகின்ருர். '' இது என்ன சங்கடமாய்ப் போய்விட்டது ஒரு முதியவரிடம் மாட்டிக்கொண்டு விட்டோமே என்றுள்ளத்தில் எண்ணு கையில் வேறோர் உணர்வு அதனுடன் அலைமோதுகின்றது. மன ஆறுதலுக்கு நீ உன்வேதனையைத் தக்கவர் ஒருவரிடம்கூறி வேதனையைப் பகிர்ந்து கொள்ளல் புத்திசாலித்தனமானது என்று மேஞட்டறிஞன் ஒருவன் கூறியது நினைவிற்கு வருகின்றது. பெரியவரிடம் என் சோக வரலாற்றைக் கூறிவிட்டுக்கேட்கிறேன். பெரியவரே ஆண்டவன் ஒருவன் இருந்திருப்பாஞனல் அவன் மேல் அன்பு வைத்திருக்கும் எனக்கு ஏனிந்தக்கதி ?
என்னெத்த ராகவன் பஞ்சணையிலும், நான் புற்பாயிலும் புரளக்காரணமென்ன நல்ல ஒரு புதிரால் முதியவரை மடக்கிவிட்டோம் என்ற திருப்தி எனக்கு.

முதியவர் பதிலுக்கோர் வரலாறு உரைக்கின்ருர். '' தம்பி எனக்கு இரு மக்கள். இருவரில் மூத்தோன் பட்டம் பல பெற்றுச் சீரும் சிறப்புமாய் வாழ்கிருன். இளையவனே வியாபாரத்துறையிலீடுபட்டு, கள்ளக்கணக்கு எழுதல் போன்ற தீகாத வழிகளிற் காலத்தை அவமே போக்கி இன்று சிறைச்சாலையைத் தன் வாசஸ்தானமாக்கிக் கொண்டான் மூத்தமகன் படித்தகற்கும் இளையமகன் கள்ளக்கணக்கெழுதுதற்கும் உதவியது ஒரே விளக்குத்தான். அவ்விளக்கானது மூத்தவன் படிக்கின்ருன் என்பதற்காகத் தன் ஒளியைக்கூட்டியோ இளையவன் தீயவழியில் செல்வதால் தன் ஒளியைக்குறைத்தோ என்றுமே கொடுத்ததில்லை. இதே ஒளி போன்றதுதான் இறைவனின் கருணையும் கருணை யாவர்க்கும் பொதுவானது. அது ஒருவரையும் சீர்தூக்கித் தாரதம்மியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பாரபட்சம் காட்டாது. இறைவன் கருணை அதைப்பயன் படுத்துவோர்
கண்தங்கியுளது, எனக் கூறிமுடித்தார். எனக்கு ஞானப்பொருளுணர்த்த
வந்த தெய்வமோ என முதியவரை நோக்கிய வண்ணம் வியந்து நின்றேன்
" தம்பி இப்பிறப்பில் நீ செய்த நற்காரியங்களுக்குப் பயன்கிட்டாவிடின்
மறுபிறப்பிலாவது அவற்றின் பயனை நீயடைவாய் " எனமேலும் என்
ஆத்மதிருப்திக்காக ஒரு வார்த்தை கூறிச்சிரித்துக் கொண்டே
விடைபெற்றார் அப்பெரியார்

அந்நேரத்தில் சுவாமி பரமஹம்சரின் கூற்றொன்றை நினைவு கூர்ந்தேன்
" ஆண்டவனொருவனிருந்தால் அவன் எப்படியிருப்பான் எனக்கேட்பது
மதியீனம். இது பசிக்கின்ற ஒருவனிடத்து பசி எங்கேயிருக்கிறது
என்று வினவியதையொக்கும். எனவே எல்லார் மாட்டும் ஒரேயளவு
கருணைகாட்டும் ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை
நான் புரிந்து கொண்டேன். "


*With best Compliments*

*from*

**C. V. BHATT**

COLOMBO KANDY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் கல்வியும்

நோக்கமும் கொள்கையும் மக்கள் வாழ்க்கைக்காக ஏற்பட்டவைகளே. அப்படியே மதமும் மொழியும் மனிதனை மனிதனுக்குத் தலைசிறந்த வாழ்வை வாழச் செய்யவே ஏற்பட்டனவாகும். சமயம் எமக்கும் இவ் உலகைப் படைத்த பரமனுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் கருவியாகும். சமயத்தின் அடிப்படை ஒழுக்கமாகும். எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டவையே. மனித்னின் வாழ்வு சிறப்பும் பயனுமாக வேண்டின் அவனது ஒழுக்சமும் கொள்கையும் நல்லனவாக இருத்தல் வேண்டும். இவை இரண்டும் சமய அறிவை ஐயமறக் கற்பதினுல் பெறமுடியும்.

ஆதிகாலம் தொட்டு ம்னிதன் இறைவனில் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவனுக இருந்து வருகின்ருன் ஆனுல் இந் நம்பிக்கை தற்போதைய அணுயுசத்தில் வாழும் மாணவர் சமுதாயத்தினரின் மத்தியில் ஓரளவு குறைந்து வருசின்றது. இதற்குக் காரணம். அவர்கள் தங்களை சிருஷடித்த இறைவனைப் பற்றி நன்கு அறிய சந்தர்ப்பம் இல்லாமையே. தற்போதைய மாணவர் சமுதாயத்திற்கு அதிகமாக விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளும், புத்தகங்களும் அதிகமாகக் கிடைக்கின்றனவே ஒளிய, மெஞ்ஞானம் சம்பந்தமான புத்தகங்களும், சஞ்சிகைகளும் மிக அரிதாகவே கிடைக்கின்றன. ஆதலால் மாணவர்கள் விஞ்ஞானத்தை பெருமளவில் கற்று விஞ்ஞானம் காட்டும் விந்தையான பாதையில் செல்கின்றனரேயன்றி, மெய்ஞ்ஞானம் காட்டும் மெய்யான பாதையை மறந்து விடுகின்றனர். ஆனுல் ஒன்று, எவ்வித கல்வியைக் கற்று பாண்டித்தியம் அடைந்தாலும், அக்கல்வி எமக்கு இறைவனைப்பற்றி அறிவதற்கு ஏதுவாய் இல்லாவிடிம் நாம் கற்ற கல்விப்பயன் அற்றதாகும் என தெய்வப்புலவர் வள்ளுவர் கீழ்க்காணும் குறளால் விளக்கியுள்ளார்.

" கற்றதனுலாய பயனென் கொல்
வாலறிவன் நற்ருல் தொழார் எனின் "

தற்போதைய நிலையில் சமயத்தை மாணவரிடம் புகுத்த ஒரே வழி, சமயக் கல்வி முறையே. இக் கல்வியை விருத்தி அடையச் செய்ய பாடசாலையே சிறந்த இடமாகும். சமயக் கல்வி இரண்டு வகைப்படும். ஒன்று தன்னைப்பற்றியது, மற்றையது சமுதாயத்தையும் இறைவனையும் பற்றியது. இக் கல்விகளை விடுத்து ஒரு மாணவன் உழைப்புக்காகவும், உடல் நலத்திற்காகவும் கற்கும் கல்வி, வள்ளுவர் கூற்றுப்போல், ஓர் மாணவனினது ஒழுக்கநெறி வளர்ச்சிக்கோ அன்றி ஆத்மீக வளர்ச்சிக்கோ துணை புரியமாட்டாது. பிற கல்விகளோடு சமயக்கல்வியும் சேர்தாற்ருன், கல்வி முற்றுப் பெறும். எனவே கலாசாலைகளிலும் சமயக்கல்வி போதிக்கப்படல் வேண்டும் சிலர் ஒரு குறிப்பிட்ட சமயக் கொள்கைகளையும், மற்ருேர் பகுதியினர் சமயச் சடங்குகளை அனுட்டிக்கும் முறையையும் போதிக்கின்றனர். இத்தகைய சமயக் கல்வி, முறையான சமயக் கல்வி அன்று. சமரச உண்மைகளையும், ஒழுக்க நெறியினையும் மனிதனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டு என்பதையும் கலாசாலைகளில் போதித்தல் அவசியமாகும். விவேகானந்த சுவாமிகள் சமயக் கல்வியால் தியானத்தைப் பெற்ருர். மகாத்மாகாந்தி இறக்கும்போது சமயக்கல்வி கற்றதால் இறைவனை நினைந்து கொண்டார்

சமயக் கல்வியைக் கற்பதில் கலாசாலைகள் மட்டுமன்றி, ஆசிரியரும் முக்கிய இடம் வகிக்க வேண்டும். விஞ்ஞான, கணித பாடங்களைத், தராதரம் உடைய ஆசிரியர் ஒருவரால் கற்பிக்க இயலும். ஆனல் சமயக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தராதரம் இருந்தால் மட்டும் போதாது, பரிசுத்தமானவராய் மாணவர்களுக்கு முன்னேடியாய் தாம் கூறுவதை சாதிக்கும் ; இளம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக வும் இருத்தல் அவசியமாகும். மேற்கூறப்பட்ட பண்புகள் ஓர் ஆசிரியரிடம் இல்லை யாகில் அவர் சமயக் கல்வி கற்பிக்க தகுதி அற்றவர் ஆகின்ருர். சமயக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்கள் இலகுவாக விளங்கவல்ல சொற்களாலும், உதாரணங்களா லும், ஒழுக்க நெறிகளையும், சமய உண்மைகளையும் மாணவர் மனதில் பதியவைப்பதும் அவர் தம் மனத்தில் எழும் சந்தேகம், அறியாமை, ஆகியவற்றைக் களைந்து அவர் களைச் சமயம் காட்டும் நல்வழியில் நடத்துவது ஆசிரியர் கடமையாகும்.

கடந்த கால மக்கள் ''அவன் இன்றி ஓர் அனுவும் அசையாது'' என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையை இறைவனிடத்தில் வைத்து இயற்கையோடு இயைந் வாழ்வு வாழலாயினர். ஆனல் இன்றைய அணுயுக மனிதனே விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மமதை கொண்டு மதம் எல்லாம் குருட்டு நம்பிக்கை என்ற அளவிற்கு மாறிவிட்டார்கள். இக் குருட்டு நம்பிக்கை உள்ளவர்களது கண்களைத் திறந்துவைக்க ஒரே வழி சமயக்கல்வியே. கடந்த இரு பெரும் உலகமகாயுத்தங்களும் விஞ்ஞானத் தின் விந்தையால் விளையக்கூடிய அழிவை இவ் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளது ஆனல் விஞ்ஞானத்தை மனிதன் ஆக்கவழியில் பயன்படுத்தி இவ் உலகத்தைப் பூலோக சுவர்க்கமாக்கலாம். அப்படி ஆக்குவதானல் விஞ்ஞானம் சமயத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல் வேண்டும் வாழ்க்கையில் அடிப்படை சமயமாக வேண்டும் சமயமும் கல்வியும் ஒன்றிணைந்து சமயக்கல்வியாக போதிக்கப்படின் எதிர்காலச் சமுதாயம் தலை சிறந்த சமுதாயமாக அமையும்.

சுந்தரம். சிறிஸ்கந்தராசா,

க. பொ. த. (உயர்தரம்)

பொருளாளர். இந்து மாணவர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம், என்றான் புரட்சி கவிஞன் பாரதி. உண்மை, உயர்ந்த உள்ளங்களில்தான், உன்னத இலட்சியங்கள் பிறக்கின்றன. அந்த உன்னத இலட்சியங்களால்தான் மனிதன் முயற்சியினால் பயன் கிடைக்கும், என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறான்.. வளர்கிறான்.. வளம் பெறுகிறான்.

'' யாதும் ஊரே யாவரும் கேளிர் '' என்று உலகையே நேசித்த உயர்வான உள்ளம் எங்கள் உள்ளம் என்று பெருமை பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. அந்த உயர்வான உள்ளத்தை நாமும் பெற்றிருக்கிறோமா ? என்று எங்களை நாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். எங்களிடம் அந்த உள்ளம் இல்லாவிட்டால் இன்றே அதை எங்களிடம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்பர் சிலர்— இல்லை உலகிலே மழலைச் செல்வமே சிறந்தது ; என்பார் இன்னும் ஒரு சாரார். அதுவும் தவறு அருட்செல்வமே செல்வங்களுட் சிறந்தது என்கிறார் வள்ளுவர். ஆனால், அருட்செல்வமோ, பொருட்செல்வமோ அன்றி மற்றெந்தப் புவிச்செல்வமோ செல்வமல்ல—உள்ளம் நிறைந்த தூய்மையே அதாவது தூய பண்புள்ளமே பெருஞ் செல்வம். என்பேன் நான்.

ஒருவனுடைய உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உயர்ந்த உணர்வுகள் எழுத்தில் வரும்போது இலக்கியங்களாகின்றன, செயலில் வரும் போது கடமையாகின்றது. மக்கள் இதயங்களில் பரந்து வாழும்போது மதங்களாகின்றன. மக்களை ஒற்றுமைப் படுத்தி இணைக்கும் போது இயக்கங்களாகின்றன. நடித்துக் காட்டும் போதும், வரையப் படும் பொழுதும் செதுக்கப்படும் பொழுதும் கலைகளாகின்றன ! ஆம், உலகின் வளம் அனைத்துக்குமே உள்ளம்தான் பிறப்பிடம்.

ஷாஜகானுடைய உள்ளம் காதல் உள்ளமாக மட்டும் இராமல், கலை உள்ளமாகவும் இருந்ததால்தான், உலகம் போற்றி பலர் கண்ணார பார்த்து மகிழ்ந்துவரும் எழில்மிகு தாஜ்மகால் இந்திய மண்ணில் பிறந்தது.

நரசிம்ம பல்லவனின் உள்ளம் மன்னவனின் உள்ளமாகவும் கலைஞனின் உள்ளமாகவும் இருந்ததால்தான் மாமல் புரம் (கடல்மலை) உருவாகியது.

ஏன் ? எங்கள் வள்ளுவனின் உள்ளம், உயர்ந்த உள்ளங்கள் அத்தனையையும் ஒன்று திரட்டிய செறிந்த உள்ளமாக இருந்ததால் உலகினுக்கே வழிகாட்டும் திருக்குறள் பிறந்தது.

ஆம் உள்ளம் என்பது ஒருவகையில் பார்க்கும்போது மட்டும் உயர்ந்த உள்ளமாக காட்சியளித்தால் போதாது அன்புள்ளம், டண்புள்ளம், பாச உள்ளம், நட்புள்ளம், தியாக உள்ளம் என்று உயர்ந்த உள்ளங்கள் என்று கூறப்படும். அத்தனை உள்ளங்களினதும் இணைப்புள்ளமாக இருக்குமானால் அதுதான் வானுறையும் தெய்வத்துள் மனிதனை வைக்கும் உள்ளம் என்பேன் நான்.

அரசரத்தினம் கனகராசா
5 ம் பாரம். பிரத்தியேக (ஆ பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments*

*of*

## KALA TRADING

134, 2nd Cross Street,

COLOMBO - 11

*With Best Compliments*

*from*

V

## THE IMPERIAL TEXTILES

DEALERS IN TEXTILES

103, Bankshall Street,

**COLOMBO - 11**

*With the best Compliments*

*of*

## KANNAN & COMPANY

128, Bankshalı Street,

**COLOMBO - 11**

TEL: 26493

For Envirimentol Santatson

Always Buy

"ASOKA" Brand Bleaching Powder

**Now Available in House**

**Hold Packs**

*With the best Cimpliments*

*of*

## Rajeswari Brahmin Hotel

## &

## Stores

(Opposit Fort Railway Station)

Phone: 25939 For

**PURE VEGETARIAN DIETS**

Groceries, Grapes & Book Sellers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் குறைக்காவிடினும் குறையாவது செய்யாதிருப்போம்

வெ. ஸ்ரீ சண்முகநாதன்
(செயலாளர் இந்துமாணவர் மன்றம்)
க. பொ, த. (உயர்தரம்)

நாம் எமது மனத்தை ஒருமுகப்படுத்தும்பொருட்டு, கட்டவிழ்த்துத்திரியும் ஆன்மாவை ஒரு நிலைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இடங்களே ஆலயங்களாகும். ஆன்மா ஒரு நிலைப்படும்போதுதான் ஆத்மீக சக்தி வளரும். இதை விளக்கும் பொருட்டே நம் இந்து ஆலயங்களை குறிப்பாக சைவாலயங்களை நம் முன்னோர்கள் அமைத்தார்கள். நீண்ட மதிற்சுவரும், நெடிதுயர் கோபுரங்களும், கலைச் செல்வம் நிரம்பிய சிற்பவேலைப்பாடுகள் உள்ள தூண்களையும் கொண்டவையாக ஏன் நம் ஆலயங்கள் அமைக்கப்படவேண்டும் ? சற்று சிந்தித்தால் உண்மை புலப்படும். உயர்ந்த கோபுரம் எப்பொழுதும் உயர்வான எண்ணங்களையும், நற்சிந்தனைகளையும் உடையதாக மனம் இருக்கவேண்டுமென்பதை விளக்குவதற்காகவும், ஆலயத்தை அடையும்போது மேற்கண்ட நிலைக்கு நம் மனதைப் பண்படுத்தவுமாகும். கோயிலைச் சுற்றியுள்ள நீண்ட மதிற்சுவர், வெளியுலக நிகழ்ச்சிகளால் நம் புலன்கள் கவரப்படாமல் தடுப்பதற்காகவும் சிற்பவேலைப்பாடுகள், புராணக்கதைகளில்வரும் சம்பவங்களை விளக்கி, வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையை விளக்கும் அற்புத கலைச் செல்வங்களாம். மனமானது இவற்றினைக் கண்டால் தெய்வ சிந்தனையில் ஈடுபடும் என்னும் நோக்குடன் இவை அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நுண்ணறிவுடனும், ஆராய்ச்சித் திறனுடனும் அமைக்கப்பட்ட ஆலயங்களை நாம் பேணும் முறையையும், அவற்றில் நாம் நடக்கும் முறையையும் ஆராயப்புகின் ;

" அமைதியின் இருப்பிடமாக, ஆணவம் ஒடுங்கவேண்டிய இடமாக இருக்க வேண்டிய நம் ஆலயங்கள் இன்று அவற்றிற்கப்பாற்பட்ட நிலையை அடைந்திருப்பதைக் காணலாம். " கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன் நான் " எனக்கூறிய நாவுக்கரசர் பின்னுள்ள அடிகளில் " உருவாய்த் தெளிந்துன்றன் நாமம் பயின்றேன் " என்று தொடர்கின்றார். அதாவது மண்ணில் பிறந்தபின்னே உனது நாமம் பயிலும் சிந்தையுடையவனுனேன் ! பயின்றேன் என்கின்றார். நாம் அன்னையின் வயிற்றிலே கருவாக இருந்தபோது இறைவன் கழலை நினைத்தாலும், பூமியில் பிறந்தபின் கஷ்டம் ஒன்று நம்மை அணுகும்போதுதான், அவனருளை நினைத்து அவன்தாளை கருத்திற் கொள்கிறோம்.

கோயிலுக்குச் செல்லும் நம்மில் ஒருபாலர் கழுத்தும் கையுமாக நகை நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும் ; அதை மற்றவர் பார்த்து மெச்ச வேண்டும் என்ற எண்ணத்துடனேயே செல்கின்றனர், இன்னொருபாலார், நவநாகரீக நோய்பீடிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள், " தான் ஒரு இந்து " என்று பிறர் அறியக்கூடாது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுபவர்கள். இவர்கள் ஏன் நமது சமயத்தின் உயிர் நாடிகளாக விளங்கும் ஆலயங்களுக்கு வரல் வேண்டும். இவர்கள் உள்ளபோது அல்லல்பட்ட மனதுடன் மன அமைதியினை நாடி ஆண்டவன் சந்நிதானத்துக்கு வரும் ஒருவனுல் அமைதியை நாட இயலுமா ? ஆண்டவனைத் தான் அவனுல் வணங்க இயலுமா ?

மதத்தின் பெயரால், தெய்வத்தின் பெயரால் நடைபெறும் திருவிழாக்களை நடத்துபவர்கள் போட்டிமனப்பான்மையுடன் நடத்துகிறுர்கள். உதாரணமாக திரு விழா 10 நாட்களுக்கு இருக்குமாயின் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு தொண்டரால் திருவிழா நடத்தப்படும். இவர்கள், " எனது திருவிழாவைப்பார், மேளம் என்ன ? சிகரம் என்ன ?, சின்னமேளம் என்ன ", என்று போட்டிமனப்பான்மையுடன் செய் வதால் செலவழிக்கும் பணமோ பெரிது. பெறும்பலனே அரிது. இது இவ்வாறிருக்க மேற் கூறப்பட்ட இவர்கள் ஆலயத்தின் ஒழுங்குமுறைகளுக்கு வருவார்களோ ? " இல்லை இது ஒருபுறம், சாதியில் உயர்ந்தவர்கள் சமயத்தொண்டாற்றும் மகான்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் செய்யும் தொண்டா மிகப்பெரியதொண்டு. இத்தகையோரின் தொண்டினுல் இன்று பக்திபரவசத்துடன் திகழும் ஆலயங்களில் ஒழுங்கு நிலைநாட்ட பொலிசாரும் வந்து விட்டார்கள் இவைமட்டுமா தேர்த்திருவிழா, வேல்விழா போன்ற விழா நாட்களில் திருவிழாவிற்கு சுவாமி தரிசனத்துக்காக செல்லும் அடியவர்கள் எனக் கூறப்படுபவர்கள் திருவிழாவில் நல்ல நல்ல சாமான்கள் எல்லாம் நல்ல மலி வாக வாங்கலாம் கடலையும் கச்சானும் வாங்கலாம் எனும் நோக்குடனேயே செல்கி றுர்கள் இவை நமது அன்றுட வாழ்க்கையில் காணும் சம்பவங்களே. வியாபாரம் செய்பவர்கட்குத்தான் ஆலயத்தினை வியாபார ஸ்தலமாக்குகின்றேம் எனும் உணர்வு இல்லா விட்டாலும் விழாவினை நடாத்தும் நிர்வாகிகள், தொண்டர்கள் எனக்கூறப் படுபவர்களின் சமய அறிவு எங்கே சென்றது ?

இத்தகைய காரணங்கலோ என்னவோ தெரியவில்லை " ஆலயம் தொழு வது சாலவும் நன்று " எனும் நிலைமாறி ஆலயம் தொழுவது வேலைமினைக்கேடு என மாறியது போலும். இத்தகைய குறைகளை நாம் நம்மால் இயன்றளவு குறைக்க வேண்டும். இல்லாதுவிடில் பிறர்க்கு நன்மை செய்ய பிறந்த நீ நன்மை செய்யா விடினும் தீமையாவது செய்யாதிரு" என்பதற்கு இணங்க குறைகளாவது செய்யாதிருப் போமானுல் அதுவே நாம் நமது சமயத்திற்கு செய்யும் மிகப்பெரிய தொண்டாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஒரு ஆய்வுக்குழுவின் ஆலய தரிசனம்

செல்வன். தி. ப. வைகுந்தன் க. பொ. த (உயர்தரம்)
ஆசிரியர் : இந்து மாணவன்

மேலே சிறிய கோபுரம். ஒரு புறம் பூந்தோட்டம். மறு புறம் சிறிய கிணறு மின்சார விளக்குகள் கொண்டு அவ்விடம் அழகு என்னும் மெருகூட்டப்பட்டுத் திகழ்கிறது. அது ஒரு சைவாலயம். நகர் மத்தியில் அமைந்துள்ளது.

காலம் : வெள்ளிக்கிழமை

நேரம் : மாலைப் பொழுது

ஆலயத்தின் ஆலாட்சி மணி முழங்கத் தொடங்கியது. அதைக்கேட்ட பக்தகோடிகள். சிறிது சிறிதாக ஆலயத்தில் குழுமத்தொடங்கினர். ஒருவர், பொலிந்த முகமும், கரிய கண்டமும், நர்த்தனமாடும் கால்களும், மேலெங்கும் வெண்ணீறு பூசியும் இருப்பவர். அவர்பின்னுல் ஒரு பெண்ணும், இரு ஆண் பிள்ளைகளும் வருவதை அவதானித்தால் எம் பெருமான், பொன்னம்பலவன் ஆனைமுகன், ஆறுமுகன் அம்பிகை சகிதம் ஓர் ஆய்வுக்குழுவுக்குத் தலைமை தாங்கி, மேற்படி ஆலயத்துக்கு வந்துள்ளார் என்பதை அறியலாம்.

ஆண்டவன் ஆய்வுக்குழு அமைத்து ஆலயத்துக்கு ஏன் வர வேண்டுமென்று நீங்கள் எண்ணக்கூடும். '' இப்போது இந்தப் பூலோகத்தில் எங்கு பார்த்தாலும் ஆய்வுக்குழுமயம்தான். இதை ஆய, அதை ஆய, ஆய்ந்ததை ஆராய என்று புற்றீசல் போல ஆய்வுக் குழுக்களும், விசாரணைக் குழுக்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்த்த பின்தான் இறைவனுக்கும் ஆய்வுக்குழு அமைக்கும் யோசனை தோன்றியது. இதற்காக '' தேவர்கள் சபையில் '' ஓர் மசோதா கொண்டுவரப்பட்டு, காரசாரமாக விவாதிக்கப்பட்டு, ஆய்வுக்குழு அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். நோக்கம் இல்லாமல் ஆய்வுக்குழுவா ? அதையும் கூறிவிடுகின்றேனே. ''. நம் சைவாலயங்களில் எழும் பலத்த கூச்சல் உங்கள் காதுகளிலும் விழுந்திருக்கக்கூடும். இக் கூச்சல் காரணமாக, அடியார்கள் வேண்டுதல்கள் இறைவன் காதில் விழவில்லை. இக்குறையை நீக்கும் பொருட்டே இறைவன், '' தேவ ஆய்வுக்குழு '' ஒன்று அமைத்து, அதற்குத் தலைமை தாங்கி மேற்கூறிய ஆலயத்துக்கு வந்துள்ளார்.

அன்று வெள்ளிக்கிழமை அவ் ஆலயத்துக்கு திரண்டு வந்த '' பக்தகோடிகளைப்'' பார்த்தபோது இறைவனுக்கு வியப்புத்தாங்க முடியவில்லை. ஆய்வுக்குழுவினர் வெவ்வேருகப் பிரிந்து பக்தகோடிகளின் உரையாடல்களைக் கவனிக்கலாயினர். அந் நேரம் வேதியர் வேதமோதிக் கொண்டிருக்கிறுர். பெண்கள்கூட்டத்தில் இரு மூதாட்டிகள் உரையாடல் அம்பிகை காதில்விழுந்தது. ''இப்ப பாருங்கோ, இந்தக் கோயிலை நல்ல கூட்டம். முந்திஎண்டால் கூட்டம் குறைவு. கோயிலும் சக்தி பொருந்தியதாய் இருந்தது. இப்ப என்னடாவெண்டால், இந்தக் கழிசான் காறப்பெடியளும், கட்டைக் கவுண்காரிகளும் வந்து, கோயிலேலே பழுதாய் போட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மூதாட்டி, " நீங்கள் சொல்றதும் சரிதான். முந்தி எண்டால் அந்தச் சிலையிலை தெய்வீகம் பொங்கிவழியும். இப்ப என்னடாவெண்டால், கடவுள் வெளிக்கிட்டு ஓடிட்டாப் போலத் தெரியுது ". அம்பிகைக்குச் சிரிப்பு வந்து விட்டது. பின்பு இளம் பெண்கள் கூட்டம் உள்ள இடத்திற்குச் சென்று அவர்கள் உரையாடலுக்கும் சிறிது காது கொடுத்தார். ஒருத்தி " ஏது கனகாலத்துக்குப் பிறகு இந்த டெம்பிளுக்கு வந்திருக்கிறீர் ? " சினேகிதி, " நோ, நோ, எனக்கு இண்டைக்குத்தான் டைம் கிடைச்சுது ". " ஓ, கவ்நைஸ். இந்தச்சேலையை எங்கை வாங்கினனீர்? " " என்ரை அவர் கஸ்டம்சிலை ஆக்களைப்பிடிச்சு குறைஞ்ச விலைக்கு இந்தியாவிலை இருந்து எடுப்பிச்சவர் ". தன் புதுச்சேலையைக்காட்ட சோவிலுக்கு வந்த அந்தப் " பச்சை "யை நினைத்து அம்பிகை சிரித்தார். ஐயர் தீபாராதனை காட்டத் தொடங்கி விட்டார். அடுத்த பெண், " கடவுளே, என்ரை அவருக்கும், கஸ்டம்சில், அல்லது கள்ளக்கடத்தலில் உள்ள யாரையாவது தெரியவேணும். அந்தச் சேலையைப் போல ஒண்டு என்னட்டை இல்லாவிட்டால் எனக்கு நித்திரை வராது, கடவுளே ! " என்று வேண்டுவது அம்பிகையின் மனதிலே தெள்வாகப்பட்டது. ஓ ! இது என்ன கூத்து. ஆசைகள் அடக்கப்படவேண்டிய ஆலயத்தில்.....

ஐயர் திரும்பவும் மந்திரமோதத் தொடங்கினர். அன்பர்கள் தங்கள் " புராணபடலத்தை " ஆரம்பித்தனர். ஒரு கூட்டம் உரையாடல் பலமாக நடந்தது. ஏதாவது புராணதத்துவத்தைப் பற்றி விவாதமோ என்றெண்ணி, இறைவன் அக் கூட்டத்தை அணுகினர். உண்மையிலேயே ஒரு தத்துவத்தைப்பற்றிய விவாதம்தான். அதாவது, " சோஷலிசம் " என்றழைக்கப்படும் " சமத்துவம் " பற்றியது. இந்த அரசியல் பிரச்சனைகள் எல்லாம் நமக்கெதற்கு என்று எண்ணி, இறைவன் ஆலயத்துள் சென்றார். இறைவனுக்குத் தெரியாத சோஷலிச தத்துவமா ? " " ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் ", என்று போதிக்கும் சைவசமயத்தின் முழு முதற் பொருளல்லவா ?"

உள்ளே அருச்சகர், அர்ச்சனை செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். தனது உதவியாளரிடம், " அந்த அஞ்சு ரூபா உள்ள தட்டை முதல்லை எடு ". உதவியாளன், " இந்த ஐம்பது சதமுள்ள தட்டே முதல்லை வந்தது ". " அது கிடக்கட்டும். அந்த அஞ்சு ரூபா தட்டு, கறுவாக்காட்டுப் பென்ஸ்கார் ஐயான்டை. முதல்லை அதைப் பாப்பம் ".

ஆண்டவன் சந்நிதியில், ஐயர் காட்டிய " சோஷலிசத்தை "க் கண்டு இறைவனுக்குத் தலை சுற்றியது. பூலோகத்திலே " சமத்துவமே" இப்படித்தானே என்று எண்ணியவாறு ஒரு மூலையிலே அமர்ந்துவிட்டார். இறைவன். " இறைவன் வரம் கொடுத்தாலும் பூசாரிவரம் கொடான் " என்பது எங்களுக்குத் தெரிந்ததுதானே.

தமிழுக்குத்தலைவன். தமிழர்தம் காவலன். அவன் தான் முருகன். முருகனுக்கு அந்த ஆலயத்தில் அன்று கேட்ட தமிழை நினைத்தபோது உண்மையிற் சிந்தை குளிரவில்லை."செந்தமிழா இவ்வாறு சீரழிக்கின்றது ? " அந்த அளவுக்குத் தமிழிலே கலப்படம் செய்திருக்கிறார்கள் இன்றைய நகர்புறத் தமிழர். அத்தகைய மொழியை நம் ஆலயங்களிலே தெளிவாகக் கேட்கலாம்.

விநாயகர் பெருமானுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. " கணேசன் லவ்சின்லை நல்லா அக்ட் பண்ணுவான் " என்று யாரோ விமரிசனம் செய்வதைக் கேட்டு, நித்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமச்சாரியான தன்னைத்தான் சொல்கிறார்கள் என்று அவர் அர்த்தம் செய்துவிட்டார். தன் ஆலயத்திலே தன்னைத்தவிர வேறு யாரைச் சொல்ல முடியும் என்று அவர் எண்ணினார். அண்மையில் வந்த சினிமாப்பட விபரீதம் அது என்பது அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. அன்று சுந்தரரும், அநிந்திதை, கமலினையும் கைலாய மலையில் சந்தித்தனர். இன்று அதனை எடுத்துக்காட்டாகக் கொண்டு இளவட்டங்கள் சிலர் நம் ஆலயங்களிற் சந்திக்கின்றனர் என்பதையும் இறைவன் அவதானித்தான்.

ஆலயம் என்றால் ஆன்மா ஒடுங்குமிடம். கோயில் என்றால் தலைவன் வசிக்கு மிடம். தலைவனைக் காணும்போதுதான் ஆன்மா ஒடுங்கி, அவனிடம் பணிவு கொள்ளும். இதை விளக்குவதற்காகத்தான் நம் முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். ஆன்மா ஒடுங்கும்போது அமைதிதானே பிறக்கும். அந்த அமைதியிலேயே இறைவனைக் காண முடியும். ஆகவே ஆலயம் என்றாலே அமைதிக்குரிய இடம் என்றல்லவா பொருள். ஆனால் இன்று நம் ஆலயங்கள், முக்கியமாக நகர்புற ஆலயங்கள் கேளிக்கை நிலையங் களாகவும், பொழுதுபோக்குக் களரிகளாகவும் ( Recreation Clubs ) மாறிவரு கின்றன. இதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இதைமாற்றி ஆலயத்தை " ஆலயமாக " வைத்திருந்தால் என்ன?

நேரம் முன்னிரவு. இதோ பக்தகோடிகள் ஆலயத்தைவிட்டு நீங்கிக் கொண் டிருக்கின்றனர். தனித்துவிடப்பட்ட இறைவனுக்குத் தன் பக்தரொருவர் பாடிய பாடல் நினைவுக்கு வருகிறது.

" ஆசையறாய், பாசம்விடாயான சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகளோதாய்
மனமே யுனக்கென வாய். (சிவயோகசாரம்)

எல்லா மனிதர்களும் இப்படித்தானோ. சீ! அப்படி இராது. கோடிக் கணக்கான சிப்பிகளுள் ஒரு சிலவற்றில்தான் முத்து உண்டு. "பக்த கோடிகளுள்ளும்" ஒரு சில பக்தர்களே இருப்பார்கள். ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்டவர்போல். தம்மிருப்பிடத்தை நாடினர் ஆய்வுக்குழுவினர். இப்போது பாருங்கள் அச் சந்நிதி களில், " என்ன தெய்வீகம் பொங்கி வழிகிறது ".

**The Place to Look For**

* FLAVOURING ESSENCES AND COLOURING MATTER, CITRIC ACID AND TARTARIC ACID ETC.
* AMMONIUM CARBONATE, CALCIUM CHLORIDE INDUSTRIAL CHEMICALS ETC.
* CREAM OF TARTAR, BAKING POWDER, SACCHARIN AND CELATINE ETC.

**K. P. SUBBIAH & CO.,**

**109, PRINCE STREET,**

**COLOMBO - 1.1**

Phone : **23113**

With the Best Compliments of

"ANTON"

St. Anthony's Industries Group

***752/1, Baseline Road.***

***Colombo 9.***

T' Phone 92161-62


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டறிக்கை

## 1969 — 1970

இரத்மலானை இந்துக்கல்லூரியிற் பயின்றுவரும் இந்து மாணவர்களின் மன்றம் தொடர்ந்து அதன் பணிகளைச் சென்றவருடமும் நடாத்தி வந்துள்ளது. மாணவர்களின் சமய வளர்ச்சி கருதி ஒழுங்கு செய்யப்பட்ட தியான மண்டபத்தில் இக்கூட்டங்கள் முறைப்படி நடந்து வந்துள்ளன. கூட்டுப்பிரார்த்தனைகளும் பூசைகளும் முறைப்படி தவறுது நடாத்தி வந்துள்ளோம்.

மாணவர்களிடத்தில் சமயப்பற்றை வளர்க்க வேண்டுமென்ற முக்கிய குறிக்கோளைக்கொண்ட எமது மன்றம், அதற்கு ஆகவேண்டியவற்றைச் சிறந்தமுறையில் நடாத்தி வந்ததையிட்டுப் பெருமையடைகின்ருேம்.

கலைத்தெய்வமாக வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் [illegible] விழ எடுக்குமுகமாக நவராத்திரி விழாவினைச் சீரும் சிறப்புமாக சென்றவாண்டு கொண்டாட நினைத்து பெரியோர்களை வரவழைத்துச் சொற்பொழிகள் ஆற்றுவித்தோம். இவ்வாண்டும் பல பெரியார்களைக்கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றுவித்துள்ளோம். அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

குருபூசைகள் நடாத்தி அவற்றின் மூலம் சமயகுரவர்களின் ஞானத்தை மாணவர் மத்தியில் பரப்பிவந்துள்ளோம்.

வெ. ஸ்ரீ சண்முகநாதன்
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE MOST MODERN
SWISS TECHNIQUES, ADVICE
AND
EQUIPMENT
ENTRUST YOUR NEXT
WATCH AND CLOCK
REPAIRS TO

**The Cambridge Watch Co.,**

26 B - Kotahena Street,

**COLOMBO-13.**

இந்து மாணவர் மன்றத்துக்கு
எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!
வாழ்த்துக்கள் என்றதும்
**தீபாவளி** ஞாபகம் வருகிறதல்லவா?
**கலைமகள் தீபாவளி வாழ்த்து மடல்கள்**
எங்கும் விற்பனையாகின்றன.
வண்ண வண்ண மடல்களை வாங்குங்கள்
வாழ்த்துங்கள்!

**கலைமகள் கம்பெனி**

*124, செட்டியார் தெரு,*
*கொழும்பு-11*

தொலைபேசி: 25950

**இந்துமாணவன்**
**சிறப்புற்றோங்க**
**வாழ்த்துக்கள்**

**சிங்காரம்ஸ்**

**டைமா நகை மாளிகை**

*47, செட்டியார் தெரு, கொழும்பு-11*

தொலைபேசி: 20875

*With Compliments*

**Vashula Nylon Traders**
**&**
**KANCHI LOOMS**

252, Sea Street,

**COLOMBO - 11**

# தொன்மை வாய்ந்த சக்தி பாடு

சோ. யமுனைராஜன் க. பொ. த (உயர்தரம்)
(தலைவர், இந்து மாணவர் மன்றம்)

மனிதனை '' மனிதனாக '' வாழச் செய்வது சமயம். அழியும் உலகில் அழியாத் தன்மை அடைவது எங்ஙனமென வாழ வழிகாட்டுவது சமயம். சிறப்பாகச் சொன்னால் துன்பம் கலந்த உலக வாழ்வை, இன்ப மிகு வாழ்வாக ஆக்குவது சமயம். எனவே வாழ்க்கைக்குச் சமயம் வேண்டும். உலகில் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன. பல் வேறு தத்துவநெறிகள் உலாவுகின்றன. ஏன் ! பல்வேறு வாழ்க்கை முறைகளும் இருக்கின்றன. நமது சமய நெறிகள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி யவை. அறிவால், உணர்வால் குறைவுடையதாக இருக்கின்ற மனித சமுதாயத்தை நிறைவுடையதாக்கி வந்தது ! வருவது சமயம். சமய வாழ்க்கை ஒரு பரிபூரண வாழ்க்கையாகும். சமயம் நன்கு தெரிந்தவனுக்கும் சிந்தையிலே சிவம் மணக்கும். செய்கையிலே அருள் மணக்கும். மனிதனை மாணிக்கமாக்கும் சக்தி கடவுளுக்கும் மத நம்பிக்கைக்குமே உண்டு.

ஆனால் நாம் தவஞ் செய்து சிவமாக வேண்டியவர்கள், இன்று தவஞ்செய்து சிவமாகும் வழியில் அல்லவா சென்று கொண்டிருக்கிறோம். தவப் பொழுதையும் தவப் பொழுதாக்குவதுதான் நம் வாழ்க்கையின் குறிக்கோள். தவம் தான் நம்மைச் சிவமாக்குவது. தவத்தில் பலவகை உள. விரதம் அவற்றில் ஒன்று. இரைதேடி அலையும் நாம், இறைதேடும் நாட்களே விரத நாட்களாகும்.

விரத நாட்களில் வெகுவாகப் பிரசித்திபெற்று விளங்குவன நவராத்திரியும், சிவராத்திரியுமேயாகும். இவ்விரண்டும் எமக்கு எமது இரு கண்களும் எவ்வளவு முக்கியம் வாய்ந்தனவே அவ்வளவு முக்கியம் வாய்ந்தவை. ஆம் ! கண்களைக் கொண்டு பொய்ப் பொருட்களை எல்லாம் பார்க்கின்றோம். விரதம் ஆகிய இவ்விருகண்களையும் பொய்ப்பொருட்களை எல்லாம் பார்க்கிறோம். விரதம் ஆகிய இவ்விருகண்களையும் கொண்டு மெய்ப்பொருளை அல்லவா நோக்க முற்படுகிறோம்.

நம்மைப் படைத்து, காத்து, நம் பொருட்டே வினைத்துஞ் செய்தருளும் எல்லையற்ற கருணைக் கடலான இறைவனை உருப்பெற்ற பொருளாகவும், உருவற்ற அருளாகவும் ஏற்றுப் போற்றுதல் செய்கின்றோம். எல்லையில்லாப் பொருளுக்கு ஓர் எல்லைகாண்பது எங்ஙனம் இயலும் ? நமது ஐந்து புலன்களுக்கும் எட்டாது, ஆறுவது விறிவான பகுத்தறிவுக்கும் கிட்டாது. உள்ளத்தையும் கடந்து கடவுளாகி. பரந்து விரிந்து நிறைந்து நிற்கும் நிலையில் அம்மெய்ப்பொருளை உருவிலா ஒன்றாக—சக்தியாக ஏற்றுப் போற்றுதல் செய்கின்றோம்.

நாம் சக்தி எனக்கொண்டு போற்றும் அப்பொருள், ஏதோ ஒருவித சக்தியே யாகும். விளக்க முடியாத, விபரிக்க இயலாத, விசித்திரமான ஒன்றுதான் அனைத்துக்கும் காரணம்—மூலம். அதுவே அனைத்தும். இயங்கிக் கொண்டும் இருக்கும் அதனைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரிட்டு விழைப்பர். விந்த ஒன்றினைத் தான் அன்னையாக உருவகம் செய்து வழிபடுகிறான் தமிழன்— அம்மாதாவின் திருக்கரங்களில் ஜீவராசிகள் யாவும் குழந்தைகள். கருவறையில் தாங்கி, பின் இருக்கையில் ஏந்தி, தொட்டிலிலே இட்டு, கட்டிலிலே போட்டு, பாலூட்டிச், சீராட்டித் தலாட்டிப் படாத பாடு பட்டும், விடாது பாதுகாத்து வளர்த்தெடுப்பவள் எம்மைப் பெற்றெடுத்த அன்னை— அவளுடைய கருணைக்குத்தான் அளவேது? குழந்தைக்குத் தாயே தஞ்சம். கவலை என்பதையே அறியாது அது— தாய்க்கோ கவலையில்லாத நேரமேயில்லை.— எல்லாம் குழந்தையைப் பற்றிய கவலைதான்.

பெற்ற மனம் பித்து ; பிள்ளை மனம் கல்லு

என்றுரைப்பார்கள்.

தாய்க்கும் சேய்க்கும் உள்ள இவ்வுறவுதான், எமக்கும் அன்னை ஜகன்மாதாவுக்கும் இடையில் உள்ளதும். எண்ணிறந்த ஆன்மாக்களாகிய எம்மைத் தன் குழந்தைகள் போல் அரவணைத்திடுவாள். தன்னை வழிபடுவோர்களைத் துன்பம் என்னும் கொடுநோயிலிருந்து பாதுகாப்பாள். இனியது செய்வாள். என்றென்றும் எம்முடனிருந்திடுவாள். பேரின்பம் அளிப்பாள். இவ்வுயர்ந்த தத்துவத்தின் உட்பொருளாக விளங்குவதே நவராத்திரியாகும்.

இந்த நவராத்திரி தினத்திலே—அன்னை ஜகன் மாதாவுக்காக எடுக்கப்படுகின்ற பெருவிழாவிலே, நம்பண்டைய தமிழன் சக்தியை மூலடிவமாக்கி நவராத்திரியை ஆற்றலுக்கு மலை மகள் என்று முதல் மூன்று நாட்களுக்குமாக அருஞ்செல்வத்திற்கு அலைமகள் என்று அடுத்த மூன்று நாட்களுக்குமாக, அறிவித்த கலை மகள் என்று இறுதி மூன்று நாட்களுக்குமாக ஏற்படுத்தி போற்றி வழிபட்டான்.

குணங்களுக்கு உருவங்கொடுக்கும் பொழுது கன்மத்துக்கு (செயல்) நீல நிறமும் அன்புக்கு சிவப்பு நிறமும் தூய்மைக்கு வெள்ளை நிறமும் கொடுப்பது வழக்கம். சக்தி நீல வண்ணங் கொண்டவள். இதனால் இவளுக்கு நீலி என்ற பெயரும் உண்டு. இலட்சுமி செந்நிறத்தினள். அவள் வதியுமிடம் செந்தாமரை சரஸ்வதி வெண்மையே வடிவானவள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பவள் அல்லவா கலைமகள் ?

சக்தியென்றாலே அது துர்க்கையைத்தான் குறிக்கும். அவளை சக்தியுள்ளவள் என்று கூறுவதில்லை. அவளை சக்தி துர்க்கை என்றால் உலகம் என்று பொருள். அவள் தான் உலகம் அவளே யாவும் ! இயக்கமெல்லாம் அவளுடையவே எனவேதான் அவளுக்கு நீலநிறம். கொடுமையினைக் களைந்தெறிய, கோரவுருவெடுத்தாடும் அவள், அன்பே வடிவான அம்பிகையாகவும் இருக்கிறாள். அவள் வீற்றிருக்கும் சிம்மம், மிருகங்களுக்கெல்லாம் அரசன். அஞ்சாமை வீரம், பலம் என்பன அதற்கே அமைந்துவிட்ட அம்சங்கள் அவளை நெஞ்சில் தாங்குவோமாயின், நாமும் அஞ்சாமை, வீரம் பலம் யாவும் வாய்ந்த மனிதசிங்கங்களாகிவிடுவோம். அவள் அபயக் கரங்காட்டி விட்டால் பின்பு நமக்குப்பயமேது? நமது உள்ளம் அவளுக்கு உகந்த கோயிலாகட்டும்.

பெறுவதிற் அரியது, பேணிக்காத்தல் என்பர். காக்கும் தொழிலைச் செய்பவன் கண்ணன். அவ்வரிய காரியத்தை செய்வதற்கு பொருட் செல்வம் தேவைப்படும். ஆகவேதான் செல்வலட்சுமியாகிய பூமகளையே தன் நெஞ்சிற் கொண்டவனாயிருக்கிறான் அவன். இவ்வுலகத்தில் பொருட்செல்வத்துக்கு ஏற்பட்ட மதிப்பு '' பணம் பத்தும் செய்யும் '' '' பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் '' என்றெல்லாம் கூறக்

UNIVERSITY ... LIBRARY ... ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறோம். அல்லவா ? திருக்குறள் கூட பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்று தான் கூறுகிறது. செல்வம் படைத்துதிருந்துவிட்டால் போதாது இல்லாதவர்க்கு அதனை கொடுக்கவும் இதயம் வேண்டும். அன்புவேண்டும். செல்வமகளான திருமகள் அன்பே உருவெடுத்தவள். ஆகவேதான் அவளுக்கு செந்நிறம். அன்பு என்ற செந் நிறத்தைக் கொண்ட உள்ளம் என்றகமலத்திலே அமர்ந்தருள் செய்பவள் அவள். நாம் அன்டி செய்வோம். அவள் நம்மைத்தேடிவந்து அருள்செய்வாள்.

கலைத்தெய்வம் சரஸ்வதி, அவள் ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஏய வுணர்விக்கும் என்னம்மைஆவாள்—கலைமகளான அவள் நமக்கு அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தைத் தருபவள். படைக்கும் தெய்வமான நான்முகனுக்கு துணையாக நின்று உதவுபவள். வெண்மைதான் அவள் வடிவம். அறிவு என்றும் அவளைச் சொல்வ துண்டு. அறிவு என்பதும் அழுக்கற்ற தூய நிலைதானே ! எங்கெல்லாம் தூய்மைநிறைந் திருக்குமோ அங்கெல்லாம் நாமகள் உறைந்திருந்து அருள்புரிவாள். முக்கண்ணனின் நெற்றியிலே தூய வெண்ணீருக விளங்கு மிவள் செங்கமலக் கண்ணனின் திருக்கரங் களில் தவழும் சங்கின் வெண்மையாகவும் விளங்குகின்ருள். உழைத்துதவத் துடிக்கும் உதாரநெஞ்சும், நல்லதேசொல்லும் செந்நாவும், இன்பம் நல்கும் இன்னிசையும் இந் ஞானத்தாயின் ஆனந்த மனைகள்தான். விண்கண்ட தேய்வம் பலகோடி உண்டேனும் விளம்பில் உன்போற் கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே என்று குமர குருபரம் உள்ளம் உருகி வழிபடுவதற்கமைய யாமும் நாமகளின் நல்லருளை நாடி நிற்பின் அவள் என் நாவில் நலம்புரிவது உறுதி. நம்வாழ்வும் நற்கலைகளின் உறைவிட மாக ஒளிவிடுவதும் உறுதி.

வீரமும் செல்வமும். வியத்தருகல்வியும் எம் வாழ்வில் நிறைய மலைமகளாய், அலைமகளாய், கலைமகளாய் வெவ்வேறுவடிவந்தாங்கி நிற்கும் பேராரும் சக்தியை வழிபட்டு பெருவாழ்வை இவ் பேருலகில் பெறுவோமாக.

---


With the best Compliments

of

**NEPTUNE PHARMACY**

**RATMALANA**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

★

# A. S. Sangarappillai & Bro.

**No 6, Adamally Buildings,**

**PETTAH.**

T: No: 32221 — Grams: **Sangar Bros.**

*With Compliments from*

# HABIB TAIYAB & CO.

228, Main Street,
COLOMBO 11.

EXPORTES OF "PALM TREE" BRAND
COCONUT OIL AND CEYLON PRODUCT.

Sole Agents for

## Parakum Textile Printing Industry.

ELPITIYA.

Tel: 23658


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Compliments*

*of*

★

**N RMAL TRADING CO.,**

(PAFER MERCHANT)

12 & 14, PR NCE STREET,

PETAH - COLOMBO.

*P c:* 28346 & .22026

ASK ANY MAN AROUND

VASWANI TAILORING

NO

EXTRA CHARGES FOR

URGENT ORDERS SUIT, 8 HRS

& TROUSER IN 2 RS.

*Visit*

**VASWANI**

COLOMBO 6.

IN ELECTRICAL EQUIPMENT

WE BETTER

THE

BEST

# ROTAX LIMITED

113 NORRIS ROAD,

COLOMBO 11.

*T'phone :* 24875
29973

*G'ams :* "ROTAX"
Colombo.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When you are in JAFFNA
SHOP at

# The Jaffna Co-operative Stores Ltd.

*(Opposite Govt. General Hosp.)*

**JAFFNA**

*All your Requirements of:*

**Groceries, provisions, sundry goods, Frozen meat
Ice Cream, Vegetables, fruits, Textiles,
Motor spares, & accessories, Electrical goods,
bicycle tyres and tubes, batteries,
Radio & radio spares, Petrol &
Petroleum products etc.**

UNIVERSITY OF JAFFNA SRI LANKA

# CURE *by* HYPNOSIS

***by Hypnotic Suggestions — No Medicines — No Exercises***

* **Lack of confidence** — fear to face people - fear to sit for examina tion - fear of darkness etc. cured by Hypnotic suggestions.
* **Nervous complaints** — nervous tension - stagefright - blushing trembilng - palpitation - breathlessness - sinking feelings - chronic bladder upsets - chronic bowel disturbances etc. curred by Hypnotic suggestion.
* **Insomina** — Worry - mental depression - state of anxiety - migraine headaches - loss of taste or smell - high blood pressure -chronic asthma - phobias - manias - bedwetting - restlessness etc. cured by Hypnotic suggestions,
* **Various other problems cured by Hypnotic suggestions.**

CONSULTATION BY APPOINTMENT ONLY

Phone : **27356 & 23814**

# Prof : C. RAJASINGHAM

HYPNOTHERAPIST

**24, Deal Place "A"**

**COLPETTY - COLOMBO - 3.**

ARCHIVES

With best Compliments

from

# G. B. AMARIAS SILVA & SONS

**TRANSPORTER & ESTATE SUPPLIERS**

**NAMUNUKULA**

THE P. T. A. OF COLOMBO HINDU COLLEGE RATMALANA

*Thanks*

**CINEMAS LIMITED**

*For*

# Donating the Film for the

***BENEFIT SHOW***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
from

# HARAN JEWELLERS

JEWELLERS & DIAMOND MERCHANTS
GUARANTED FASHIONABLE JEWELLS.

50, KANNATHIDY,
JAFFNA.

T. PHONE 444 T. GRAMS RATNAMS

# MORRISONS PUMPS

for DomestiC and Agricultural
Duties

Sole Distributors
**K. N. Abdul Cader Rawther & Co. Ltd.**
312, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO 10.
Phone: 32956 & 32028

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

249992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையீர்,

இந்துக்களுக்கெனத் தனிக் கலாச்சாரம் ஒன்றுண்டு. இந்துச் சிறுவர்கள் அக்
கலாச்சாரத்துடனேயே கல்வி கற்றல் நலம்பலபயக்கும். மாறுபட்ட கலாச்சாரத்
துடனே கல்வி கற்பார்களேயானல் தமக்கும் பிறர்க்கும் பயன்படாது போவார்கள்
என்பது கருத்து. இதன் விளைவாக எழுந்தது இரத்மலானை இந்துக்கல்லூரி. இவ்விட
யத்தில் சைவப் பெரியார்கள் இரத்மலானையில் வானளவுயர்ந்த கல்லூரியைக் கட்டிய
தோடமையாது வேண்டிய, வேண்டியாங்குதவினர். அரசினர் இக்கல்லூரியைப் பொறு
பேற்கும் வரை தமது பணியைத் தொடர்ந்து செய்தனர். இக்கல்லூரியைக் கொழும்பு
மாநகரில் தலை சிறந்த கல்லூரியாக்கினர். இதை நாம் எப்படி மறப்பது. அவர்களின்
முயற்சியால் திறம்பட விளங்கும் இக்கல்லூரியில் சகல வசதிகளுடனும் இருந்து " இந்து
மாணவ "னை ஆண்டு தோறும் அழகாக வெளியிடுகின்ரேம். வருங்காலத்தில் " இந்து
மாணவன் " செவ்வனே வெளிவரப் பெரியோர்கள் உதவுவார்கள் என எதிர்பாக்
கின்ரேம்.

கல்லூரி ஆரம்ப காலமுதல் சமய விழாக்கள் தியான மண்டபத்தில் மிகவுஞ்
சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டன ; இதை வித்திட்டு முளைக்கச் செய்து
பேணிவளர்த்தவர்களில் முன்னின்று அயராது உழைத்தவர், எமதாசிரியராயிருந்தவரும்
தற்போது இலங்கைப் பல்கலைகழகத்தில் விரிவுரையாளராய் இருப்பவரும் ஆகிய சிவ
நெறித் தொண்டர், திரு. ஆ. கந்தையா எம். ஏ என்பதைச் சொல்லவேண்டியதில்லை.
இவரின் பணியைத் தொடர்ந்து செய்தவர் திரு. வ. ஆறுமுகம் பி. ஏ அவர்கள்.
இவர்களை இந்துமாணவர்மன்றம் நினைக்காமல் இருக்கமுடியாது.

1966 ஆம் ஆண்டுக்கு முன் கல்லூரிப் பணத்தில் சிறிய உருவில் வெளிவந்த
இந்துமாணவன், பெரியோர்கள் உதவிநிதியினல் உருவிலும் பொருட் செறிவிலும்
சிறந்ததாக வெளிவரத் தலைப்பட்டான் அன்று தொடக்கம் இந்துமாணவன் திருவாளர்
எஸ்: சிவதாசன். செல்வி. ப. நாகலிங்கம், திரு ரீ. சங்கரலிங்கம், திரு கே. கே. கிருஷ்
ணபிள்ளை, திருமதி எஸ். சிவரத்தினம் என்போராற் பேணிவளர்க்கப்பட்டுகின்றது
ஆசிரியர்களின் அயரா உழைப்பினலும் ஊக்கத்தாலும் பாதுகாக்கப்பட்டுவந்த
இந்து மாணவனைப் பேணிவளர்க்கும் பொறுப்பை மாணக்கர் தமதாக்கி ஆசிரியர்களுக்
விடுதலை அளித்து அவர்வழி நின்று ஒழுகுதல் போற்றற்குரியதாகும்.

இம்மலருக்கெனத் " தேவி சந்நிதியில் " என்ற சிறப்புக் கட்டுரையை அன்
புடன் உவந்தளித்த நாவலர்வழி நின்று அறிவுச்சுடர் பரப்பும் பண்டிதமணி சி. கண
பதிப்பிள்ளை அவர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றி. அத்துடன்
திரு. இ. பாலசுந்தரம் பி. ஏ (சிறப்பு) திரு. சி. பொன்னம்பலம் திரு. ஈழவேந்தன்
ஆகியோரும் எங்கட்கு இம்முறை கட்டுரைகள் ஈந்துள்ளார்கள் இவர்கட்கும்,
எமது இந்து மாணவமன்றத்தின் சாரபில், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்
தக்க சமயங்களில் தகுந்த புத்திகூறி எம்மை வழிநடாத்தும் ஆசிரியர்களின் சேவை மறப்
பதற்குரியதல்ல. இந்து மாணவனின் வளர்ச்சிக்கு உதவியாயிருப்பவர்கள் விளம்பரதாரர்
கள் அவர்களுக்கு நம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்ரேம். மலரைக் குறித்த
காலத்திற்குள் சிறப்புற அச்சிட்டுத் தந்த அல்பியன் அச்சகத்தினருக்கும் ; அட்டையை
அழகுற அச்சிட்டுத் தந்த, டைம்ஸ் நிறுவனத்தினருக்கும், உள்ளிருக்கும் சுப்பிரமணியர்
படத்தின் வர்ண பிளக்கினைத் தர்துதவிய விவேகானந்த அச்சக உரிமையாளர் திரு. வி.
கிருஸ்ணபிள்ளை ஜே. பி. அவர்கட்கும், மலர் பணம்பெற பல உதவிகள் செய்த டைம்ஸ்
நிறுவனத்தைச் சேர்ந்த திரு. வெற்றிவேலு அவர்கட்கும், " போட்கமிஷனை "
சேர்ந்த திரு. T. துரைசிங்கத்திற்கும், மற்றும் எல்லோருக்கும் எங்கள் நன்றிகள்.

பொறுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments*

*of*

**Commonwealth Gem & Jeweellary Co.**

69/2 CEYLINCO HOUSE

**COLOMBO 1.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**_With the best Compliments_**

**_of_**

★

MANNIAM STORES

75, PRINCE STREET,

COLOMBO - 11.



With the best Compliments

of

BERUWALA PHARMACY

*Dealers in*

**DRUGS, COSMETICS, GROCERIES**

**Etc.**

*Day & Night Service*

No. 124, Galle Road,
Beruwala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments from

# K. KANAGASINGAM

313, NEGOMBO ROAD,
WATTALA.

*With Best Compliments of*

## ASBESTOS CEMENT INDUSTRIES LTD.

Manufacturers of

## 'ELEPHANT'

ASBETOS CEMENT PRODUCTS.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

University of Jaffna
249992
Library

Printed at Albion Press Ltd., Maradana Colombo-10.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AGASTHIAR

*Inspiration*

*Light*

*Learning*

*and the Fine Arts*



Do
Mr. K. C. KULARATNAM

*For*

**THE GRAPHIC ARTS –**

**INK ON PAPER**

**THE COLOMBO CO-OPERATIVE PRINTERS' SOCIETY LTD.,**

No. 72, KEW ROAD, COLOMBO 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Cover and coloured picture inside printed by P. Don Nicholas at The Times of Ceylon, Ltd., Colombo
for the Hindu Students' Union of the Colombo Hindu College, Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org